# விநோத சரித்திரம்

பதிப்பாசிரியர்:

எம். இ. வீரபாகு பிள்ளை

★

ஒற்றுமை ஆபீஸ்

நெ. 8, வியாசராவ் தெரு

தியாகராயநகர்

மதருஸ்

1941 [அணா 12

# முகவுரை

ஒற்றுமைப் பத்திரிகையின் ஆசிரியர் திரு. வீரபாகுப் பிள்ளையவர்கள், விநோத சரித்திரம் என்னும் நூலின் பழைய பிரதி யொன்றை என்பாற் றந்து, அந்த நூலைப் பார்வையிட வேண்டு மெனக் கேட்டுக் கொண்டார்கள். யான் மேற்படி நூல் முழுவதையும் படித்துப் பார்த்தேன். நல்ல சொற்சுவை பொருட்சுவை செறிந்த இலக்கியமாக விருந்தது. ஆக்கியோர் வெளியிட்டோர் முதலியோர் பெயர்கள் அந்நூலால் அறியமுடியவில்லை. இவ்வுயரிய நூல் விலைக்குக் கிடைக்குமோவெனப் பலரிடத்துங்கேட்டும் விபரமொன்றுந் தெரிந்திலது.

இந்நூலில் அநேக அரும் பதங்கள் நிறைந்திருப்பதையும், மனதைக் கவரும் கதையாக விருப்பதையும் பார்த்து இந்நூல், மாணவர்கள் கதை மூலம் இலக்கியப் பயிற்சிபெறச் சிறந்த கருவியாகு மென்று முடிவு செய்தேன். அரும் பதங்கள் ஏராளமாக வுள்ளவற்றில் முக்கியமானவைகட்கு அரும் பத வுரையு மெழுதி, இந்நூலை வெளியிடின் மாணவர்களும், மற்றோரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பரெனத் தெரிவித்தேன். தற்சமயம் உள்ள பொருளாதார நெருக்கடியையும் நோக்காது பிள்ளை

யவர்கள், பொருட் செலவு செய்து இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

அனைவரும் இவ்வரிய நூலை ஆதரித்து, இத்தகைய நூல்கள் பலவற்றைப் பிள்ளையவர்கள் இன்னும் வெளியிடும்படி ஊக்கம் அளிப்பார்களென நம்புகிறேன். நூலின் இறுதியிற் சில பக்கங்கள் மறைந்து போனதாகத் தெரிகிறது. இந்நூலின் பிரதி யாரிடமேனும் இருந்து உபகரிப்பார்களாயின், அடுத்த பதிப்பிலேனும் முழுவதும் வெளியிடலாம்.

திருவாசகபாடசாலை
பலவான்குடி } சு. அ. இராமசாமி.

---

# விநோத சரித்திரம்

## அரும்பதவுரை

(பக்கம் 1) ஊன்றி - ஆழ்ந்து. அறுசுவை - 1-கைப்பு, 2-தித்திப்பு, 3-புளிப்பு, 4-துவர்ப்பு, 5-கார்ப்பு, 6-உவர்ப்பு. அவம் - வீண். உட்பகை யாறு - 1-காமம், 2-குரோதம், 3-உலோபம், 4-மோகம், 5-மதம், 6-மாற்சரியம். கதிர் - பிரகாசம். பரிதி - சூரியன். வேலை - சமுத்திரம். கூலம் - கரை. வரைவு - எழுதல். மாலை - வரிசை. துரைத்தன சாலை - அரசாங்கம் நடத்தும் இடம். நிரை - வரிசை.

(பக்கம் 2) ஆயம் - சுங்கம். நால்வகை அரண்: 1-நீரரண், 2-நிலவரண், 3-காட்டரண், 4-மலையரண். விந்தை - ஆச்சரியம். வாம் - தாவுகிற. பரி - குதிரை. அம்சம் - கூறு. கணித்தல் - மதித்தல். அரிவையர் - பெண்கள். இவர்தல் - ஏறுதல். பூரித்தல் - பெருத்தல். பங்கம் - பழுது. விற்பன நூல் - அறிவை விளக்கும் நூல். சந்தாபம் - துன்பம். நாவாய் - மரக்கலம். அசுவம் - குதிரை.

(பக்கம் 3) அகழ்ந்து - தோண்டி. அசுமாற்றம் - குறிப்பு. முக்குணம். 1-சத்துவம், 2-இராசதம், 3-தாமதம். கிஞ்சித்து - சிறிது. புணர்ச்சி - நட்பு. கிழமை - உரிமை. முகமன் - உபசார வார்த்தை. தீர்வு - தீர்த்தல். உள்ளார் - நினையார். உறூஉம் - வரும். வெம் - கொடிய. விழுமியோர் - மேலோர்.

(பக்கம் 4) கேண்மை - நட்பு. ஆர்வம் - விருப்பம். மௌட்டீகம் - அறியாமை. அவா - ஆசை. அருகர் - உரியவர். மாறு - விரோதம். நாட்டம் - நோக்கம். உசாவுதல் - கேட்டல்.

(பக்கம் 5) சால - மிகவும். பெருந்தகைமைத்து - பெருந்தன்மையையுடையது. கயல் - மீன். நரை - வெண்மை. திரை - மடிப்பு. தண்டு - தடி. சிரம் - தலை. பாகை - தலைப்பாகை. சாகரம் - கடல். இலக்கு - குறி.

(பக்கம் 6) வாளா - வீணாக. கயவர் - மூடர். பார்ப்பு - குஞ்சு. புகட்ட - போதிக்க. உழலும் - திரியும். வறிது - வீண். வரையறுத்தல் - எல்லை செய்தல். மழுங்கி - கெட்டு. அரிய துன்பம் - அதிகத் துன்பம்.

(பக்கம் 7) கரும்பொன் - இரும்பு. கசடு - குற்றம். மதியூகி - புத்திசாலி. வஸ்து உணர்ச்சி - பொருள் ஞானம். மாசு - அழுக்கு. குழவி - குழந்தை. மழலைச் சொல் - நிரம்பா மென்சொல். விமலம் - பரிசுத்தம். கருவி - சாதனம்.

(பக்கம் 8) விழலன் - வீணன். விவேகம் - அறிவு. அகம் - மனம். உந்த - செலுத்த. ஏறிட்டுப் பார்த்தல் - எதிர்த்துப் பார்த்தல். பாராவாரம் - கடல்.

(பக்கம் 9) அகதி - யாருமற்றவன். மகிபதி - பிரபு. அகம் - வீடு. வேதிகை - திண்ணை. சரிதை - சரித்திரம். பன்னியுரைத்தால் - விரித்துரைத்தல். புருஷார்த்தத்தை - புருஷர்களால் விரும்பப்படுவதை. விளைக்கும் - கொடுக்கும். வியாகூலம் துன்பம். சித்தம் - மனம். ஆர்கலி - கடல்.

(பக்கம் 10) மிருத்து - மரணம். முதுக்குறைவு - பேரறிவு. கைம்மாறு - பிரதியுபகாரம். உகவாமல் - விரும்பாமல். புல்லியன் - அற்பன். சதாசாரம் - நல்ல ஆசாரம். பழம் புண்ணாளி - நாட்பட்ட நோயாளி. பாதி பரிகாரி - அரை வைத்தியன், இடையூறு - காரிய விக்கினம். பரிகரித்தல் - நீக்குதல். விநயம் - வணக்கம். ஏக புத்ரன் - ஒரே பிள்ளை. பருவம் - வயது. கைப்பு - கசப்பு. உல்லங்கனம் - பரிகாசம்.

(பக்கம் 11) வித்தியார்த்தி - கல்வியில் விருப்பமுடையவன். மரித்தல் - இறத்தல். விசேஷ ரூபவதி, - அதிக அழகை யுடைய யுடையவள். பாரி - மனைவி. புறக்கணித்தல் - அசட்டை செய்தல். சான்றோன் - பெரியோன். மணியம் - வேலை. வர்த்தித்து - விருத்தியடைந்து. பரஸ்திரி - அன்னிய பெண். காந்தன் - புருடன்.

(பக்கம் 12) துர்ஜனன் - கெட்டவன். சுன்னம் - பூச்சியம். உடுப்பு - ஆடை. ஜீவியகாலம் - வாழ்நாள்.

(பக்கம் 13) செறிந்து - பொருந்தி. மடுத்து - அடைந்து. வாகடம் - வைத்தியம். பிதற்றுதல் - உளறுதல்.

(பக்கம் 14) குற்றேவல் - சிறிய வேலை. ஊதியம் - வருவாய். உற்றான் அளவு - நோயாளியின் அளவு. கற்றான் - வைத்தியன். சத்திர வைத்தியன் - இரண வைத்தியன். சமன் - எமன். பாமரன் - அறிவில்லாதவன். வியவகாரம் - வழக்கு. பிராயச்சித்தம் - தண்டனை. சம்பிரதாயம் - வழக்கம். பிரமகத்தி - பார்ப்பனக் கொலை. கிருதம் - நெய்.

(பக்கம் 15) கனகம் - பொன். வடம் - மாலை. முண்டித்தல் - மொட்டையடித்தல். கரம் - கை. பாதகுறடு - மிதியடி. கமலம் - தாமரை. சேதா - சிவப்புப் பசு. பூஜ்யன் - பூஜிக்கப்படத்தக்கவன்.

(பக்கம் 16) கடுக - விரைவாக. யாக்கை - சரீரம். துருத்தி - பை. மீகாமன் - கப்பலோட்டி. அஞ்சனம் - மை. முப்பு - அகத்தியர் வைத்திய நூல்.

(பக்கம் 17) காசினி - பூமி. வேதித்தல் - புடம்போட்டுச் சுடுதல். காயம் - சரீரம். பசப்பு வசனம் - ஏமாற்று வார்த்தை. மோகன பாணம் - மயக்கும் வார்த்தை. பிரமை - மயக்கம். சோடச உபசாரம் - பதினாறுவகை யுபசாரம். சிஸ்ருஷை - பணிவிடை.

(பக்கம் 18) கமர் - நில வெடிப்பு. விழல் - ஒருவகைப் புல். மூசை - மண்குகை. நாங்கூழ்ப் பூச்சி - ஒருவிதப் பூச்சி. துழாவுதல் - கிண்டுதல்.

(பக்கம் 19) ஏலாது - முடியாது. சவுகாரி - வியாபாரி. சாமி - பொன்.

(பக்கம் 20) திக்பிரமை - சிதறிய மயக்கம். தாரகன் - தாங்குகிறவன். தொன்மை - பழமை.

(பக்கம் 21) பன்னுமல் - சொல்லாமல். புந்தி - புத்தி. சிதம்பரம் - ஒன்றுமின்மை. பிராப்தி - அடைவு.

(பக்கம் 22) மருங்கு - பக்கம். பாதவம் - மரம். களங்கம் — குற்றம்.

(பக்கம் 23) தாஷ்டீகம் - தைரியம். பூஷணம் - ஆபரணம். வியாகரணம் - கிரந்த இலக்கணம். இரசாயனம் - இரசவாதம். ஆதரவே - ஆதரவு. நிபுணர்- சமர்த்தர்.

(பக்கம் 24) பட்டோலை - காரியக் குறிப்பெழுதுமோலை. அனையர் - ஒத்தவர். என்வயின் - என் இடம். நால்வகை யோனி: 1-பை, 2-முட்டை, 3-நிலம், 4-வியர்வை. எழுவகைத் தோற்றம். 1-தேவர், 2-மக்கள், 3-விலங்கு, 4-புள், 5-நீர் வாழ்வன, 6-ஊர் வன, 7-தாவரம். குறள் - குள்ளம்.

(பக்கம் 25) பாலாரிஷ்டம் - பாலிய கெடுதிகள். சங்க்ராமம் — போர். உதரம் - வயிறு. அந்தக்கரணம்: 1-மனம், 2-புத்தி, 3-சித்தம், 4-அகங்காரம். இன்னினி - இப்பொழுது.

(பக்கம் 26) ஐம்புலன்கள்: 1-மெய், 2-வாய், 3-கண், 4-மூக்கு, 5-செவி. அசுவம் - குதிரை. சாரதி - செலுத்துகிறவன். ஆரியம் - சமஸ்க்ருதம். மர்த்தியம் - பூமி. பவித்திரம் - பரிசுத்தம். பஞ்ச பூதங்கள்: 1-பிருதிவி, 2-அப்பு, 3-தேயு, 4-வாயு, 5-ஆகாசம். அடிசில் - உணவு. கதவம் - கதவு. கம்பலம் - கம்பளி. பலவான் இயைந்த மொழி - பலசினைப் பொருள்கள் ஒன்று சேர்ந்து ஒரு முதற்பொருளைத் தெரிவிக்கும் சொல்.

(பக்கம் 27) சுகத ஜாதி - சொந்தச் சாதி. விஜாதி - வேறு பட்ட சாதி. சரம் - அசைவது. அசரம் - அசையாதது. பகுத் தறிதல் - பிரித்தறிதல். தனையன் - மகன். லப்த ஞானம் — கிடைத்த அறிவு. எழு தாதுக்கள்: 1-இரதம், 2-இரத்தம், 3-சுக்கிலம், 4-மூளை, 5-தசை, 6-எலும்பு, 7-தோல். சேடம் - மீதி. இதாகிதம் - நன்மை தீமை. விஷய வாசனை - காம வாசனை.

(பக்கம் 28) விபாகித்தல் - பங்கிடுதல். சாக்காடு - இறப்பு. நைஷ்டிகன் - மிகுந்த நியமமுடையவன். பயக்கும் - கொடுக்கும்.

(பக்கம் 29) வீடு - மோட்சம். புறங்கடை - தலைவாயில். நல்லிசை - நல்ல கீர்த்தி. கவல் - துன்பம். உற்றுழி - வந்த விடத்து. கைகொடுக்கும் - உதவும். வழாது - தவறாது. துவ் வாதவர் - கைவிடப்பட்டவர்.

(பக்கம் 30) நிறுப்பவன் - நிறுத்துகிறவன். வெருவந்தசெய்தல் - பிறருக்கு அச்சமுண்டாகுங் காரியங்களைச் செய்தல். கண்ணோடல் - அருள் சுரத்தல். ஒற்றர் - தூதர். மடி - சோம்பல். ஒன்றி - பொருந்தி. உஞற்றி - செய்து. முனியினும் - கோபிக்கினும்.

(பக்கம் 31) அரண் - காவல். பீடம் - ஆசனம். ஒன்னலர் - பகைவர். மித்திரர்கள் - நேயர்கள். குளிகை - மாத்திரை. மிடி - வறுமை. மாதங்கம் - யானை. கேசரி - சிங்கம். வரைவின் மகளிர் - பொதுப் பெண்கள்.

(பக்கம் 32) ஆன்ற - உயர்ந்த. அணி - ஆபரணம். நவை - குற்றம். உன்னுதல் - நினைத்தல். கயமை - கீழ்மை. ஒருவி - நீங்கி. துவ்வா - அனுபவித்து. முட்டு - குற்றம். பட்டினம் பெற்ற கலம் - தூரதேசம்போய்த் திரும்பிப் பட்டினஞ் சேர்ந்த கப்பல்.

(பக்கம் 33) ஊழ் - விதி. சீலன் - ஒழுக்கமுடையவன். சூசனம் - அறிவிப்பு. களன் - கொள்ளுமிடம். புன்னெறி - தாழ்ந்த நெறி. காத்திரம் - சரீரம்.

(பக்கம் 34) பட்டிமாடு - அடங்காமல் திரியும் மாடு. வதுவை - கலியாணம். திரிசிரபுரம் - திரிச்சிராப்பள்ளி. வனப்பு - அழகு. பூச்சியம் - இல்லை. பாங்கு - தன்மை.

(பக்கம் 35) நிவேதனம் - சம்பளம். காதலன் - மகன். கருவுயிர்த்தல் - பிரசவித்தல். சேயிழை - பெண். பூவை - பெண். ஆருமற்றது - பந்துக்களற்றது. தாரம் - மனைவி.

(பக்கம் 36) கிரக கிருத்தியம் - வீட்டு வேலை. வரையறை - அளவு.

(பக்கம் 37) பூட்டி - அணிந்து. கடுகி - விரைந்து. தாள் - முயற்சி. கான்முளை - பிள்ளை. பிணங்கி - ஊடி.

(பக்கம் 38) பக்கல் - பக்கம். நாவாய் - மரக்கலம்.

(பக்கம் 39) இன்னல் - துன்பம்.

(பக்கம் 40) நாட்டியம் - நடனம்.

(பக்கம் 41) அந்தகாரம் - இருள். கவளீகரிக்க - விழுங்க. முகிற்குலம் - மேகக்கூட்டம். விதானம் - மேற்கட்டி. கபாடம் - கதவு. அரவம் - சப்தம். அவகாலம் - கெட்டகாலம்.

(பக்கம் 42) பிரமை - மயக்கம்.

(பக்கம் 43) விசை - வேகம்.

(பக்கம் 44) மதலை - குழந்தை. மோழை - மூடன். கொண்டல் - மேகம். குழு - கூட்டம். வான்மீன் - நட்சத்திரம்.

(பக்கம் 45) கூம்புதல் - வாடுதல், குவிதல். பாரி - மனைவி. பார் - பூமி. பாழ்த்த - வீணான.

(பக்கம் 46) அதிர்ந்து - குலுங்கி. அசகாயம் - சொற்ப காயம். உகிர் - நகம்.

(பக்கம் 47) இருதலைக்கொள்ளி எறும்பு - இரண்டு பக்கத்திலும் நெருப்புப்பிடித்த கட்டைக்குள்ளிருக்கும் எறும்பு. ஊர்ஜிதப் படுத்தல் - உறுதிசெய்தல். ஊசலாடி - வருந்தி. வல்லெரி - மிகுந்த நெருப்பு. விபாகித்தல் - பங்கிடுதல். சுபத்தினி - நல்ல மனைவி.

(பக்கம் 49) இல்லாள் - மனைவி. கள்ளம் - திருட்டுத்தனம்.

(பக்கம் 50) கடுகி - விரைந்து. ஊதியம் - வருவாய். உளவு - துப்பு. நவீனன் - புதியன். சகடக்கால் - வண்டிச்சக்கரம்.

(பக்கம் 51) எறிட்டுப்பார்த்து - திரும்பிப்பார்த்து. குதுகலித்து - சந்தோஷித்து.

(பக்கம் 52) வெவ்வினை - கொடிய தொழில். உருத்து - கோபித்து.

(பக்கம் 53) சாமகிரியை - மரணச்சடங்கு.

(பக்கம் 55) 'சிநேகிதத்தினிடத்திலே இரகசியத்தை வைத்திருந்து தீய காரியஞ் செய்தனையே' திரிகரண சுத்தி - மனம் வாக்குக் காயங்களின் பரிசுத்தம். அங்கம் - சரீரம். கோகிலம் - குயில்.

(பக்கம் 56) பாரி - மனைவி. வியோகம் - பிரிதல். விழலன் - வீணன். தகிக்கும் - சுடும். சன்மானம் - மரியாதை.

(பக்கம் 57) மத்தம் - அறியாமை. இன்னல் - துன்பம். பந்தம் - தொடர்பு. நிருபம் - கடிதம். தகைமை - குணம்.

(பக்கம் 58) கரலிகிதம் - கையெழுத்து. திரை - கடல்.

(பக்கம் 59) கொண்டல் - மேகம். அண்டமுகடு - அண்டத்தின் உச்சி. கண்டகர் - தீயோர். விண்டு விண்டு - விட்டு விட்டு. மருட்சி - மயக்கம்.

(பக்கம் 60) சக்கராகிருதி - வட்ட வடிவு. கமலநாயகன் - சூரியன். தாராகணம் - நட்சத்திரக்கூட்டம். விதானம் - மேற்பரப்பு. ஆகாய கமனவாசிகள் - ஆகாயத்திற் சஞ்சரிப்போர். கலம் - மரக்கலம். கவை - கிளை. உலம் - திரண்ட கல். கண்ணகன்ற - இடமகன்ற. பட்டயம் - கத்தி. பரிசை - கேடயம்.

(பக்கம் 61) நெருநல் - நேற்று. வங்கம் - மரக்கலம். அகம் - வீடு.

(பக்கம் 62) குணாகரம் - நற்குணக்கடல். செங்கமலமின் - இலட்சுமி.

(பக்கம் 63) கிரக சித்திரம் - சமுசாரத்தின் மர்மம். கூட்டோடு விட்டது - சரீரத்தோடு போய்விட்டது. மிடி - வறுமை. முண்டித்தல் - மொட்டையடித்தல்.

(பக்கம் 64) விசதம் - தெளிவு.

(பக்கம் 65) 1. நுதல்-நெற்றியில். கண்-கண்ணினையுடைய. பெரும் - பெரிய. கடவுள்உம் - சிவபெருமானும். கழகம் ஓடு அமர்ந்து - சங்கத்தோடு பொருந்தியிருந்து. பண்உற - சிறப்புப் பொருந்த. தெரிந்து - அறிந்து. ஆய்ந்த - ஆராய்ச்சிசெய்த. இ பசுந்தமிழ் - இந்தப் பசிய செந்தமிழானது. மண் இடை - உலகத்தில் வழங்கும். ஏனை - வேறு. சில - சிலவாகிய. இலக்கணம் வரம்பு - இலக்கண எல்லையானது. இலா மொழிபோல் - இல்லாத பாஷைகளைப்போல. எண் இடைபட - எண்ணப்படும் கணக்கோடு சேர. கிடப்பதா - கிடக்கிறதாக. எண்ணவும் - நினைக்கவும். படுமோ - கூடுமோ? (கூடாது என்றவாறு.)

2. கடு - விடம் (தங்கி), கவின்பெறு - அழகுபெற்ற, கண்டனும் - கண்டத்தையுடைய சிவபெருமானும், ஆடலின் இளைப்பு - கூத்தாடுதலால் உண்டாகும் சோர்வு, ஆரம் - சந்தனப் பொதியமலையின், மென்கால் - மிருதுவான தென்றற்காற்று, திருமுகத்திடை வீசி - அழகிய முகத்தினிடத்திலே படிந்து, விடுக்க உம் - நீங்கவும், தமிழ் - தமிழ் மொழியின் சுவையை, செவி - காதுகளிடத்திலே, மடுக்கவும் மாந்தவும் அன்றோ - கேட்கவும் அநுபவித்தலுக்கும் அல்லவோ ? தென்றிசை நோக்கி - தெற்குத் திசையைப் பார்த்து, அடுக்க - நெருங்க, வந்து வந்து - சேர்ந்து சேர்ந்து, ஆடுவான் - திருநடனஞ் செய்கின்றான்.

3. தொண்டர் - அடியவராகிய (சுந்தரமூர்த்திச் சுவாமிகள்) நாதனை - தலைவனாகிய சிவபெருமானை, தூதிடை விடுத்ததும் - தூதுபோகும் வேலையில் ஏவினதும், முதலை உண்ட பாலனை அழைத்ததும் - முதலையால் உண்ணப்பட்ட சிறுவனை மீட்டதும், எலும்பு - எலும்பினை, பெண்ணுருவாக் கண்டதும் - (திருஞான சம்பந்த சுவாமிகள்) பெண் வடிவமாகச் செய்ததும், மறைக் கதவினைத் திறந்ததும் - (திருநாவுக்கரசு சுவாமிகள்) திருமறைக் காட்டிலே வேதங்களால் சாத்தப்பட்ட கபாடத்தைத் திறந்ததும், கன்னி - அழியாத, தண்டமிழ்சொலோ - குளிர்ந்த தமிழ் மொழியின் சொற்களோ? மறுபுலச் சொற்களோ - வேறு மொழிகள் வழங்கும் நாட்டுச் சொற்களோ, சாற்றீர் - சொல்வீர்களாக.!

போதம் - வீட்டு நிலத்திற் சேர்ப்பிக்கும், மெய்ஞ்ஞான நலம் - உண்மை ஞானத்தின் நன்மையை, பெறற்பொருட்டு - பெறுவதற்காக, ஆதியில் - முதலில், தமிழ் நூல் - தமிழ் நூலை, அகத்தியர்க்குணர்த்திய - அகத்திய முனிவனுக்கு அருளிச்செய்த, மாதொரு பாகனை - உமாதேவியை ஒரு பாகத்திலே கொண்ட சிவபிரானை, வழுத்துதும் - வாழ்த்துகிறோம்.

கொல்லேற்றுப் பாகர் - கொலை செய்கின்ற இடபத்தில் ஏறும் சிவபிரான், வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி - சமஸ்க்ருதத்தைப் பாணினி முனிவருக்கு அருளிச்செய்து, அதற்கு இணையா - அந்தச் சமஸ்க்ருதத்திற்குச் சரியாக, தொடர்புடைய - சம்பந்தமுடைய, தென்மொழியை - தமிழை, குடமுனிக்கு - கும்பத்திற் பிறந்தவரான அகத்தியருக்கு, உலகம் எலாம் தொழுது ஏத்த - உலகம் முழுவதும் தொழுது வணங்க, வற்புறுத்தார் எனில் - உறுதிப்படுத்திக் கூறினார் என்றால், இதன் பெருமை - இத்தமிழ்

மொழியின் பெருமையை, கடல் வரைப்பில் - கடலை எல்லையாகக் கொண்ட இந்த வுலகத்தில், யாவர் கணித்து அறிவார் - எவர் அளவுசெய்து அறிவார்கள்? (யாரும் அறியமாட்டார்கள் என்ற படி)

இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர் - தென்மொழி வடமொழி என்னும் இரண்டு மொழிகட்கும் நெற்றிக்கண்ணை யுடைய சிவபெருமானே முதலாசிரியர், இயல்வாய்ப்ப - இலக்க ணம் பொருந்த, இரு மொழியும் - இரண்டு மொழிகளையும், வழிப் படுத்தார் - ஒழுங்குசெய்தார், முனிவேந்தர் - அகத்தியர், இசை பரப்பும் இருமொழியும் - கீர்த்தியை விரிக்கின்ற இரண்டு பாடை களையும், ஆன்றவரே தழீஇயினார் என்றால் - அறிவின் மிக்கப் பெரி யோர்களே பொருந்தக் கொண்டார்களெனின், இரு மொழியும் நிகர் என்னும் இதற்கு - தென்மொழியும் வடமொழியும் சரிசமம் என்னும் இந்தக் கொள்கைக்கு, ஐயமுளதேயோ - சந்தேகமும் இருக்கின்றதோ? (இல்லை யென்றபடி.)

(பக்கம் 66) சான்று - சாட்சி, பஞ்சகாவியம்; 1-சிந்தாமணி, 2-சிலப்பதிகாரம், 3-மணிமேகலை, 4-வளையாபதி, 5-குண்டலகேசி. குறள் - திருக்குறள், நாலடி - நாலடியார். சுதேசி - சொந்தத் தேசவாசி. க்ஷீணித்தல் - கெடுதல்.

(பக்கம் 67) நவின்று - படித்து. நானா சுகோதயம் - பற்பல சுகத்தோற்றம். ஓம்பி - பாதுகாத்து. பரிபாலியாமல் - காப் பாற்றாமல், 'நல்லவர்களிடத்திலுண்டான வறுமையைப் பார்க்கி னும் தீயவர்களிடத்தில் உளவாஞ் செல்வம் துன்பம் தரும்', 'பிறர்க்கு உபகாரம் செய்வதால் வரும் கெடுதியென்றால் அதை ஒருவன் தன்னை விற்றாவது அடையத்தக்கது'.

(பக்கம் 68) பாங்கு - பக்குவம். தார்க்கீக தந்திரம் - தர்க்க யுக்தி. க்ஷமை - பொறுமை. கூத்தி மருவல் - வைப்பாட்டியைச் சேர்தல்.

(பக்கம் 69) அயலொன்றில்லை - வேறொன்றில்லை. 'சரசு வதியின் வாழ்க்கை முகத்திடத்திலிருந்தாலும் பிரமதேவன் செந் தமிழ்வாணர்கட்குச் சிறிதும் சமமாகமாட்டான். பிரமதேவன் படைக்கும் வெறுஞ் சரீரம் அழிவதைப்போலக் கவிவாணர்கள் செய்யும் பாட்டாகிய சரீரம் அழியாது.' வழாது - தவறாது. இழிதகைமை - தாழ்ந்த குணம். "எழுத்திலக்கணத்தை யறித லால் அறிவு நிரம்பும். அறிவு நிரம்பினால் மொழித் திறத்திலுள்ள

குற்றங்களையெல்லாம் நீக்குவான். மொழித் திறத்தின் குற்றங்களை விலக்கிய அறிஞன், இறைவனருளிய ஞான நூல்களின் பொருளைத் தெரிந்து வினைகளாகிய பாசத்தை நீங்க வீடுபேற்றை யடைவான்." "எழுத்திலக்கணத்தை யறிந்த அறிஞர்களால் ஆராய்ச்சி செய்யப்படும் சிவபிரானது விளங்குகின்ற சடையைக் கண்டவளவில் கங்கையின் பெருக்கம் கெடும். அதைப்போல இலக்கண ஞானமில்லாதவர்களுடைய கல்விப் பெருமைகளெல்லாம், இலக்கண ஞானமுடைய அறிஞர்களைக் கண்டால் இல்லையாக முடியும்."

(பக்கம் 70) போதரும் - வந்துசேரும். "சம்சாரக் கடல் துக்கம் நிறைந்தது. பல துன்பங்கட்கும் பாத்திரமானதாம்." இடும்பை - துன்பம்.

(பக்கம் 71) கர்சரணாதி - கைகால் முதலியவை. இம்மை - இப்பிறப்பு. இரும் சிறை - பெரிய சிறை. துவக்கு - சரீரம். குதலைச் சொல் - நிரம்பாத இளஞ் சொல். கலுழ்ந்து - அழுது. 'தன்னை வந்தடைந்த பிள்ளைகளைப் பார்த்ததும் உள்ளமானது நெருப்பிலிட்ட மெழுகைப்போலுடைந்தது. நீண்ட கண்கள் ஊற்றுப்போல் நீரைச் சொரிந்தன. தங்கள் மக்கள் மேலுளவாம் பிரியத்தைத் தொடருகிற மும்மலத்தையுங் கெடுத்துக் கொடிய பிறவிக்கடலைப் போக்கிக் கடந்தவர்களும் கடப்பார்களோ?' (கடக்க மாட்டார்கள் என்றபடி).

(பக்கம் 72) அநர்த்தம் - விபரீதம். அர்த்தம் - பொருள். பொன்றின - இறந்த. பௌதிக ரசாயன சாஸ்திரம் - பூதங்களைச் சேர்ந்த ரசவர்க்க நூல். 'இரசம், உருவம், பரிசம், சப்தம், வாசனை என்னும் ஐந்தினது கூறுபாட்டைத் தெரிகின்றவனது இடத்ததாம் இந்த உலகம்.'

(பக்கம் 73) அசலம் - மலை. உத்கிருஷ்டம் - சிரேஷ்டம். குறி - பெயர். சலித்தவன் - வருந்தினவன். குணக்கு - கிழக்கு. மொய் - நெருங்கிய. விதிர்த்து - வீசி. சீக்கும் - கெடுக்கும். சில்லுரை - சில வார்த்தை. இருமை - இம்மை மறுமை. சுதினம் - நல்ல நாள்.

(பக்கம் 74) பவனம் - வீடு. உறையுள் - இருப்பிடம். பவித்திரம் - பரிசுத்தம். நிவாரணம் - நிவர்த்தி.

(பக்கம் 75) விற்பனர் - அறிவுடையவர். காயம் - சரீரம். வியர்த்தம் - வீண்.

(பக்கம் 76) 'மங்கல நாணை யிழந்த கற்புடைய பெண்களும், மெய், வாய், கண், மூக்குச், செவி யென்னும் பஞ்சேந்திரியப் பொய்ம் மையைக் கண்டவர்களும், கொலைப்போரில் வலிமை மிக்க வீரர் களும், வலி மிகுந்த நமன் தும்பை மாலை சூடிப் போர்க்கு வரினும் பயப்படமாட்டார்கள்'. விமரிசை - சிறப்பு. கலம் - கப்பல்.

(பக்கம் 79) 'தங்களால் முடியுங் காரியத்தைச் சிதறச் செய்ப வர்களது நட்பினை அவர்களிடம் கூறாதே நழுவ விடுக.', பிராண பதம் - உயிருக்குச் சமம். உடுக்கை - ஆடை. 'ஒருவன் தன் மனத் திடத்தே பொய்ம்மைக் குணம் ஏற்படாது ஒழுகுவானாயின் அவன் பெரியோர்களது உள்ளத்தின் கண்ணெல்லாம் இடம் பெறுவான்.'

(பக்கம் 81) அநியாயார்ச்சிதம் - நியாயமற்ற வழியிற் சம்பா தித்தல். கரி - சாட்சி. அஃகம் - தானியம். கருப்பு - பஞ்சம்.

(பக்கம் 82) இலச்சை - வெட்கம். லக்ஷ்மி நாயகர் - திரு மால். தூறி - வைது.

(பக்கம் 83) பிறன் இல் - பிறன் மனைவி. விழை - விரும்பும். குப்பம் - ஊர். அச்சுறுத்தல் - பயமுறுத்தல்.

(பக்கம் 84) உரக்கம் - ரொக்கப் பணம்.

(பக்கம் 85) வறந்திருந்தமையால் - சுருங்கியிருந்தமையால்.

(பக்கம் 86) காதகப் புத்தி - கொலைப் புத்தி. க்ஷாமம் - பஞ்சம். சிரவணம் - கேட்டல். "தன்னை நோக்கி வந்த விருந்து வீட்டின் புறத்ததாயிருக்கத் தானுண்டல் தேவாம்ருதமாயினும் விரும்பத்தக்கதல்ல." தாட்டி - சாமர்த்தியம். சிலையில் எழுத்து - கல்லில் எழுதிய எழுத்து.

(பக்கம் 87) கிஞ்சித்து - சிறிது. 'அடக்கமானது ஒருவனைத் தேவருலகத்தின்கண் செலுத்தும். அடங்காமையானது பெரிய நரகத்திற் செலுத்திவிடும்.'

(பக்கம் 88) ஆகாத்தியம் - எதிருரை. சைகை - குறிப்பு. வண்மை - கொடையுடைமை. தாளாண்மை - பரோபகாரம். வேதை - துன்பம். ஞாலம் - உலகம். மாண - மிகவும்.

(பக்கம் 89) வாளாவிருந்தேன் - பேசாமலிருந்தேன்.

(பக்கம் 90) 'நல்ல குடிப்பிறப்பும், அருளும், தெய்வ நம்பிக்கையும், மேன்மைப்பாடும், பல கலைகளிலே பயின்ற தேர்ச்சியும், சொல் வன்மையும், நிலத்தையும், மலையையும், தராசுக் கோலையும், மலரையும், ஒத்த பெருமையும், உலகிய லறிவோடு உயர்ந்த குணங்கள் இத்தன்மையன பலவும், அலக்கண் - துன்பம். வழிபடல் - வணங்குதல். மு னி ய ா ன் - வெறுப்படையாதவனாய். ஆர்வத்தன் - விருப்பத்தை யுடையவன். சித்திரப்பாவை - சித்திரத்திலுள்ள பொம்மை. கோடல் மரபு - பாடங்கேட்கும் முறை.

(பக்கம் 91) யாப்பியல் - செய்யுளிலக்கணம். குதர்க்கம் - வீண்வாதம். அடல் - வலிமை. செருக்கு - அகங்காரம்.

(பக்கம் 92) வேசரி - கழுதை. விகித வேலை - எழுத்து வேலை. முறுவலித்து - நகைத்து. துணுக்குற்று - நடுக்குற்று.

(பக்கம் 93) வீயாது - கெ ட ா து. கூறை - வஸ்திரம். அளறு - நரகம். விளியாது - விடாது. தூர்த்தன் - காமுகன்.

(பக்கம் 94) மாற்ருன் - பகைவன். பார்யா - மனைவி. வியோகம் - இழந்துபோதல். ஆழி - கடல். அல்லிமலர்ச்செல்வி - இலக்குமி.

(பக்கம் 95) அணிமை - சமீபம். மயிலை - மயிலாப்பூர். வேழம் - யானை. மேதக்க - மேன்மை வாய்ந்த. பூழியர் - பாண்டியர். ஆர்க்கும் - சப்திக்கும். உவரி - கடல். அணி - அழகு. கோட்டுப் பூ - கொம்பிலுண்டாகும் பூ. எண்டிசாமுகம் - அட்டதிக்கு. மகரந்தம் - பூந்தாது. தாருட்டியம் - பலம்.

(பக்கம் 97) அண்டை - பக்கம். கொழுகொம்பு - பற்றுக்கோடான கொம்பு.

(பக்கம் 99) அகம் குன்றி - மனம் சோர்ந்து. தம்பித்திருந்து - அசைவற்றிருந்து. ஆலிங்கனம் - தழுவுதல். தரணி - பூமி.

(பக்கம் 100) அஸ்தபூஷணம் - கையாபரணம். வேதை - துன்பம். வரித்து - விவாகம்செய்து. அவலம் - துன்பம். நோற்றல் - தவம் செய்தல்.

(பக்கம் 101) அகிலம் - உலகம். குரூரன் - கொடிய செய்கையையுடையவன். சுணங்கன் - நாய். களி - கட்குடியன்.

மடி - சோம்பேறி - மானி - அகங்காரமுடையவன். காமி - காமத்தையுடையவன். கள்வன் - திருடன். பிணியன் - நோயாளி. ஏழை - பொருளில்லாதவன். பிணக்கன் - மாறுபாடுடையவன். சினத்தன் - கோபமுடையவன். துயில்வோன் - தூங்குபவன். மந்தன் - புத்தி நுட்பமில்லாதவன். தொன்னூல் - பழமையான நூல். தறுகணன் - அச்சமற்றவன். படிறன் - பொய் பேசுவோன். ஏல - ஏற்க. வாலறிவு - நல்ல ஞானம்.

(பக்கம் 102) நவீன - புதிய. புல்லர் - அற்பர். வார - சோர. சற்புத்திரி - நல்ல மகள். இடுக்கண் - துன்பம். நகுக - சிரிக்க.

(பக்கம் 103) "நன்மையுண்டாகிற காலத்தில் மகிழ்ச்சியை அடைகிறவர்கள் துன்பம் வருங்காலத்தில் துயரப்படுவதென்ன காரணம்?" துய்த்தல் - அநுபவித்தல். மீதூர்தல் - அதிகப்படுதல். துயராது - துன்பப்படாது. நிர்மலம் - பரிசுத்தம்.

(பக்கம் 104) ஆற்றும் உதவி - செய்யும் நன்றி. அவையத்து - சபையினிடத்து. பாழ்த்துழன்றேன் - வீணாகத் துன்பப்பட்டேன். மரிக்கில் - இறந்தால். தனயன் - மகன்.

(பக்கம் 105) ஊனமுறும் - கெடுதியடையும். உய்ப்பது - செலுத்துவது. அருகன் - உரியவன். துலக்கம் - தெளிவு. "மணலிற் றோண்டப்படுங் கிணறு தோண்டிய அளவுக்குத் தக்கபடியாக ஊறும். மனிதர்க்கு அறிவு அவர் நூல்களைக் கற்ற அளவுக்கு உண்டாகும்" பொய்யாமொழியார் - திருவள்ளுவர். கவல்வது - வருந்துவது. தகாது - கூடாது. நலம் - நன்மை.

# பிழை திருத்தம்

| பிழை | பக்கம் | வரி | திருத்தம் |
|---|---|---|---|
| பனத்துடன் | 20 | 3 | மனத்துடன் |
| மணப் பெட்டி | ,, | 4 | பணப் பெட்டி |
| திப்பிரமை | ,, | 6 | திக்பிரமை |
| எய்த்தான் | ,, | 23 | ஏய்த்தான் |
| வழியிற் - த | 21 | 28 | வழியில் - த |
| கேள்விபட்டு | 22 | 2 | கேள்விப்பட்டு |
| பார்க்கையிற் - தீபம் | ,, | 14 | பார்க்கையில் - தீபம் |
| மரு வருடம் | 23 | 7 | மறு வருடம் |
| இவ்ற்ருல் | 28 | 2 | இவற்ருல் |
| உறங்கவல் | 29 | 2 | உறுங்கவல் |
| பெறுவதென் | 29 | 13 | பெறுவதெவன் |
| சிற்றினன்களை | 30 | 16 | சிற்றினங்களை |
| சேராமற் - தான் | ,, | ,, | சேராமல் - தான் |
| மையாற் - தீரா | 49 | 10 | மையால் - தீரா |
| முதலிற் - தேடி | ,, | 17 | முதலில் - தேடி |
| செய்நன்றி | 50 | 20 | செய்ந்நன்றி |
| தீபத்திற் - தங் | 58 | 1 | தீபத்தில் - தங் |
| களாற் - தங் | 64 | 21 | களால் - தங் |
| அவற்றுட் - த | ,, | 24 | அவற்றுள் - த |
| முதவி | 104 | 13 | நன்றி |
| யவைத்து | 11 | 14 | யவையத்து |
| பாணினுக்கு | 65 | 18 | பாணினிக்கு |
| துழுவம் | 66 | 3 | துளுவம் |
| என்பதனுற் - த | 69 | 10 | என்பதனுல் - த |

| பிழை | பக்கம் | வரி | திருத்தம் |
|---|---|---|---|
| மதினின்மேற் | 71 | 4 | மதனின்மேற் |
| யெனக்கொடுண் | ,, | 11 | யெனக்கொண்டு |
| தெறிவான் | 73 | 1 | தெரிவான் |
| தையார் - த | 74 | 7 | தையால் - த |
| நிவாராணமா | ,, | 11 | நிவாரணமா |
| அதர் | 65 | 6 | அவர் |
| உத்தரப்படி | 76 | 11 | உத்தரவுப்படி |
| நாட் - தவம் | ,, | 23 | நாள் - தவம் |
| பூரிற் - தாங் | 78 | 11 | பூரில் - தாங் |
| மையாற் - தா | ,, | 19 | மையால் - தா |
| பொய்மை | 79 | 26 | பொய்ம்மை |
| ஞற் - தகாத | 80 | 2 | ஞல் - தகாத |
| சென்னையிற் - தெ | ,, | 6 | சென்னையில் - தெ |
| தாற் - தாராள | 81 | 15 | தால் - தாராள |
| மாசத்திற் - த | 87 | 5 | மாசத்தில் - த |
| மற் - தான் | 88 | 5 | மல் - தான் |
| யிற் - தன் | 89 | 7 | யில் - தன் |
| அமை நூலுரை | 90 | 13 | அமைபவன் நூலுரை |
| முதற் - தம் | 90 | 16 | முதல் - தம் |
| வரையிற் - தா | 92 | 11 | வரையில் - தா |
| வாழ்கையிற் | 94 | 4 | வாழ்கையில் |
| யணிகிழங்கு | 95 | 12 | யணிகிழக்கு |
| முதற் - தின - | 96 | 7 | முதல் - தின |
| கொழுகொழும்பில் | 97 | 25 | கொழுகொம்பில் |
| வேரிட | ,, | 26 | வேறிட |
| தந்தை | 100 | 26 | தந்தை |
| நீடுழி | 102 | 24 | நீடூழி |
| தூறு மறிவு | 105 | 15 | தூறு மறிவு |

# விநோத சரித்திரம்

உலகின்கண் வாழாநின்ற உயிர்த்தொகையின் தொழிற்றன்மையை ஊன்றி யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியினும், உயர்ந்தோரால் ஒழிக்கப்பட்டனவற்றை ஒருங்கே உண்டு, பகலை இரவும்இரவைப் பகலுமாக்கி, உறங்காமலும் ஓடியுலாவி உழலாமலும் இராது ஒழுகினையான், ஒரு நாள் இரவில், அறுசுவைப் பதார்த்தத் தோடும் அன்பர்கட்கு அன்னம் ஊட்டி அவமே நாட் கழிக்கும் இடம்பனாகிய நண்பனொருவன் மனையில் நடந்த விருந்திற்குச் சென்று, உட்பகையாறுமுடைய நட்பினருடன் உண்டு, களித்து, உரையாடி, விளையாடி, ஊர்சுற்றி, உதயமானபின் உறையுளுக் கேகி, உறங்கிக் கிடந்து, ஒண்கதிர்ப்பரிதி விண்நடு நீங்கி ஒன்பது நாழிகைஒழிந்தபின், வீண்வாதம் பேசி நாண்முழுதும் போக்கும் வெறியர்போல விடாமற் கதறியலையும் வேலையின் கூலத்தைப் பார்த்து மீந்த காலத்தையுங் கழித்து மீளலாமென்று எண்ணி, வரைவு-தொழில்-வித்தை - வாணிகம்-உழவு - சிற்பம் முதலிய தொழில்களிற் குறைவில்லாது சிறந்து பரந்த இந்திய நாட்டில் முந்திய நகரங்களில் ஒன்றாய், நாலு வருணருஞ் சேனைவீரரும் வாழ்வுறும் மாடமாளிகை மாலை-துரைத்தனசாலை-நிரைத்த தனசாலை-வர்த்தக சாலை-நிர்த்தனசாலை-சர்வகலாசாலை - தர்மகலாசாலை - இளையர் சிறுமியர் கலைபயில்சாலை - வைத்தியசாலை -

வைதிகர்சாலை - சித்திரச்சாலை - கைத்தொழிற்சாலை - ஆயங்கொள்சாலை - நியாயங்கொள்சாலை - இன்னன சாலைகள் எண்ணிறந்தன பெற்று, நால்வகை அரணுஞ் சூழ்வுறவுற்று விளங்கும் பொன்னகரையொக்கும் சென்னைமாநகரிலுள்ள விந்தையாய் ஒளிரும் வீதிகளிற் பிரவேசித்தேன்.

அங்கங்கே பலவித ரதங்களில் வாயுவேகமுள்ள வாம்பரி பூட்டிக் காந்தர்வாம்சர்களெனக் கணிக்கத் தக்க ஆடவர்களும் அரிவையர்களும் இணை இணையாக இவர்ந்து செல்லும் அரியகாட்சிகளைக் கண்டு களித்து உடல் பூரித்துச் செல்கையில், முதனாள் இரா முழுதும் நல்ல காற்றின்மையால் நித்திராபங்கமுற்று மிக அலுப்புண்ட என் தேகத்திற்கு, விற்பன நூல்களைக் கற்பனையறக் கற்ற கேட்ட பெரியோர் வசனம்போல மிருதுவாயுஞ் சுகமாயுந் தோன்றத் தவழுங் கடலிலளங்காற்றுச் சால இனிமை விளைக்கப் பெற்றேன்.

இவ்வாறு தேக சந்தாபந்தீரக் கடற்கரையோரத்தை நணுகி நிற்கையில், நங்கூரம்போட்டு நீரில் மிதக்கும் பல நாவாய்கள், கட் குடியனைப் போல அசைந்து தள்ளாடவும், அவற்றின் மேற்றட்டில் வாயுவால் மொத்துண்டு பலவர்ணக்கொடிச் சீலைகள், தங்கள் இரு சிறைகளைக் கொண்டு பலகாலுந்தட்டி மேலெழுகின்ற பருந்து முதலிய பல ஜாதிப் பெரும்பறவைகள்போலப், படபடவென்று அடித்துக்கொண்டு ஆடவும், உன்னத மலைகள்போல உயர்ந்து அசுவ அணிகள்போல அடுக்கடுக்காய் வந்துபாய்ந்து, மேக கர்ச்சனைபோல மிக

இரைந்து, கரையைக் கரைய மோதி அகழ்ந்து, கருமணலைவாரி அலசித் தெறித்துத் திரியாநின்ற அளவற்ற திரைமாலைகளைத் திறந்த கண்மூடாது சிறிதுநேரம் நோக்கி நின்றேன்.

இவ்வண்ணம் நின்ற என் பக்கத்தில் எவரோ ஒருவர் வந்து நின்ற அசுமாற்றம் அவ்வலையொலியால் செவிக்கேறப்பெருது, சற்றுப்பொறுத்து நான் அவர் நின்ற திசையை நோக்கி என் நிலை பெயர்ந்து அடியெடுத்து வைத்துத் திரும்பவே, அவர் என் முகத்தைக் குளிர நோக்கி முகமலர்ந்து அகங்குளிர்ந்து தம்பி! என விளித்து, என்ன வேலையாக இங்கு நீர் வந்தீர் என என்னை வலிய வினவினுர். அக்கணம் யான் அதற்கு விரைந்து விடைபகராது சற்றுப் பொறுத்து வேடிக்கைப் பார்க்க வந்தேன் என்றேன்.

மனிதர்க்கு முக்குணங்கள் மாறி வருதல் இயல்பாதலின் அக்காலை எனக்குக் கிஞ்சித்துச் சத்வகுணமேலிட்டு, இவரோ நம்மை முன் பின் அறியார், நாமும் அங்ஙனமே, "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான் - நட்பாங்கிழமை தரும்" என்றவாறு ஒருவர் மற்ருெருவரோடு கூடுதலும் பழகுதலும் இன்றிக் கண்டறிதலே சினேகந்தரும்; ஆதலால், இவர் நம்மை இன்று கண்ட மாத்திரத்திலே சினேகனென்று கொண்டார் போலும்; "என்று முகம னியம்பா தவர்கண் ணுஞ்-சென்று பொருள்கொடுப்பர் தீதற்ருேர்" "தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்-வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்" என்பன பெரியோர்களது இலக்கணங்கள்; இறுமாப்போ நமக்

இயல்பான குணம், ஆதலால் இதுவரையிலும் நாம் பிறரோடு வலிய உறவாடி யறியோம். சிநேகம் உண்டாகாத காலையில் ஒருவனைக் கண்டால் மரியாதை செய்யவேண்டும்; அது உண்டானபின் செய்யும் மரியாதை கபடமாகும்; மேலுஞ், சிரித்த முகமுங் குளிர்ந்தபார்வையுஞ் சிநேகன் சொல்லைக் கேட்க விரும்பும் எண்ணமும் இன்பமான சொல்லும் விசேஷமான நண்பனைக் கண்டவுடனே சந்தோஷப்படுதலும் ஆசையுள்ளவனுடைய லட்சணங்களாம்; இத்தகைய குணங்களில் நமக்கு எட்டுணையுமில்லை; இருவரில் ஒருவர் முந்திப்பேசாது எங்ஙனங் கேண்மை கிடைக்கும்? "அன்பீனு மார்வ முடைமை யதுவீனு-நண்பென்னு நாடாச் சிறப்பு" என்பதற்கெதிரியதாய வன்பென்னும் மௌட்டீகம் நமக்கு வாய்த்துளது; நம்போலியர், தம்மை நண்புகொள்ளும் அவா உள்ளவர்கள் பக்கத்திருப்பினும் அவரோடு நல்லுரை வழங்க நாவெழாமல் கல்வி முதலிய அரும்பேற்றிற்கு அருகரல்லராகிறார்கள்; இவர்களாலாய வழக்கம் நம்மை விட்டு ஏகவில்லை. "பழக்கங்-கொடியது பார் பாறையினைக் கோழிகிழிக்கும்" என்றவாறு, தானிருக்குமிடம் பாறையாயினும் கோழி காலாற்சீக்கும்; வழக்கமில்லாதவரோடு வலியப்பேசில் மாறு ஏதேனும் வருமெனினும் அதனை மாற்ற நமக்கு வலியுளது; ஆயினும் இவரோடு இன்று நண்புகொளும் நாட்டம் பெரும்பாலும் இன்று; கேட்ட வினவுக்கு விடைவிடுத்து இவருடைய ஊர் பேர் முதலியவைகளை உசாவுவோம்; பின்னர்ச் சிநேகிக்கவாய்ப்பின் சிநேகிப்போம்;

இவரோ மிகவிருத்தர் ; பருவம் எண்பது போலும் ; தோற்றம் சாலப்பெருந்தகைமைத்து ; விழிகள் ஆழ்ந்து குழிந்திருக்கினும் அருண்மடை திறந்து பெருகுகின்றன ; முகஞ் சாந்தங் கோபமின்மைகளைத் தோற்றுவித்துத் தாமரையைத் தருக்கி நிற்கின்றது ; இடம்பவேஷம் சற்றுமில்லை ; தாடியுரோமங் கயல் முட்போன்று நரைமுதிர்ந்துள்ளன ; திரைதேகத் தைக் கவர்ந்தது ; கரத்திற் தண்டுஞ் சிரத்திற் பாகை யுந் தளர்ந்து நடுங்குகின்றன ; ஆதலால் உலகிற் சில பாலியர் விருத்தரைப் பரிகசிக்குமாறு, நாம் இவரோடு எந்த விநோத வார்த்தையாடலாம் என எண்ணி இங் ஙனம் யான் பொறுத்து விடையளித்ததை அவர் பொருள் செய்யாமல், ஏதோ ஒன்றைச் சொல்ல ஆரம் பிக்கும் போது, கடற் காட்சியிலே கவனஞ் சென்றி ருந்தமையாற் காலந்தாழ்த்து விடை பகர்ந்ததற்கு என்னை மன்னிக்க வேண்டுமென்றேன்.

அதற்கவர், அப்பா ! கடற்காட்சி உன் கருத்தை மாத்திரமன்று, யாவருடைய கவனத்தையுங் கவரத் தக்கது. அது சிறந்த விநோதத்தை விளைக்கும். இச்சாகரந், தனக்குள்ளடங்கிய அளவில்லாத பொருள்களைக் கொண்டு நமக்குப் பெரும் பயனை யளிப்பதுமன்றிக், கவிவாணர்கள் கூறும் வர்ணனை களுக்கு இலக்காயிருக்கின்றது. இதோ பார், இதன் தோற்றங் கறுத்திருப்பினும் நீர் வெளுத்துளது. கரி கரிதெனினுங் குணங் கௌரவமுளது. இந்நீர் வெண் மையுஞ் சுத்தமும் உடையதாயினும் உண்ண உதவா தது போல இடம்பம் பெருமை முதலிய துர்க்குண முடையவன் உபயோகியாகான். அறியாமையால்

ஆடி ஓடுஞ் சிறுவர்களைப்போலச் சிறுமீன்கள் துள்ளித் திரிகின்றன. இதனைக் கண்ட கொக்கு உறங்குவதுபோல அப்படகில் வாளா இருக்கின்றது. "அடக்கமுடையார் அறிவிலரென்றெண்ணிக்-கடக்கக் கருதவும் வேண்டா" என்னும் பொருளை இதனால் தெரிகிறோமல்லவோ? கல்லாத கயவர்கள் வெல்லக் கருதி எதிர்ப்பினும் கற்றுவல்ல சான்றோர் சற்றும் பேசார். அந்நீர்க்காகம் இரையளிக்கத் தொடர்ந்து தொடர்ந்து சென்றும் அதனையேற்காமல் எட்ட ஓடுந் துஷ்டப் பார்ப்பு, வலியக் கல்விப் பொருளைப் புகட்ட முயலும் உபாத்தியாயர்களை மதியாது விளையாட்டிலே மனம்வைத்துழலும் மாணாக்கரை யொத்திருக்கின்றது. அவர்கள் இரைவதுபோல ஒலிக்கும் இவ்வலை அடங்கா மனைவியை அடித்து அடக்க முயலும் ஆடவர் போலக் கரையை அடித்து மோதுகின்றது. வீணாரவாரம் விளைப்பவர்போன்ற இவ்வொலி, அறஞ் செய்தேன் என ஆடம்பரஞ் செய்வார் போல என்றும் அடங்காது. இது அடங்கினபின் நீராடுவோமென்பவர் போலச் சிலர் நற்கருமங்களைப் பிற்காலஞ் செய்வோமென எண்ணி நாள் கழிக்கின்றனர். அந்தோ! சென்ற நாட்களை எண்ணித் தீர்க்கலாம், இருக்கும் நாட்கள் இவ்வளவினவென எண்ணுதலுங் கூடாது. வாழ்நாட்களை வீழ்நாட்களாக்கி வறிதேமாண்டவர்கள் மாள்கின்றவர்களை வரையறுக்கக்கூடுமோ? அறநெறி நில்லார்க்கு அறிவு புகட்டுவது அடாது. புகட்டினும் அது மலையில் அறைந்த மர ஆணி கூர்மை மழுங்கி அறைந்தவன் கைக்கு அரியதுன்பம் விளைப்பது போலாம். எவரெவர்கள்

சுபாவம் எப்படியோ அப்படியே இயலும். எட்டிப் பழத்தை இனிப்பாக்கலாமா? வாழைமரந் தீபத்தைக் கிரகிக்காததுபோலச் சில மந்தமதிகட்கு எந்த விதமாகப் போதிக்கினுந் தஞ்சொந்தப் புத்தி மாருது. அவருட் சிலரறிவிற் போதிக்கப்பட்டவைகள் அக்கணம் நிற்கினும் புராண வைராக்கியம் போல நீடித்து நில்லா. கரும் பொன், கசடறத்துலக்கும்போது மாத்திரமல்லவோ ஒளிவிடும். கண்ட மாத்திரையிற் கற்பூரந் தீபவொளியைக் கவர்வது போல, உன்னைப்போல் மதியூகிகட்குப் போதிக்க வாய் திறக்குமுன் வஸ்து உணர்ச்சி வாய்க்கும். வெண்பொன் செம்பொன்கள் சிறிது துலக்கினும் மிஞ்ச ஒளிதரும், எத்தகைய விவேகிகளாயினும் வித்தியா போதனை அவர்கட்கு நித்தியமும் வேண்டும். விலை வரம்பில்லாத மாணிக்கமாயினும் மாசு படியும். அது போல அஞ்ஞானவிருள் யாரையும் விடாது. சுடர் விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டுமல்லவோ? சிலர் ஓதாதுணர்ந்தேமென்று உளறுவது உண்மையாமா? பகலும் இரவும் உண்ணுதவன் பருத்திருப்பானு? நாம் குழவிப்பருவத்தில் மழலைச் சொற் பயின்றது தாய் தந்தைகளிடத்தில்அல்லவோ? விவேக போதினியாகிய சாஸ்திர விளக்கு நமது அறிவை விளக்கிக் காட்டும் விமலமான கருவி இதனை இளமையிலே கைபழகி விளையாடவேண்டும், இங்ஙனம் இருக்கும் இவ்வித்தியா விளையாட்டை யான் சிறுவயதிலே விட்டுச், சாதாரணமான வேடிக்கை பார்த்தலென்னும் வாடிக்கை மேலிட்டு, வயதையெல்லாம் வறிதாக்கி, என் மனைவியையும்

அதனுள் மேவுவித்து, அவளையும் அவள் பெற்ற அருமைச் சிறு குழந்தையையும் இழந்து, விசனத்துக்குள்ளாக்கி விழலஞன என் விவேகத்தை என்னென்றெடுத்துரைப்பேன் என்று உரைத்து மிகுந்த வியாகூலராய் நின்றவிடம்விட்டு அகன்றனர்.

அங்ஙனம் அகன்றவர் வாக்கால், வேடிக்கை பார்த்துக் காலத்தைக் கழிப்பது வீணெனவும், வித்தியா விஷய விசாரணை செய்வது மேன்மையெனவும் உணர்ந்தேனுயினும், அக்காலத்தில் எனக்குண்டான அறிவிற்கு அவை ஒவ்வாதிருந்தன. ஆனாலும் அவர், தம்மனைவி மக்களைப் பிரிந்த வரலாறு மாத்திரங் கேட்டுவர வேண்டுமென்னும் அவா என்பிடர்பிடித்துந்தத் தொடர்ந்து அவர் பின்னே நடந்தேன். அவரோ சற்றுந் திரும்பிப்பாராது சிரங்குனிந்து சூரியாஸ்தமனமானதாற் துரிதமாய்ச்செல்ல, யான் மீண்டும் எவ்வாறு பேசுவதென்னும் யோசனையின்மேல் விரைந்து சென்றேன். அவரை அழைத்து நிறுத்தவும் அகம் சம்மதிக்கவில்லை. ஆனால் அவர் நான் வசிக்கும் வீதி மார்க்கமாய் நடந்தார். அப்போது இதுவுந் தெய்வாதீனந்தான், இனி நம் கருத்து நிறைவேறினதே யென்று மனங்களித்து, என் வீட்டுக்கருகிற் கிட்டும்பொழுது அவர் பக்கத்தில் வந்து ஐயா என்று வணங்கினேன். உடனே அவர் என் முகத்தை யேறிட்டுப்பார்த்துப் பாராவாரக்கரையிற் பார்த்தவர் நீர்தாமோ என்று பட்சமாய்க் கேட்டார். அதற்கு நான் ஆம் என்றுரைத்து அடியேன் வீடு இது. தேவரீர் திருவுளம்பற்றவேண்டுங், தங்கள் வரலாறு வெளியிடத் தயைசெய்யவும் வேண்டும் என்று நயந்து

விண்ணப்பஞ்செய்து தேவரீர்க்கு இவ்விரவிற் சயனிக்க உறையுளும் உண்ண அமுதும் மற்றும் வேண்டுவனவும் இங்கேயாகலாம் என்று பரிந்து வருந்திக் கேட்டுக்கொண்டேன்.

இதனைச் செவிசார்த்திய அப்பெரியவர், தம்பி, நானோர் அகதி, பிச்சையெடுத்துண்பதே எனது பிழைப்பு, உன்னுடைய வேண்டுகோளைப் பூர்த்தி பண்ண விருப்புள்ளவனேயன்றி வேறில்லை, மூப்பு மேலிட்டமையால் எனக்குச் சாப்பாடு தினம் ஒரு தடவைதான் ஒப்புக்கொள்ளும், இதுவும் இவ்வீதிக்கு அயல்வீதியிலுள்ள பிரபுவாகிய வரதராஜ மகிபதி அகத்திற் கிடைக்கின்றது, வீதிவேதிகையில் உறங்கி மிகுந்த காலத்தையுங் கழித்துக்கொண்டு தற்காலம் ஜீவித்து வருகிறேன், இவ்விரவை எங்குறங்கிக் கழிக்கினுங் கழிக்கலாம், ஏன் இன்று வரவில்லையெனக் கேட்பவர் அப்பிரபுவையன்றி எவருளர்? இந்தப் பாவிசரிதையைப் பன்னியுரைத்தால் மகாபாரதமாகும், இது சொல்வதினும் வேறு புண்ணிய கதைகளைச் சொல்லக்கேட்பது புருஷார்த்தத்தை விளைக்கும், நான் பட்டதுங் கேட்டதும் பாழுக்கிறைத்ததுஞ் சொன்னால் வெட்கமும் அழுதாற் துக்கமுமாம் என்று மிகுந்த வியாகூல சித்தராய்ப் பெருமூச்சு விட்டுப் பேசினார். இதைக் கேட்டவுடன் நான் அவர்க்கு அப்போது வேண்டுந் தாகசாந்தி முதலிய உபசாரங்கள் செய்து, உள்ளே அழைத்துப்போய்த் தகுந்த ஆசனம் இட்டு, இருத்தி, ஐயா தாங்கள் ஆர்கலிக்கரையில் அளித்த வசனமிர்தத்தை என் செவியென்னும் வாயாற் பருகி, அஞ்ஞானமென்

னும் மிருத்துவை அகற்றிநிற்கத் தாங்கள் முதுக்குறை வென்னும் தூண்டிலால் என் மனமாகிய மீனத்தைப் பற்றிக்கொண்டு வந்தீர்கள், "கைம்மாறுகவாமற் கற்றறிந்தோர் மெய் வருந்தித்-தம்மாலியலுதவிதாஞ் செய்வர்" என்பது தங்கள்பால் மெய்யாயிற்று, இன்னும் புல்லியேனுடைய அநாசாரமாகிய அழுக்கைக் கழுவத் தங்கள் சதாசாரமாகிய மழைத்துளியைக் கொட்டவேண்டும், "பழம்புண்ணாளிபாதி பரிகாரி" என்பதனுல் தாங்கள் பட்டபாடுகளை யான் செவி யுற்றுக் கேட்பது இனியெனக்கு எத்தன்மையான இடையூறுகள் சம்பவிக்கினும் அவைகளைப் பரிகரித் தற்கு ஒரு கருவியாகுமே, "மூத்தோர்சொல் வார்த் தையமிர்தம்" என்றும் இருக்கின்றதே என விநய மாக இரந்து கேட்டுக்கொண்டேன். அக்காலை, பெரியவர் சிறிது நேரம் இளைப்பாறிச் சொல்லத் தொடங்கினர்.

"இம்மாநகரிற் சாமானியவர்த்தகர்களில் ஒருவரா கிய வைத்யநாதர் என்பவருக்கும் மீனாட்சியென்னும் மாதுக்கும் யான் ஏகபுத்ரனுய்ப் பிறந்து 'உடன்பிறப் பில்லா வுடம்புபாழ்' என்னும் வசனத்துக்கிலக்கிய மாய், என்பிதாவுக்குஉத்திரகிரியைசெய்யச்சக்தியற்ற நான்காம் பருவத்தைக் கடந்தேன். ஐந்தாம் வயதிற் தந்தை செய்யும் உதவியாகிய வித்தியாப்பியாசந் தாய் செய்வித்தாள். செய்து மென்ன? கல்வியைக்கண் டாற் கைப்பும் விநோத விளையாட்டைக் காணில் விருப்பும் எனக்கு மேலிட்டிருந்தன. 'மாணுக்கர் வாயைப் பார்ப்பதும் உபாத்தியாயர் கற்பிப்பதை உல்

லங்கனம் செய்வதும், விரும்பிக்கற்கும் வித்யார்த்தி களை விளையாட்டிற்கழைப்பதும் ஆகிய வினைகளை விட்டு விடு' என்று என் தாய் என்னைத் தண்டித்ததை இன்றும் மறந்திலேன். 'தந்தை மரித்தானெனிற் கல்விபோம்' என்னும் வாக்கியத்தை கரு-வது வயது வரையிலும் ஸ்திரப்படுத்திக் கடன்வைத்ததகப்பனும், வியபசாரியான தாயும், விசேஷரூபவதியான பாரியுங் கல்வியில்லாத புத்திரனுஞ் சத்துரு என்றபடி கடன் வையாமல் விசேஷ திரவியத்தை வைத்துக் காலஞ் சென்ற என் தந்தை பேரழிக்கச் சத்துருவாய்க் கல்வி யைப் புறக்கணித்தேன். என் அருமைத்தாய் 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்—சான்றோ னெனக் கேட்டதாய்' என்றவாறு, நான் கற்று வல் லன் ஆவேனென்று அவாக்கொண்டு, கேட்டவாறு விசித்திரக் கட்டமைந்த விசேஷ புஸ்தகங்களும், வேடிக்கையாய் விளையாடப் பல விநோதப் பொருள் களும், வித்தியாசாலைக்குப்போகவர மேன்மையான பண்டிகளுங் குதிரைகளும், சண்டையாட்டுக்கடா, கோழி, காடை, கவுதாரி, பலவிதப்புறு இவை முத லானவைகளும் வாங்கிக் கொடுக்கப்பெற்று அவற்றை வளர்ப்பதும், வம்புவிளைப்பதும், வாதுக்குநிற்பதும், நியாய சபை யேறுவதும் ஆகிய மணியத்தில் வர்த்தித் துப், பல பரஸ்திரீகாந்தனுகத் தலைப்படவே, என் தாய் என்னை ஏன் என்று கேளாமலும், அதட்டிக்கேட் டால் எங்கேஊரைவிட்டுஓடிப்போகிறுனோவென்னும் அச்சத்தால் யான் உவக்குமாறு நடந்துகொள்ளப் பின்வாங்காமலும் இருக்கக் கைம்பெண் வளர்த்த கசடனுகித்திரிந்து கலியாணஞ் செய்யப்பெற்றுப் பதி

னெட்டாவது வயதில் பருவமாகாத பாரியை நமன் கையிற் பறிகொடுத்தேன்.

"இவ்வாறு,பிதாதேடி வைத்த பெரும்பொருளே என்னைத் துர்ஜனனுக்கித் தூர அகல, உண்ணும் அன்னத்திற்குச் சுன்னம் வந்து, எல்லா ஆட்டம்பாட் டங்களும் ஒடுங்கி, வீட்டிலுள்ள பண்டங்களை விற்று உண்டு, விசனமேலிட்டு, ஒரு நாள் உட்கார்ந்து யோசித்து எதை விற்கலாமென்று உள்ளகமெல்லாம் ஊன்றிப்பார்க்கும் போது என் தந்தை உடுப்புப்பெட்டி பரண்மேலிருக்கக்கண்டு எடுத்துச் சோதித்துப் பார்க்கையில், என் தந்தை ஜீவிய காலத்தில் வேலூரிலுள்ள நாணயமான பெரியவியாபாரியோடுகூட்டுவியாபாரஞ் செய்வதற்கு முதலாகக்கொடுத்திருந்த ரூபாய் கரு00 என்றெழுதியிருந்த கணக்கும் அதைச்சேர்ந்த வியவகாரப் பத்திரங்களுஞ் சில வைத்திய புஸ்தகங்களும் இருக்கப்பார்த்து எடுத்து, அவ்வியாபாரி அக்காலம் மிகவுஞ் செழிப்புள்ளவனுயிருக்கக் கேள்விப்பட்டதனல், யானும் என் தாயுஞ் சென்று என் தகப்பனுக்குச் சேரவேண்டிய பாகங் கொடுக்கவேண்டுமென்று கேட்டபோது, அவன் மகன் மூர்க்கனுகையால் இல்லையென்று மறுக்க, அங்குள்ள நியாயவாதியொருவர் வசம் அதற்கு வேண்டிய ஆதரவுகளைக் கொடுத்து, அவர் கேட்டபடி ஜெயித்து வரும் பொருளில் மூன்றில் ஒரு பங்குஅவரும் இரண்டு பங்கு யானும் எடுத்துக்கொள்வதென்று தீர்மானித்துக், கோர்ட்டில் வழக்குத்தொடுத்து ஜெயம் பெற்று, இரண்டாயிரம் ரூபாய் அடைந்து, இவ்வூர்க்கு வந்து பழையபடி துர்ச்சன நண்பரோடு ஆடித், தாசி வேசி

களைக்கூடி, அவர்கள் ஆடல்பாடல்களில் மனஞ் செறிந்து, உரியபொன்களெல்லாம் கொடுத்துப், பெரியபுண்களெல்லாம் மடுத்து, பாயும் படுக்கையு மாயிருந்து வதைப்பட்டு, வாடி, மெய்யை மூடி மிகு சீயோடி, ஈயாடிப் பரிகரிக்க வைத்தியர்களுக்குக் கொடுக்க மருந்து செலவுக்குக்கூட வழியின்றி மயங்கும்போது, என் தந்தை பெட்டியிலிருந்த வாகடப் புஸ்தகங்களின் ஞாபகம் வந்து, அவைகளை எடுத்து வரும்படி என் தாயை மெள்ள மிருதுவான தொனிகொண்டு அழைத்தேன். இதைக் கேட்ட என் தாய் எனக்கு மிருத்து நேரிட்டதோ என்னமோவென எண்ணி, அதிசீக்கிரம் ஓடிவந்து 'என்ன அப்பா பிதற்றுகிறை' என்று அழுது அருகில் உட்கார்ந்து, சங்கதி தெரிந்து, அப்புஸ்தகங்களைக் கொண்டுவந்து கொடுத்து, 'அப்பா மகனே உன் தந்தையார் முன் வர்த்தகஞ் செய்த காலையிற் தமக்கு ஒழிவான சமையத்தில் இவைகளைப் பார்த்துப் படித்துப் பல அவுஷதங்கள் செய்வதும் பல ஏழைகளுக்குக் கொடுப்பதும் ஆக இருந்த துண்டு. ஆதலால் உன் நோய்க்குத் தக்க மருந்துகளும் இருக்கும். நான் இளமையிற் கல்விகல்லாமற் போனதினுல் அவைகளைப் படிப்பதற்குஞ் செய்வதற்கும் பாத்திரம் அற்றேன். நீ படித்துக்கொண்டு வந்தாயானுல் இன்ன மருந்து இதற்குதவுமென்றும் அது செய்யும் விதம் முன்செய்திருப்பதினுல் தெரியுமென்றுஞ் சொல்வேன் என அவ்வாறே நான் முழுதும்படித்து வர ஒரு மருந்து தெய்வாதீனமாகக் கிடைத்தது. அதைச் செய்து கொடுக்க உண்டு, கடவுளருளால் அக்கண்டத்தினின்

றும் நீங்கிச் சொஸ்தப்பட்டுக் கற்பு நிலை தவருது என் தாய் ஒரு செல்வவான் வீட்டிற் குற்றேவல்புரிய வருமூதியத்தால் ஜீவனஞ் செய்தும், இளமையிற் கல்லாது கழித்த நாள்களைக் கருதிக் கவலைகொண்டு வைத்திய புஸ்தகங்களை உத்தம வைத்தியர்கள் உதவியின்றிப் படித்தும், ' உற்ருனளவும் பிணியளவுங் கால முங்-கற்ருன் கருதிச் செயல்' என்னும் விதியையும் வாதபித்த சிலேட்டுமங்களின் கூறுகளையும் நாடி-நேத்திரம்-நா-குரல்-மூத்திர முதலிய குறிகளையும் ஔஷதங்களுக்குரிய அநேக பதார்த்தங்களின் குணு குணங்களையும் அறியாது சீவரக்ஷாமிர்தம் சிந்தாமணி முதலிய சிறந்த வைத்திய நூல்களில் உள்ள பாடல்களைச் சொல்லிக் குழந்தை வைத்தியன்-மருத்துவன்-சத்திரவைத்தியன் என்று பேர் பூண்டுந், தம்மிடத்தில் வந்த வியாதியஸ்தனைச் சமனுலகுக்கேற்றுஞ் சில துன்மார்க்கப் பாமரசுதேச வைத்தியர்களோடு சேர்ந்தும், ஜோதிஷம்-வியவகாரம்-பிராயச்சித்தம்-வைத்தியம் இந்நான்கையுஞ் சாஸ்திர சம்பிரதாயந் தெரியாமல் நடத்துகிறவன் பிரம்மகத்தி செய்தவனென்னப்படுவான் என்பதற்கேற்க வீரபூரரசங்களைச் சிந்தூரம் மாத்திரை பஸ்மம் சூரணம் கிருதம் இலேகிய முதலியவைகளில் சேர்த்துக் கொடுத்து என் கையில் அகப்பட்டவர்களைக் கொன்று ஆயிரம் பேர்களைக் கொன்றவன் அரை வயித்தியனென்பதாகப் பேரெடுத்து ஏமாந்தவர்களிடத்திலிருந்து காசு பறித்து ஜீவனஞ் செய்துஞ், சகல வைத்தியங்களுந் தக்கவாறு ஞானயுக்தமாய் நடத்திப் பெரும்பாலும் பிரக்யாதி அடைகின்ற ஆங்கிலேய வைத்தியர்கள்

பிரவர்த்திக்கிற ஆங்கிலேய அரசாட்சியிலும் யாதொரு தடையுமின்றி வைத்தியன் மகன் வைத்திய னென்று சொல்லும்படி திரிந்தேன்.

"திரிந்துமென்ன! அதனுல் வந்தகாசு மாயமாய்ப் பறந்து 'ஈன்ருளின் என்னகடவுளுமில்' எனப் பட்ட என் தாய் தன் இளமை தொட்டு உண்டா யிருந்த மார்படைப்பினுல் நான் வீட்டிலில்லாத சம யத்தில் இறந்து பிணமானுள். அதுகண்டு நான் ஆருத்துக்கத்தில் மூழ்கிப் பிணத்தை மசானத்துக்குக் கொண்டுபோய்த் தகன சமுஸ்காரஞ்செய்து மீண்டு வீட்டுக்கு வரும்வழியில், அரையில் உடுத்த காவிவஸ் திரமுங் கனகமலர் முகப்பிட்ட ருத்ராக்கவடமும் விபூதியணிந்தமேனியும் முண்டித்தமுடியுந் தண்டம் பிடித்த கரமும் வெள்ளிக்குமிழ் கட்டிய பாதகுறட்டி லேறிய அடியும் விபூதிப்பையுங் குடையுங் கோவண மும் விளங்க ஒரு சங்நியாசி என் பக்கத்தில் வரக் கண்டு; அவர் கடாக்ஷவீக்ஷண்ய கமலக்கண்கள் என் னறிவைக் கவர்ந்ததினுல் அவருடன் மெள்ள அண்டி வார்த்தையாட ஆவல்கொண்டு, மாதாவைப் பறி கொடுத்த யான் சேதாவைப் பின்ருெடரும் சேங் கன்று போலப் பின் தொடர்வதைப் பாராதவர் போலச் சற்று விரைவாக நடக்கத் தொடங்கினர். பதியானவன் துராசாரமுள்ளவனுனுலுஞ் சதாசார முள்ளவனுனுலும் மூர்க்கனுனுலும் பண்டிதனு லுங் காஷாய தண்டங்கள் தரித்திருந்தால் பூஜ்யனு வன் என இருத்தலாலும், பெரியோர்கள் சிறியோர் களை லட்சியஞ் செய்யார்களாதலாலும், அவர் தயைக்கு நாம் பாத்திரமாவதே உறுதியென்று எண்

ணிக் கடுக ஓடி எதிரில் நின்று தண்டம் சமர்ப்பித்துக் கைகட்டி வாய்புதைத்து நிற்கவே, அவர் ‘குருகடாட்சம் கூட்டி முடிக்கவேண்டுங் குருநாதா குமரேசா ஈஸ்வரா’ எனப் பல நாமங்களை எடுத்து வெகு சிரத்தையுடன் செப்பி, விபூதியை எடுத்து என்முக நிறையப் பூசித் தாமும் பூசிக்கொண்டு, என் பின்னே துக்கங் கொண்டாடி வருபவர்களையும் என்முகவாட்டத்தையுங் கடைக்கணித்து, யாக்கை நிலையாமையைப் பற்றி ‘நந்தவனத்தி லோராண்டி-அவன் நாலாறுமாத மாய்க் குயவனைவேண்டி - கொண்டுவந்தானொரு தோண்டி - அதைக்கூத்தாடிக் கூத்தாடிப்போட்டு டைத்தாண்டி’ எனவும், அப்பா இந்தத் தேகம் ஆகாயத்திலெறிந்த சிலை-காற்றையடைத்த துருத்தி-வெயிலிலிட்ட வெண்ணெய்-ஆற்றிலெழுந்த குமிழி-மேகத்தில் விளங்குமின்னல்-நித்திரையில்கண்ட கனவு-மீகாமனில்லாத மரக்கலம்-இதனை மெய்யென நம்புவது வீண், பிறப்பதுபோல இறப்பதும் உண்மை. ‘சாவாதவில்லை பிறந்தவுயிரெல்லாம்’ எனப் பல ஞானங்களைப்பாடிவரவே, அவரை வீட்டுக்கழைத்துப் போய்ப் பல உபசாரங்கள் செய்து, போஜனஞ் செய்வித்து, என் விருத்தாந்தங்களையெல்லாம் உரைத்து வரும்போது, அவர் ‘அப்பா, இந்த நாய் நெடுநாள் காட்டிலிருந்து தவஞ் செய்து, அநேக சித்தர்களைத் தரிசித்துக் கணக்கில்லாத மூலிகைகளையும் இரச குளிகைகளையும் இரச மணிகளையும் வசிய குளிகைகளையும் அஞ்சனங்களையுங் கண்டு பிடித்து, முப்பு முடித்து, அகஸ்தியரைக்கண்டு அவராற் சில முடிக்கப்பெற்றுவந்தது, இவைகளாலிதற்கென்ன பயன்?

காயசித்தி பெற்றவர்களெல்லாம் இக்காசினியை விடா தொழிந்ததில்லை. பஞ்சலோகங்களையும் வேதித்துப் பல னென்ன? இக்காயமோ இந்நாய்க்கொரு கனமாகிக் கங்கையிற்போட்டுத் தொலைக்கலாமென்றுபோகிறது' என்னும் பசப்புவசனமாகிய மோகன பாணங்களை யென்மேற் பிரயோகிக்கவே, நான் சித்தப்பிரமை கொண்டு, தெய்வமொன்றெனை நம்பவும் பட்டணத்தி லாயினும் வனத்திலாயினும் வாசம் பண்ணவும் இராஜாவோடாயினும் சந்நியாசியோடாயினுஞ் சிநேகஞ் செய்யவும் அழகுள்ள மனைவியோடு கூடி யாவது குகையிலாவது வசிக்கவும் வேண்டுமென்று சாஸ்திரம் சொல்வதினால் இப்பெரியவரை நம்மோடு வைத்துக்கொண்டு ரசவாத வித்தையை எப்படியா வது கற்றுக்கொண்டு நம்முடைய வீட்டையெல்லாம் பொன்மயமாக்கிக் குபேர சம்பத்துடன் கூடி வாழலா மென்னும் வீணெண்ணத்தை வைத்து, அன்றுமுதல் அவர்க்குச் சோடச உபசாரஞ்செய்து, ஆடுகோழி கஞ்சா அபினி முதலியவைகள் சம்பாதித்துக்கொடுத் துத், தினமுஞ் சிஸ்ருஷை செய்துவந்து, ஒரு நாள் என் அபிப்பிராயத்தை மெள்ள உரைத்தேன். அதைக் கேட்டவுடன் அவர் 'அப்பாவைத்தியன் கூடிக்கெட் டான் வாதிகூடாமற்கெட்டான்' எனவும் 'வேதம் ஓதியறி வாதம் ஊதியறி' எனவுமுள்ள மொழிகளின் கருத்து உனக்கு வெளிப்படையாய்த் தெரிந்தவையே. ஆதலால் நீ என்மனமொப்ப நடந்து நான் உரைத்த படி ஊதினால் பலனடையாமற் போகமாட்டாய். ரோகிக்கல்லாமற் சுகனுக்கு மருந்தேன்? தரித்திர னுக்கன்றித் தனிகனுக்குப் பொருள் கொடுப்பார்

களா? உன்னையொத்த உத்தமர்க்கென்றல்லவோ இவ்வித்தைகளை இந்தநாய் வெகு பிரயாசைப்பட்டுக் கற்றுவந்தது. வேறொருவர்க்குக் கற்றுக்கொடுத்தால் அது காட்டிலெறித்த நிலவுங் கமரிற்கவிழ்த்த பாலும் ஆற்றிற் கரைத்த புளியும் விழலுக்கிறைத்த நீரும் போல அல்லவோ ஆகும் என்று வெகு உருக்கமாய் மொழிந்து, ஒரு மண்சட்டியில் உமிகொட்டி அதிற் கரிவைத்து நெருப்புமூட்டிக் கொணரும்படி கட்டளை யிடவே, நான் அவ்வாறு சித்தஞ்செய்தவுடன், அவர் தம் பையிலிருந்து ஒரு மூசையெடுத்து, சில பச்சிலைச் சாறுகளை அதில் பிழிந்து, ஒரு செம்புத்துண்டை இரண்டு வராகனிடை எடுத்து வைத்து ஊதச்சொன்னார். நான் அவ்வாறு ஊதிக்கொண்டிருக்கும்போது கீழேகிடந்த ஒரு கரித்துண்டத்தை எடுத்து மூசையின் உட்பிரதேசத்தைத் துழாவிக்கொண்டேயிருக்க நான் பார்த்துக் கொண்டிருந்தேனேயன்றி, அக்கரித் துண்டு போட்டவிடங் கவனித்திலன். பின் தழலை யவித்து மூசையை உடைத்துப்பார்க்கச் சொன்னபடி பார்க்கும்போது தங்கமாகக் கண்டேன். மற்றொரு நாளும் அவ்வாறு செய்து, நாங்கூழ்ப்பூச்சியை இட்டு நயமான வெள்ளியைக் காட்டி எனக்கே கொடுத்துச் சில மூலிகைகளின் பெயரையும் இருக்குமிடங்களையும் இயம்பினார். இதற்குள்ளே யான் கொஞ்சஞ் செருக்குற்று, ஆயுர்வேத பாஸ்கரனென்றும் வாதவித்தை கைவந்த சித்தனென்றும் பிறர் கருதும்படி வெளியில் உரையாடி, இடம்ப வேஷங்கள் தரித்துச் சஞ்சரித்துச், செலவுக்கு முட்டுப்பட்டு முகம் வாடியிருக்குங் குறிப்பைச் சாமியார் கண்டு என்ன

சங்கதியென்று என்னை வினவினர். அதற்கு நான் ஊரில் வைத்தியஞ்செய்து அடையும் ஊதியமோ மிக அற்பஞ், செலவோ மிகுதி, ஆதலால் ஒருங்கே நான்கு சேர் தங்கம் செய்துகொண்டால் உத்தமமென்று எண்ணுகின்றேன் என, அவர் அப்பனே நீ சொல்வது சரியே, ஆனால் நான்கு சேர்க்குப் பிடிக்குஞ் செலவோ நானூறு ரூபாயாகுமே, அதற்கு நீயெங்கே போவாய், நானோ காட்டில் திரிந்து பச்சிலை சம்பாதிக்க வேண்டுங், கடைச் சரக்குகளும் பல வேண்டும், இவைகளெல்லாங் கிடைத்தாலும் இவ்விடத்திருந்து செய்வது ஏலாது, பிறர்கண்டால் உனக்கும் எனக்கும் பெருந்துன்பம் நேரிடும், இந் நகர்க்குக் காததூரமுள்ள காட்டிலிருந்து நீயறிய நிறைவேற்றவேண்டுஞ், செய்து உன் கையில் கொடுத்து விட்டு என் வழியைப் பார்க்கவேண்டும் எனவே, எனக்கு பிரம்மானந்த முண்டாகி ஐயா, தாங்கள் ஒன்றும் நினைக்கவேண்டுவதில்லை, நானூறல்ல ஐந்நூறுயினும் இன்று தேடிக்கொண்டுவந்து நாளைத் தங்களிஷ்டப்படி செய்து முடிக்கலாமென்று உறுதிகூறி, வெளியிற்போய் ஒரு சவுக்காரியண்டை என் வீட்டுப் பத்திரத்தை வைத்து நானூறு ரூபாய் வாங்கி இராத்திரி எட்டுமணிக்கு வீடு வந்து கைப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் காரியத்தைப் பெரியவர்க்குத் தெரிவித்து, அமுது படைப்பித்து, நானும் உண்டு வேலையாளை அவனுடைய வீட்டுக்கனுப்பி விட்டுப், பணத்துக் கலைந்த அலுப்பினால் என்னை மறந்து உறங்கிவிட்டேன். பொழுது புலர்ந்தபின் சாமிசெய்யவந்த சாமியார் இருந்த அறையிற்போய்ப்

பார்க்கையில், அங்கு ஏகவெளியாயிருக்க அங்கு மிங்கும் பார்த்தும் அவரைக் காணமல் மங்கிய பணத்துடன் அலைந்து வந்து வீட்டுக்குள் வைத்த மணப்பெட்டியும் இல்லாதிருக்கவே, ஒரு மணி நேரம் வரையில் எனக்கொன்றுந் தோன்றமல், திப் பிரமைகொண்டு, அடியற்ற பனைபோல நிலத்தில் விழுந்து கிடந்து, சற்று உணர்வு வந்து பெருமூச்சு விட்டு யோசித்து, ஐயோ! என்செய்வேன், வஞ்சக வேஷந்தரித்து நெஞ்சினில் நஞ்சம் பரித்துக் கொஞ் சிய பகட்டுத் திருட்டுத் தடிச்சாமியாரே என் பொரு ளைக் கொள்ளைகொண்டான், நமது வேலைக்காரனே வீட்டிலில்லை, ஊரிலோ நமக்கு ஒருவரும் பகையில்லை, பணத்தைப் பாழாக்கினேமே தான தருமஞ் செய்து பலனடைந்தோமா? 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்றவாறு, பல ஆயுள்வேதங்களை ஆய்ந் தறிந்து சமயோசித சிகிச்சை செய்து மகாவல்லவர்க ளென்று மதிக்கும் மதி யூகிகளாகிய ஆங்கிலேய பண்டிதர்களுஞ் சுதேசபண்டிதர்களும் அடங்கிய பல வைத்தியசாலைகளிருக்கும் இக்காலத்தில், ஒன்றும் அறியாத என்னை மகா பண்டிதனென்றும் நமது உயிர்த்தாரகனென்றும் நம்பிவந்த பேதை ஏழை களுடைய உடல்பொருளாவிகளை இழந்து போகச் செய்து ஏமாற்றின நம்மை இத்திருட்டுச்சாமி எய்த் தான், இதிற் குற்றமொன்றுமில்லை, 'தன்வினை தன் னைச்சுடும்' என எனக்குள்ளே சொல்லிக்கொண்டு, சற்றுத்தேறிப் பத்து நாள் வாளாவிருந்து, சோற் றுக்கு வரும்படி இல்லாமையாற் தொன்மைய உத்தி யோகத்தையே கொண்டு ஜீவித்து வந்தும், வஞ்ச

மாய் வைத்திய வாதநூல்களில் மனம்வைத்துப் படித்தும், இவைகளே மேன்மையான சாஸ்திரங்களென்று பிறர்க்குச் சொல்லியும், ஊமைகண்ட கனவுபோலவும் வியபிசரித்ததாகக் கனவுகண்ட மனைவி வேறொருவருடனும் சொல்லாமை போலவும் அச்சந்நியாசி செய்தசதியை அந்நியர் யார்க்கும் பன்னுமலும் இருந்து, சிலநாள்கழித்துப் பின்னும் பொன்னுசை யென்னும் பெருங் காற்றிற் புந்தியாகிய பஞ்சு அகப்படச் சில துன்மார்க்கர்களுடன் கூடிப் பச்சிலை பாஷாணுதிகளைக் கடன்பட்டு வாங்கிக் கணக்கற்ற எருமுட்டைகளால் கஜபுடம் குக்கிடபுடம் முதலிய போட்டுக் கொளுத்திப் பிரித்து உள்ளே வைத்த சரக்குச் சிதம்பரமாக இருக்கக்கண்டு, ஐயோ செய்பாகத்திலோ கைபாகத்திலோ பிசகுவந்ததென்று நினைத்தும், அஞ்சனங் காயகற்பம் வசியம் ஆகருஷ்ணம் உச்சாடனம் ஜோதிடம் இவைகளினுண்மையறியாமையிலேஅறிந்தவனுகப் பிறரை மயக்கியும் வந்தமையால் 'கெட்டிக்காரன் பொய் எட்டு நாளில் தெரியும்' என்பதாகக் கொஞ்சநாளில் என்னைப் பொய்யனென்று பலரும் புறக்கணிக்கத் தலைப்பட்டார்கள். ஆகவே என் கையில் ஒரு காசு குதிரைக்கொம்பாகி, ஒரு பிடி சோறும் வெல்லப் பிடியென வறுமைநோய் மலிந்தது. எவ்விடத்தில் வித்தை தனப்பிராப்தி சுகம் இவைகளில் ஒன்ருயினும் கிடையாதோ அவ்விடத்தில் ஒரு பகலேனும் வசிக்கலாகாதென்று மனவுறுதி கொண்டு ஜனனதேசத்திலேயே இருக்கவேண்டுமென்று பிறர் கூறும் வசனத்தை அவமதித்துக் காசிக்குப்போகும் வழியிற் தஞ்சை இராஜா அநேக சத்

திரங்கட்டி அன்னதானஞ் செய்துவருகிருரென்று கேள்விபட்டு வெளியில் புறப்பட்டேன்,

"நான் வரும்போது குடியிருந்த வீட்டைக் கடனுக்காகப் பெற்றுக்கொண்ட சவுகாரியண்டை ஓர் அணு பிச்சையெடுத்து வாங்கி மேல் துணியில் முடிந்துகொண்டு அடையாற்றைக்கடந்து வரும்போது, சில சூதாடிகளுடன் கலந்து ஓர் ஆட்டம் பந்தயம் வைத்து ஆடி மேற்படி அணுவையும் மேற்றுணியையுந் தோற்றேன். என்செய்வேன்! பசியோ அனல்போலெழுந்தது. கண் பஞ்சடைந்தது. களை மேலிட்டது. பக்கத்திலுள்ள ஏரிநீரை இரண்டு கைநிறைய வாரிக்குடித்துப் பாதையின் மருங்குள்ள பாதவத்தினிழலிற் படுத்து உறங்கினேன், யாரோ என்னைத் தட்டி எழுப்பினதினுல் எழுந்து பார்க்கையிற் தீபம்வைக்க ஒரு மணி நேர மிருப்பதாகவும் எழுப்பினவர் ஒரு பெரிய மனுஷ ராகவும் கண்டு நின்று தொழுகையில், அவர் நீ யார்? இவ்விடம் ஏன் உறங்குகிறை? என வினவினர். அதற்கு நான் என் விருத்தாந்தமெல்லாம் ஒளியாமல் விளம்ப, அவர் நல்லது இந்த மூட்டையைப் பரங்கிமலை வரையிலும் எடுத்துவா உனக்கு இரண்டணுக் கூலி கொடுக்கிறேன் என, அதற்குச் சம்மதித்து அவரேறிய குதிரையின் பின்னே மூட்டைசுமந்து குறித்த இடம்சென்றேன். அங்கு அவர் எனக்கு வயிருர அன்னமிட்டது மன்றிப் பேசின அணுவைக்கொடுக்க வரவே அதை வாங்க எனக்குச் சம்மதியின்றித் தங்களோடு கூடவேயிருந்து ஊழியஞ்செய்து ஜீவிக்கிறேன் எனக்கெஞ்சி அவர் பாதத்தில் விழுந்து வேண்டிக்

கொண்டு தரையைக்கிறி நிற்பதைக்கண்டு அவ ருடைய திரு உள்ளத்தில் என் நல்ல அதிர்ஷ்டமானது கருணைவரச்செய்தது. அது முதல் நான் மனக்களங்க மின்றி அவர் செல்லும் ஊர்தோறுஞ் சென்று அவர் நிழல்போற் பிரியாமற் குற்றேவல் செய்து பற்றிக் கொண்டு மருவருடம் இவ்விடம்வந்து அவருடன் வசித்தேன். அவரோ தமிழிலும் ஆங்கிலேய பாஷை யிலுஞ் சபைமெச்சுந் தாஷ்டீகப் பிரசங்கச் சமர்த்தர். தயை - தாட்சிணியம் - அன்பு-அடக்கம் - வாய்மை - பொறுமை முதலிய நற்குணங்களையே பூஷணமாகப் பூண்டவர். வியாகரணம், பூதத்துவ சாஸ்திரம்-மான தத்துவ சாஸ்திரம்-கணிதம்-ரசாயன சாஸ்திரஞ்-சிற் பசாஸ்திர முதலிய சர்வகலாநிபுணர். உத்தேச இலக் கண பரீட்சைகளின் ஒன்றை உறுதிப்படுத்தியுரைக் கும் ஒப்பற்ற வாக்குவல்லபமுற்றவர். இவர் பெயர் வித்தியாநந்தர். மனைவி பெயர் சத்தியவதி. இவர் கள் ஆதரணையால் அன்ன வஸ்திராதிகள் குறைவின்றி எனக்குக் கிடைத்துவந்துங், கல்வி கேள்விகள் குறை வாயிருப்பதை நிவர்த்திக்க எண்ணங்கொண்டு, அப் பிரபு தம்மோடொத்த வித்தைச் செல்வராகியும் நண்பருமாகிய பாவநாச பண்டிதரிடம் ஆங்கிலேய பாஷையுந் தமிழுங் கற்கும்படி அனுப்பினர். அவ் வாறே யான் பிரயாசையெடுத்துக் கொண்டு கற்று வந்தும், வயது முதிர்ந்தமையால் முன்னதைக் கற்க முடியாமலும், முன்னர்க்கொஞ்சம் வாசித்துப் பழகி யிருந்தமையாற் பின்னதை அப்பியாசித்துப் பாடப் படிக்கப் பிரசங்கிக்க ஒருவாறு தேறி, அவ்வித்தியா னந்தர் அங்கங்குச்சென்று செய்யும் உபநியாசங்களைத்

தமிழிற் பட்டோலை பிடித்து எழுதியும், மற்றவேளை களில் அவர் ஏவின வேலைகளைச் செய்தும், 'தேவரனை யர் புலவருந் தேவர்-தமரனையரோரூருறைவார்-தம ருள்ளம்-பெற்றன்னர் பேணி வழிபடுவார்கற்றன்னர்-கற்றுரைக்காதலவர்' என்றதிற் கூறிய பேணிவழி படுதலாகிய பயன் என்வயின் சித்தியாயிற்று. அவர் செய்த உபநியாசங்களில் மானிட வாழ்க்கையென் னும் மகுடத்தையுடையதொன்றை இப்போது உனக் குச் சொல்லவேண்டிய சமயம் நேரிட்டதினுற் சொல் லுகிறேன் கேளெனச் சொல்லுற்றனர். அது வரு மாறு :—

"நீரே பிராணுதாரம் என்னும் வாக்கியம் வெள்ளி டைமலைபோலப்பொருள் விளங்கி நிற்றலால் அந்நீர் பொதிந்த மழையால் உலகமும் உலகத்தால் உயர்ந் தோர்களும் உயர்ந்தோர்களால் பல்வகைய அறமும் பெறப்பட்டு, நீர் சூழ்ந்து நிலவும் இந்நில உலகில் அந் நீராதரவைக் கொண்டு தோன்றி வளர்ந்து மறையும் சீவராசிகளை எண்பத்துநான்கு லக்ஷமென்று பெரி யோர் ஒருவாறு வரையறுத் திருக்கின்றனர். அவை நால்வகை யோனி எழுவகைத்தோற்றமாய் அடங்கி நிற்பன.

'ஊர்வபதினென்றுமொன்பதுமானிடம்
நீர்பறவை நாற்காலோர்பப்பத்தாம் — சீரிய
பந்தமாந்தேவர்பதினலயன்வகுத்த
அந்தமில்சீர்த்தாவரநாலைந்து'

அவற்றுள் ஒரு சீவன் மானிடஜனனமாகி வருதல் அரிது. அதிலுங்-குறள்-கூன்-ஊமை-செவிடு-குருடு-மூடம்-உறுப்பு மயக்கம்-உறுப்பில் பிண்டம் என்னும்

எண்வகை உடற்குறைகளில் ஒன்று நீக்கி உதிப்பது அருமை. உறுப்பனைத்துங் கூடிப் பிறக்கினும் பாலியாவஸ்தையில் பாலாரிஷ்ட முதலிய தோஷங்கள் அற்றுப் பரந்த கல்வியும்பரம ஞானமும் படிவது வருத்தம்.

'எறியுங்கடலினுகத்தடியிலாமைக்கழுத்துப்புகுவதுபோற்
பொறிவெம்பிறவியநேகத்தாற்புருடன்விவேகியெனப்
[பிறந்து
முறிவெம்பிறவிப்பயனிலதிம்மோகமமையுஞ்செய் தொழி
[லாற்
செறிவதென்னேயிவற்ருலேதினங்களெல்லாஞ்சென்றிடு
[மால்.'

'புருஷராய்ச்சனனம தெடுத்தபேர்மெய்ஞ்ஞானபோதத்தை
யறிவதொன்று,
பூமியொடுமிக்கதன வானுதலொன்றலது பூவலஞ்செய்வ
தொன்று-
தருமவானென்றுமிகு கீர்த்திமானென்றுநற் சற்குணவிவேகி
யொன்று,
சகலரும்புகழ்கின்ற வித்துவானென்றுரண சங்க்ராமவீர
னென்று-
கருணைசேரிந்தவகை யில்லாதமனிதரைக் காசினியிலேன்
படைத்தாய்,
கருதுதாயுதரமும் பார்க்கின்றபேர்களிரு கண்களுஞ் செய்த
வினையோ?

அங்ஙனம் ஞானவானுகப் பிறந்து அடைவன அறம்பொருளின்பம் வீடுகளாம். முன்னர்க்கூறிய தருமத்தை முக்குற்றம் அறுத்துச் சத்துவகுணத்தில் நின்று அந்தக்கரணசுத்தியாய் விரைவிற் செய்ய வேண்டும். 'புன்னுனிமேனீர் போனிலையாமையென்றெண்ணி-இன்னினியே செய்க வறவினை' என்பது விதி. அங்ஙனம் அறஞ்செய்யப்புகுவோர்க்கு அளவில்லாத தடைகள் அணுகுவது திடம். இதனு

லேயே அதனைவிட்டொழிவது திடசித்தர்களுக்கு அடாது. அறிவே அச்சாகவும் ஒருவர்க்கொருவர் கல்விகேள்விகளை விநுவுதலே வண்டியாகவும் கொண்டு அவ்வவ்விந்திரியங்களுக்குப் பொருத்த முள்ள ஐம்புலன்களென்கிற அசுவங்களைப்பூட்டி ஆத்மாவாகிற சாரதி உண்மை ஞானத்தினால் நடத்து வானெனின், பிறவித்துன்பமாகிய அவ்விடையூறு கள் நீங்குமென்ப.

"மானிடரென்னும் பதமும் வாழ்க்கையென்னும் பதமும் எப்பொருளை யுடையனவென்னுந் துணிபு நன்கு விளங்கவேண்டியிருத்தலின் அவற்றை ஒருவாறு ஆராய்ந்துரைப்போம். முன் பதம் ஆரியச் சிதைவு. மநுவின் மக்களாதலின் மநுஷ்யர்களென வும், மாநுடர்களெனவும், மர்த்தியலோகத்திற் பிறந்த வர்களாதலின் மர்த்தியர்களெனவும், மநுவினிடத்து உதித்தவர்களாதலின் மநுஜர்களெனவும், மநுவின் சம்பந்தமானவர்களாதலின் மானவர்களெனவும், மகி தலத்திலுள்ள வஸ்துக்களையெல்லாந் தங்கள் வசஞ் செய்து கொள்ளுகிறவர்கள் அல்லது பவித்திரமாகச் செய்யப்படுகிறவர்கள் ஆதலின் நரர்கள் எனவும், ஸ்திரீ முதலானவர்களை இரட்சிக்கிறவர்களாகலின் புமாம்சர்களெனவும், பிருதிவியாதி பஞ்ச பூதங் களாற் பிறக்கிறவர்களாகலின் பஞ்சஜனர்களென வும், எல்லாச்செந்துக்களிலும் ஏற்றமானவர்களாத லின் புருஷர்களெனவும் பொருள்படும் பெயர்களும் உள. பின்பதம் அடிசில்-புத்தகஞ்-சேனை-கதவம்-மாலை-கம்பலம் என்பனபோல இங்குப் பலவான் இயைந்த மொழியாய்ப் பெண்டு பிள்ளை பண்ட

பதார்த்தங்களோடு அம்மானிடம் வாழும் வாழ்க்கையைக் குறிக்கும்.

"சுகத சுஜாதி விஜாதிபேதங்களான சராசரங்களில், நன்மை தீமை பகுத்தறியும் அறிவுள்ள மான் முதலிய மிருகங்களிலும் விசேஷித்த பகுத்துணர்வுடைமையாலுந், தந்தையைப் போலிருப்பான் தனையன் என்பதனுல் அம்மனுவைப்போல மகாமதியுடைமை ஆவசியகமாதலாலுந், தீபத்திற் கொளுத்தின தீவர்த்திபோலச் சிறந்தசாஸ்திரலப்தஞானந் தினந்தினம் விர்த்தியாகவேண்டுவது இவனுக்கு இன்றியமையாததாம். இத்தகைய மானிடனுக்கு, ஏழுதாதுக்களாலெழுந்த தூலசூக்குமகாரணத்திரய சரீரங்களோடும் பசிமுதலிய பதினெட்டுக் குற்றங்களோடும் ஈரெட்டுவயதுவரையிற் பாலனுயும், முப்பது பருவம் வரையில் தருணனுயும், ஐம்பது வயது வரையிற் கௌமாரனுயுந், தொண்ணூறு அல்லது இதற்குமேற்பட்ட வயது வரையில் விருத்தாதி விருத்தனுயும் வ ள ர் ந் து வரும்பருவங்களுண்டு.

'வேதநூற் பிராயநூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியுமுறங்கிம்போகு நின்றதுபதினையாண்டு
பேதைபாலகனதாகும் பிணிபசிமூப்புத் துன்பம்'

என்றவாறு மேற்கூறிய நான்கு பருவமும் முடிவுற இவன் சீவிக்கினுஞ் செய்யப்பட்ட பயிரிற் பாதி பதரானுற்போல ஐம்பது வயது நித்திரையிற் போய் விடுகின்றது. சேடமான ஐம்பதை, இதாகிதமறியச் சக்தியற்ற அறியாமைமலிந்த பாலியமும் யவ்வனத்தின் விஷய வாசனையால் உண்டான பிணியும் இப்பிணி நீங்கினபின் இந்திரியர்கள் தலையெடுத்துத்

தத்தமக்கு வேண்டும் விஷயாகாரத்தை அவாவிநிற்கும் நிலையும் மூப்பும் இவ்ற்றாலுண்டாகும் பல துன்பங்களும் விபாகித்துக்கொள்ளுகின்றன. 'பேரிளமையின்பம்பிணிமூப்புச் சாக்காடா - மாறுங்கருவிலமைப்பு' என்ப. இவ்வாறு வர்த்தித்துத் தேறிவரும் மனுஷசமூகங்கள், தந்தொழில் வேறுபாட்டாற் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் வருணங்களாக வகுக்கப்பட்டுப் பிரமசரியங் கிருகஸ்தம் வானப்பிரஸ்தஞ் சந்நியாசமென்னும் நிலைகளின் நிகழ்ந்து அறமுதலிய நான்கையும் அநுபவிப்பனவாம்.

"அறமாவது, மநுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலுமாம். இஃது இல்லறந் துறவறமென இருவகையது. பிரமசரியங் கிரகஸ்தமென்பன அடங்கியுள்ளது இல்லறம். வானப்பிரஸ்தஞ் சந்நியாசம் என்பன அடங்கியுள்ளது துறவறம். இங்ஙனம் வெவ்வேறு நிலையனவாயினும் ஒருவன் அறத்தை அவ்வொவ்வொன்றிலும் ஒழுங்காயடையலாம். முதனிலையனே ஈற்று நிலையினனாகல் முழுப்பிரயாசை. இந்நிலையனை நைஷ்டிகனென்ப.

"பிரமசரியமாவது, பிரமத்தை அனுசரித்தல். பிரமமென்பது வேதம் - முத்தி - தத்துவங்-கடவுள்-தவசு முதலிய பொருள்தருவதாயினும், முத்திக்கு வித்தாய கல்வி கேள்விகளை ஐயந்திரிபறக்கற்றுத் தேறும் நிலைமையென்பது தீர்ந்த பொருள். அங்ஙனங்கற்ற கல்வி நான்குவகை ஆச்சிரமங்களுக்கும் அவசியம் வேண்டற்பாலதாய அறமுதலியவற்றைப் பயக்கும்.

அறம்பொருளின்பமும் வீடும்பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறங்கவலொன்
றுற்றுழியுங்கைகொடுக்குங் கல்வியினூங்கில்லைச்
சிற்றுயிர்க்குற்ற துணை.'

இப்பிரமசாரி, விஷயாந்தரங்களில் தன் ஐம்புலன்களைச் செலுத்தாமல் மனதைத்திரப்படுத்தலை முக்கிய கடமையாகக்கொண்டு பின்கிரகஸ்தாச்சிரமத்தை அடையவேண்டும்.

"கிரகஸ்தாச்சிரமமாவது, நற்குண நற்செய்கைகளுடைய பெண்ணை அறநெறிவழாது உலகநடையையொட்டி விவாகஞ் செய்துகொண்டு வாழ்தலாம். 'அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்-போஓய்ப்பெறுவதென்' என்றவாறு, அனேகம் பெரியோர் இந்நிலையிலேயே இருந்து முத்திபெற்றதாகக் கேள்விப்படுகிறோமல்லவோ? 'இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கு-நல்லாற்றினின்றதுணை' எனவும், 'துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கு-மில்வாழ்வானென்பான்றுணை' எனவுங் கூறி உயர்த்தப்பட்டுள்ள இவ்வில்லறத்திற்குப்,

'பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக — ஆய
அறத்துப்பால் நால்வகையா யாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.'

"இல்வாழ்க்கை - வாழ்க்கைத்துணைநலம் - புதல்வரைப் பெறுதல் - அன்புடைமை - விருந்தோம்பல்-இனியவைகூறல்-செய்ந்நன்றியறிதல் - நடுவுநிலைமை-அடக்கமுடைமை-ஒழுக்கமுடைமை-பிறனில் விழையாமை-பொறையுடைமை-அழுக்காறாமை - வெஃகாமை - புறங்கூறாமை-பயனில சொல்லாமை - தீவினை

யச்சம்-ஒப்புரவறிதல்-ஈகை-புகழ்என இருபது அதிகாரத்தால் விதிவிலக்குகள் ஏற்பட்டன. இத்தகைய நிலையில் நிற்கிறவன்

'நன்னிலைக்கட்டன்னை நிறுப்பானுந்தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் - நிலையினு
மேன்மேலுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந்தான்'.

என்பதனால் முறைப்படி பெற்ற தன் குடும்பமென்னும் இராச்சியத்திற்கு இறைவனாதலால் மேற்குறித்த தருமங்களைச்செய்தற்குமாட்சிமைக் குணங்கள்நிறைந்தவனும், முன்னிலையிற் கற்ற கல்வி கேள்விகளைச் சிந்தித்தல் முதலியவற்றாற் பாதுகாத்து விருத்தி செய்பவனும், அவற்றால் தன் கண்ணுள்ள குற்றங்களை நீக்கி அறம்-பொருள்-இன்பம்-அன்பு-புகழ்-மதிப்பு-பொறுமை-அமைந்த பெரியோரைத் துணைக்கொண்டு சிற்றினன்களைச் சேராமற், தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறமும், அவற்றிற்கிடையூறு புரிபவனது வலி காலம் இடமிவைகளை அறிந்து தெளிந்து வினையாடலும் உடையனாயுஞ் சுற்றந்தழுவலை மறவாமற் செங்கோன்மையைச் செய்து கொடுங்கோன்மையைக் கொய்து வெருவந்த செய்யாது கண்ணோடித் தேசவர்த்தமானங்களைப் பத்திரிகைகளாகிய ஒற்றராலுணர்ந்துஊக்கமும் மடியின்மையும் ஒன்றி உத்தியோக காரியங்களை உஞற்றி இடுக்கணழியாது உஜ்ஜீவிக்கவேண்டும்.

"அன்றியும்* மந்திரித்தன்மையுந் தான் முனியினும் நீங்காது வணங்கி நன்மைவரக்கூறுஞ் சொல்

---

* இவைகள் கல்விகேள்விகளாலே உளவாமாதலின் மனைவிக்கு அக்கல்வி ஆவசியமென்க.

வன்மையுங் கற்பு நீங்காத மனவலியும் வீட்டு வினை செயல்வகையும் எவ்விடத்துப்பொருள்களையும் ஏவலாளர் என்னுந் தூதரால் அறிந்து வருவித்தலுந் தன்னோடு ஒன்றுபட்டுக்குறிப்பறிந்து ஒழுகலும் உள்ள மனைவியுடன், எப்பொருளும் அரணும் உள்ள வீடாகிய நாடதனில்,

'வித்தையே செய்திடுங் குருபீடமொன்னலரை வென்றுவரு
[கின்றதளவாய்,
மித்திரர்கள் பகைவரா மேலவர்கணேயரா விந்தைபுரிதானு
[பதி,
புத்திநலமேசொல்லு மதிமந்த்ரியாவரும் புகழ்கின்ற வசிய
[குளிகை,
புளகமுறுமாதருக் கதிரூபவின்பம் பொருந்தவரு காமதேனு,
நித்தலும் பெருமையே செயுமரசுதன்மொழியை நிலைசெயுந்
[தர்க்கசாஸ்திரம்,
நேர்ந்தமிடியென்கின்ற மாதங்ககேசரி நினைத்ததெல்லாங்
[கொணர்ந்தே
வைத்திடுங் குலதெய்வ நிதியன்றிவேறேது.'

என்னுந்தகையுடைய பொருளென்னும் பொய்யா விளக்கைச் சம்பாதித்து 'ஈட்டுதலுந்துன்பமற் றீட்டிய வொண்பொருளைக் - காத்தலுமாங்கே கடுந் துன்பம்' ஆதலால் அதனை எவ்வாற்றானுங் காத்துச், சகோதரர்களாகிய படை மாட்சியும் வீரமும் உறவினரும் நற்சினேகரும் உடையனாய், உட்பகை புறப்பகைகளைக் களைந்து, பெரியோரைப்பிழையாது, பெண்வழிச்சேராமல் வரைவின் மகளிரை மருவாது கள்ளுண்டல் சூதாடல்களைக் கனவிலுங் கருதாது, உழைப்பினாலும் உண்டி முதலிய வேறுபாட்டினாலும் உடலிற் பிணிகள் வருத்த இடங்கொடாமல், ஒரு

கால்வரினும் அவற்றை அவுஷதப்பிரயோகத்தால் அறுப்பித்து, ஆன்ற உயர்குடிப்பிறப்பில் அநுபந்தித்து, அருமையான அணியை அணிந்து, அரியபெரிய செயல்களை ஆய்ந்தியற்றி, அகங்காரம் அழித்து, அயலவர்களது குற்றங்கண்டவழி அவமதித்துரையாமற் பெருமையமைந்து, சான்ருமைதங்கி, நன்றியில் செல்வத்தை நாடாமல், நவையுற்ற கருமங்களை உன்னவும் நாணித், தன்குடிமையை யுயரச்செய்து, முயற்சியால் வறுமையை வெறுமையாக்கி, அது ஒருகால்வரினும் அதற்கஞ்சி அயலவரிடத்து இரவாமல், ஒழிந்த கயமைகளினின்றும் ஒருவி, உலக இன்பத்தை நுகர வேண்டும்.

'கருமமு முட்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—ஒருநிலையே
முட்டின்று மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.'

'ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.'

"வானப் பிரஸ்தமாவது, ஒருவன் கானில் தன் மனையோடாயினுந் தனித்தாயினும் போய் ஈசுவரத் தியானத்திலிருந்து செய்யும் நிலையாம்.

"சந்நியாசமாவது, இல்லறத்தில் வாழாதுநடந்து எல்லாப்பற்றுகளையுமெறிந்து, பிறப்பினையஞ்சி முத்தி பெறுதற்பொருட்டு அருளுடைமை-புலான்மறுத்தல்-தவஞ் செய்தல்-கூடாவொழுக்கங்களைதல் - கள்ளுண்ணமை-வாய்மையாடல்-வெகுளாமை - பிறர்க்கின்னு செய்யாமை - கொல்லாமை ஆகிய விரதங்காத்து,

நிலையாமையுணர்ந்து, துறவுபூண்டு, மெய்யுணர்ந்து, அவாவறுத்து, ஊழையுன்னி ஞானசீலனாய் நிற்றலாகிய நிலையாம்.

"பொருளும் இன்பமும் மேற்கூறியவாற்றால் விளங்குவனவாம்.

"வீடு 'இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு' என்றதனாற் காண்க. இது சிந்தையுமொழியும் செல்லா நிலைமைத்தென்ப என்பதே.

"இவ்வாறு புருஷார்த்த சூசனம்போன்ற அநேக உபநியாசங்களாக அவர் ஆங்காங்கு வெளியிட்டவைகளைச் 'செவி வாயாக நெஞ்சு களனாகக்-கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்துப்' போதுகழிகையில், யான்முன்கொண்டு அவலம்பித்த புன்னெறியைப் புறங்கண்டு இப்போது நன்னெறியின் நலங்கொண்டு நடந்து வருவதை அப்பிரபு பல்வழியாலும் அறிந்து, ஒரு தினம் அப்பா வேதாசலம்! இப்போது உனக்கு வயதென்ன? எனக்கேட்க, யான் முப்பஃது என்றேன். அதற்கவர் ஆ அப்படியா? இவ்வயதிலே தான் விவாகஞ்செய்து கொள்வது இதம். உனக்கு இளமையில் நடந்த விவாகம் அகிதம். அத்தாரங்காலஞ்சென்றதினாலும் உன் அறியாமையாலும் உன் உடம்பைச் சற்று நலிவித்துக்கொண்டாய். இங்ஙனம் செய்து அநேகர் தம் யாக்கையையும் ஆயுளையும் அதமாக்குகிறார்கள். ஐரோப்பியர் இவ்வாறு செய்வதில்லை. அதனால் அவர்கள் திடகாத்திரமும் பலனும் இன்பமும் அடைந்து சுகசீவிகளாய் வாழ்கிறார்களென்பது சொல்லவும்வேண்டுமா? பாலியமணம் பயனற்றதென்பது அவர்கள்துணிபு. நம்மவர் அதனை

உணராதது நமக்கு நஷ்டமாய் முடிகிறது. அவர்களது நடைநொடிபாவனைகளென்னும் நல்ல படர் கொடிகள் இப்போதுதான் இந்நிலத்திற் படர ஆரம்பிக்கின்றன. இனி நீ தேகத்தை வறிதாக்கிக்கொள்ளல் எனக்கிஷ்டமின்று. பட்டிமாடுபோற் கெட்டலையாது கட்டென்னுங்கடிமணம் மனித சமூகங்களுக்கு வகுக்கப்பட்டுளது. நீ மணத்தை மருவாதுவாழ்வது நின் மனதிற்கும் என்னுள்ளத்திற்கும் மகிழ்வைத் தராது. நின் சீவனார்த்தத்துக்கு வேண்டுவது என் சீவனுந்தம் வரையிலும் அப்பாலும் லோபமுறாது. இதையிட்டு நீ வருந்தலொழிக. இதுகாறும் நீ தேடின கல்விப் பொருளே உன்னையும் நின்குடும்பாதிகளையுங் காக்கச் சால அமையும். உனக்கு வேறுவிதத்திலும் ஏற்ற முயற்சி தேடிக்கொண்டு இருக்கின்றேனென நம்புக என்று என்னுள்ளம் பரவசமாக உரைத்தார். அப்போது மணமென்றால் வாலிபர்மனம் மகிழும் இயற்கையாதலின், யான் அதற்குச் சம்மதித்தமையை முகக்குறியாற் காட்டி வணங்கி வாளாநிற்கப், பின் என்வதுவைக்கு வேண்டு முயற்சிகள் நடந்து திரிசிரபுரத்தினின்று ஒரு கன்னிகையை வருவித்துக் கலியாணஞ் செய்வித்துக்கொடுக்கப்பெற்றேன், அவள் வனப்புடையவளாயினும் கல்வியழகு பூச்சியம். கபடு சூதுகண்டறியாள். குடித்தனப்பாங்கு குறைவறக்கற்றவள். எவரோடுங் கலந்துறவாடும் இயற்கையள். வருமுன்காக்கும் வகையறியாள். வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் நீர் என நினைக்கும் பேதமைக்குணம் மிகவுமுடையவள். பாலியையாதலால் வேடிக்கை பார்க்க மிகுந்த விருப்பமுள்ளாள். ஆயினும் என்மனோபீஷ்டப்படி இல்லறம் நடத்தி வந்தாள். கற்புநிலையை

அவளிடத்திலேதான் யாருங்கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை யான் பின்னர்க்கண்டேன். பருவம் பதினைந்தாயினும் இருபதென்னும் படியான தோற்றமுள்ளவள். இன்னதன்மையாளுடன் பிரபுவின் வீட்டுக்குச் சுமார் ஒரு மைல் தூரமுள்ளதோர் குடிக்கூலி மனையில் வசித்து அவர் அளிக்கும் மாதநிவேதனமாகிய பதினைந்து ரூபாய் கொண்டு பதினைந்து வயதுள்ள சின்னையனென்னும் ஒரு பையனை வேலையாளாயமர்த்தி வாழ்ந்து வந்தேன். அகத்தில் அதிக வேலைவிழுமானால், பிரபு அவர்களுக்கு என்றாற் கொண்டுபோய் அமர்த்தப்பட்ட இருபத்தைந்து வயதுள்ளவனாகிய நந்தியென்னும் பெயருள்ள சுயம்பாகி வந்து செய்துவிட்டுப்போவான். இங்ஙனம் இருப்புழி, என்காதலியாகிய விசாலாட்சி, கடிமணமான பதினெட்டாமாதம் ஒரு காதலனைக் கருவுயிர்த்தாள். அவட்கு மருந்து முதலிய செய்தூட்டவும் உபசரிக்கவும் அவளைச் சேர்ந்த பந்துக்களாயினும் என்னைச் சேர்ந்தவர்களாயினும் ஒருவருமில்லை. தன்னைப்பெற்றவர்களை இழந்து சிற்றன்னையால் வளர்ந்துவந்தவளுக்கு எல்லா உதவிகளும் எதிர்வீட்டுப் பெண்டுகளாலியன்றன. 'திக்கற்றவளுக்குத் தெய்வமேதுணை' 'தந்தைதாய் சோதரருற் றாரையெல்லாங் கைவிடுத்துத் தன்னைச்சார்ந்த பைந்தொடியை யனையவர்போலாதரிக்கக் கணவனுக்கே பரமாமாதி அந்தமில்லான் முதற்றெய்வம் பதியிரண்டாந் தெய்வமென வவரைப் போற்றிச்சிந்தைதனி னினைந்தொழுகுஞ் சேயிழை பூவையர்க் கெல்லாந் தெய்வமாமே.' 'ஆருமற்றதே தாரம், ஊரிலொருவனேதோழன்' என்றவாறு நினைத்து இருவரும் சுகித்துக் கல்லாத இல்லாளுக்கு

யானேகல்விகற்பித்தும் எனக்கு வித்தியா குருவாகிய பாபநாச பண்டிதர் பாஞ்சாலதேசத்திற்குச் சென்றமையால் ஒழிந்த வேளைகளிற் தனியாய்ச் சாஸ்திர ஆராய்ச்சி செய்தும் வருகையில் ஒரு தினம் பிரபு அவர்கள் வீட்டிற்கேகிக் கிரககிருத்திய முதலிய வேலைகளிற் கவனித் திருக்குமென்னை அவர் அழைத்துத் தம்பி! இச் சென்னைநகரைவிட்டு அன்னிய நகர்க்குச்சென்று ஒரு வருஷம் யான் வசித்துவரவேண்டிய அவசரம் எனக்கு இன்று வந்த கடிதத்தால் தெரிகின்றது. போய்வராமலிருக்கக்கூடாது. அந்நகர் சிங்கப் பூரென்பது. அதற்குச் செல்லும் மரக்கலம் வங்கநாட்டின் வழிச்செல்லும். இக்கலம் இன்ருே நாளையோ இக்கரையை அடுக்கும். காலவரையறை தெரியாது. என்மனைவி மக்களை எனது சகோதரர் முதலியவர்களிருக்கும் பெங்களூர்க்கு அனுப்பசச்சித்தமாயிருக்கிறேன். உன்னைப்பிரிந்து தனியே நான்போகப் பிரியமில்லேன். உன் மனைவி மக்களோடு நீ வருவதாயிருந்தால் என்னுலொரு தடையில்லை. எங்கிருந்தாலும் உனக்கு மாத நிவேதனஞ் சேரும். ஆதலால் நீ யோசித்து நாளைக்கு வந்து சொல்லென என் காதில் நாராசம்பாய்ச்சினது போல மனம் பகீரென்னப் பதைத்துத் துடிதுடிக்கக் கேட்டு, ஐயா, நீரைவிட்டுமீன்பிரிய நினைக்குமா? அன்னதாதாவாகிய தங்களைவிட்டு என்னவிதமாய்ச் சீவிப்பேன்? தங்கள் நிழல் தங்களைவிட்டு நீங்குமா? எனக்கூறி விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்கு வந்தேன். அப்பொழுது என் மனையாள் அண்டைவீட்டு அபிராமியம்மாளிடத்திற் சிறிதுகடன்வாங்கிக் 'காதுக்கிட்டால் கண்ணுக்கழகு' என்பதாகப் பிள்ளை நகை

கள் சிறிது செய்வித்துப் பிராயமூன்றுள தன் குழந்தைக்குப் பூட்டிக் கண்களிகூர்ந்து நிற்கக்கண்டு, இந்நகைகளுக்குப் பொருளேதெனக் கடுகிக்கேட்க, அவள் அண்டைவீட்டு அம்மாளிடங் கடன் இருபது ரூபா வாங்கிச் செய்வித்தேன் என்றுள். ஐயோ, கடன் வாங்கி உடைமை செய்வது கற்புடையார்க்குக் கனக் குறைவு. 'தாளாளனென்பான் கடன்படாவாழ்பவன்' 'கடமுண்டு வாழாமை காண்டலினிதே' என மேலோர் கூறிய நீதிமொழியறியாயா? என்று சிறிது சினந்துகொண்டு, அப்பால் பிரபு அவர்கள் கூறியவற்றையெல்லாஞ் சொல்லி, நீ உன் சிறிய தாயாரிடம் போயிருக்கச் சம்மதியா என்று கேட்க வாய்திறக்கு முன், நான் உம்மை? விட்டு ஒரு கணமேனுந் தனித்திருக்கச் சம்மதியில்லை யென்றுங் கப்பலேறிக் கடற்காட்சி யனைத்துங் கண்டுகளிக்க வேண்டுமென்றுஞ் சிங்கப்பூர் என்னுஞ் சிறந்த நகரில் அநேக விந்தையான வஸ்துக்களிருத்தலினுலும் அவைகளையெல்லாம் பார்க்கும் அவா மிகவும் எனக்கிருக்கிறதென்றும் இவ்வரிய கண்மணியாகிய கான்முளையையும் நீர் எவ்வாறு பிரிந்திருக்க மனம் ஒத்திருக்கின்றீரோ எனவுங் கடுகடுத்துக் கூறினதுமன்றிப் பிணங்கி அன்று பகல் உணவுங் கொள்ளாதிருந்தாள். இங்ஙனம் இருக்கையில் என் சிநேகனுகிய நந்தி யென்பவன்வந்து என்னை அழைத்தான். அவனோடு நடந்த சங்கதி சொல்லி நீ சிங்கப்பூருக்கு வரச்சித்தமாயிருக்கிறையே உன் மனைவியும் வருகிருளா எனக் கேட்டேன். அதற்கவன் ஆம் வருகிருள் என்றுன். உடனே இச்சொல்லைக் கேட்டுக்கொண்டு சற்றுச் சந்தோஷித்த முகமுடையவளாகிய என் மனைவி

பக்கல்போய் உன்னிஷ்டப்படியே வரலாம் என்று சமாதானப்படுத்தி, நந்தியோடு யஜமானர் வீட்டுக்குப்போய் வேண்டிய சாமான்களெல்லாஞ் சம்பாதித்துத் தயார் செய்து, அவரிடத்தில் 30 ரூபாய் கடன் வாங்கிவந்து அபிராமியம்மாளுக்கு இருபது ரூபாய் கொடுத்துவிட்டு ராத்திரி வீடு வந்து சேர்ந்தேன். எங்கே இன்னுங் கடன் வாங்குகிருளோ என்னும் அச்சத்திஞலும், வாங்கிஞற் றீர்க்கச் சக்தியின்மையிஞலும், அந்த அம்மாளுக்குக், கடன் தீர்த்த சங்கதியை என் மனைவியோடு தீர்ப்பாகச் சொல்லவேண்டுவதில்லையென்று திட்டம்பண்ணி, யானும் அவளிடஞ் சொல்லாமல் இருந்துவிட்டேன்.

"மறுநாளுடன் இருநாளும் மரக்கல வரவை எதிர்பார்த்தும் வரவில்லை. இங்ஙனம் எதிர் பார்த்ததில் எப்போதும் அம்மரக்கலம் வழக்கமாய்க் காலை ஆறுமணிக்கு வருகிறதென்பது தெரியவந்தது. நாலா நாள் காலை ஆறுமணிக்குக் கடற்கரைக்குச் சென்று ஏழுமணிவரையுங் காத்திருந்தும் நாவாய் வராமையால் வீட்டுக்குவந்து இன்றும் பிரயாணம் இல்லையென்று என் மனைவியோடு சொன்னேன். அதற்கவள் ஐயோ, இன்று வெள்ளிக்கிழமையும் ரதோற்சவமும் ஆதலால் திருவொற்றியூர்க்கு அபிராமியம்மாளும் இன்னும் சில பெண்களும் ஆடவர்களின்றித் திருவிழாப் பார்க்கச் செல்லுகிருர்கள். நான் குழந்தைக்காகச் செய்துகொண்ட பிரார்த்தனையுஞ் செலுத்தி வேடிக்கையும் பார்த்து மாலைக்குள் வந்துவிடுகிறேன். அவர்கள் நல்ல துணையாக இருப்பதிஞற் கூடச்சென்று வருகிறேன். தயவுசெய்து செலவு கொடுங்கள் எனக் கேட்டுக்கொண்டாள். அதற்கு

யான் 'ஆலயந்தொழுவது சாலவுநன்று' எனச் சொல்லியிருந்தாலுந், திருவிழாக்காலங்களிற் பெண்கள் போய்த் தெய்வந்தொழுவது தகாதென்றும், ஜன நெருக்கில் களவு தீமைகள் அக்கிரமங்கள் நடக்கின்றனவென்றுஞ், சாதாரண காலங்களிற்போய்த் தரிசிப்பது தகுதியென்றுஞ் சொல்லினதைக் கேளாமற், போகவேண்டுமென்று பிடிவாதம் பண்ணினமையால், அவளுக்குக் கைக்குச் செலவுக்கென்று ஐந்து ரூபாய் கொடுத்து, மற்றதைப் பெட்டியில் வைத்துப் பூட்டி, அவள்காண எப்போதும்வைக்கும் இடத்திற் சாவியை வைத்துத், தாய் பிள்ளைகள்போலப் பழகின அப்பெண்களோடு அவளையுங் குழந்தையையும் ஒரு வண்டியிலேற்றி அனுப்பிவிட்டு வீட்டின் வெளிக் கதவைப் பூட்டி, வந்த வேலையாளான சின்னையனிடங் கொடுத்து உன் யஜமானி மத்தியானமேனும் மாலையிலேனும் இவ்விடம் வந்து சேர்வாள். அல்லது யானுவது வருவேன். அதுவரையிலும் இங்கேயே இரு என்று திட்டப்படுத்தி யஜமானர் வீட்டுக்குச் சென்றேன்.

"அங்குச் சுமார் மூன்றுமணிக்குப் பிரபு அவர்கள் என்னை யழைத்து அப்பா! நாம் சிங்கப்பூர்க்குப் போய் எந்தவிதமாய் மீள்வோமென்றிருந்த இன்னலின் வாயில் மண்விழுந்தது. அங்குப்போகப் புறப்பட்ட துரையவர்கள் இலங்கையிலிருந்து இப்போது இரண்டுமணிக்கு இத்துறையடுத்த நாவாயில் வந்து இறங்கிக் கடலோரத்தில் உள்ள ஒரு பங்களாவில் வசிக்கிறதாகவும் அங்கு என்னை வரும்படியாகவும் அவர் எழுதிய கடிதம் ஒன்று வந்தது. அக்கலம் இன்று காலை ஆறுமணிக்கு இத்துறை சேரவேண்டு

வது. காற்று இசைவின்மையால் தாமதித்து வந்தது. அதிற்முன் நாம் ஏறிப்போக வேண்டியிருந்தது. அது மாலை ஐந்துமணிக்கு இங்கிருந்து வங்கநாட்டுக்குப் போகப் புறப்படாமல் நில்லாது என்று நந்தியும் அகம் பூரிக்க அமுததாரைபோல மொழிந்து, நந்தியிணிடத்துச் சரியாய் ஐந்துமணிக்குப் பண்டி தயார் செய்யும்படி வண்டிக்காரனுக்குச் சொல்லக் கட்டளை இடவே, அவனும் நல்லதென்று சொல்லி வெளியே போய்விட்டான். பிரபு அவர்கள் சொன்னபடி பண்டி வந்தவுடன் உடுத்திக்கொண்டு என்னையும் உடன்வருகிறையா என, நானும் வருகிறேனென்று, இருவரும் வண்டியேறிக் குறித்த பங்களாவுக்கு அதிக விரைவிற்சென்ருேம். பிரபு அவர்கள் அந்தத் துரையவர்களைக்காண மாளிகைக்குட் சென்றபின், நான் தாழ்வாரத்தில் உலாவிக்கொண்டு நிற்கையிற் பக்கத்து மாளிகையின் வெளிச் சுவரில் ஒரு விளம்பரம் ஒட்டப்பட்டிருப்பதைக்கண்டு ஓடி வாசித்துப் பார்த்தேன். அதில் இன்னதெருவில் இன்னுரதுவீட்டின் மேற்றளத்தில், இன்ன பெயருள்ள துரைமகளொருத்தி இன்று மாலை 6 மணிதொடங்கி 8 மணி வரையில் வெகு விநோத நாட்டியமும் எவரும் என்றும் பார்த்திராத ஆச்சரியமான பல ஜாலவித்தைகளும் நடித்துங் காட்டியும் மகிழ்விக்கப் போகிறதனுல், இஷ்டமுள்ளவர்கள் பிரவேசதனம் அரை ரூபாய் கொடுத்து விட்டு உட்பிரவேசித்துக் கண்டு களித்து வரலாமென எழுதியிருந்தது. அதை அக்கணமேபோய்ப் பார்க்கவேண்டும் என்னும் அவா என் பிடர்பிடித்துந்த, அக்காலை என் கையிற் பணமில்லாமையால் வண்டிக்காரனிடத்துக் கேட்டு வாங்கிக்

கொண்டு, பிரபு அவர்கள் என்னை எங்கேயென்று கேட்கில் ஏதோ அவசரகாரியமாய் அடுத்த வீதிக்கு ஏகியிருக்கிறனென்றும் நாளைக்காலை தங்கள் வீட்டிற்கு வருகிறதாய்ச் சொன்னனென்றும் சொல்லென்று சொல்லி, அவ்வேடிக்கை நடக்கும் வீடுதேடி விரைந்தோடிக் கண்டுபிடித்துப் பிரவேசச் சீட்டுப் பெற்று உட்புகுந்து நாட்டமும் மனமும் பாட்டோடு கூடிய நாட்டியத்திலும் நயமும் வியப்புமுள்ள நானுவித ஜாலத்திலுஞ் செலுத்திப்பார்த்து வீட்டையும் பிரபு அவர்களையும் மறந்து யோகிபோல அசைவறவிருந்து அதிசயித்துப் பொழுதுபோக்கி, அவை முடிந்தபின் மெய் வெயர்த்து வெளியில் வந்தேன். அப்பொழுது எட்டுமணி லொட்டு லொட்டென அடிக்கக்கேட்டு, அந்தகாரம் எந்தத்திசையையுங் கவளீகரிக்க, முகிற்குலம் நீலவிதானம் போல ஆகாயத்தை மறைக்க, மின்னலென்னும் விளக்கு விட்டு விட்டுப் பிரகாசிக்க, அதனொளியால் வழிகண்டு கொண்டு என் வீடு நோக்கி விரைந்து பறந்து நெருங்கிக், கதவைத்தட்டி விசாலாட்சீயென அழைக்கவே, உள்ளே ஏனென்ற சத்தமெதுவும் உதிக்கவில்லை. பின்னும் உரக்கக் கூவிப் பலமாகக் கபாடத்தைத் தட்டினேன். அக்கதவம் உட்பூட்டுள்ள தாதலின் வெளியிற்சென்ற மனைவி வந்ததும் வராததும் அறியேனே. ஆ! இதென்ன அபூர்வம்! அவள் உள்ளிருக்கில் அயர்ந்து நித்திரிக்கினும் சற்று அரவங் கேட்டால் அலந்து எழுவாளே. ஐயோ! ஆலயத்துக்குப்போனவள் இன்னும் இங்கு அணுகவில்லையோ? இதென்ன அவகாலம்! வீட்டில் ஒன்றியாக இருக்கப்பயந்து ஒருவேளை அண்டைவீட்டிலிருக்கிறளோ? வேலைக்காரச் சிறுவன்

எங்கேபோனான் ? இவ்விவரம் நமக்கொன்றுந் தெரிய வில்லையே! என எண்ணி, ஆரம்பஞ்செய்து விடாது பொழியும் மழையைப் பாராமல் அண்டை வீட்டிற் கோடிக் கதவைத் தட்டி உள்ளிருந்தவர்களை அழைத் துக் கேட்டேன். அதற்கவர்கள் ஐயா! உம்முடைய மனைவி கோயிலில் ஜனநெருக்க மிகுந்திருந்தமையால் எங்களைவிட்டுப் பிள்ளையுடன் பிரிந்துபோய்விட்டாள். அங்கெங்கும் வெகு நேரவரையில் நாங்கள் தேடியுங் கண்டோமில்லை. அங்ஙனம் ஆயினதினாலேதான் இவ் வளவு நேரஞ்சென்று நாங்கள் வரலாயிற்று. வந்து காலமணிநேரம் இருக்கலாம். மின்னிருட்டு எங்களை வெருட்டிவந்தது, வந்ததும் உம்முடைய வீட்டின் கதவைப் போய்த் தட்டிப்பார்த்தோம். உள்ளே ஒரு வருமில்லையெனக்கண்டு ஊக்க மழிந்து ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டு இருக்கிறோம். என்ன செய்வோம்? எங்கள்மேற்குற்றம் ஒன்றுமில்லை. இங்கு அண்டை அயலிற் போய் விசாரிக்கலாமென்றால் அந் தகாரமும், மழையும் வழிவிடவில்லை. பாவம்! பால கனுந் தாயும் இக்காலம் எங்கேநின்று ஏங்குகிறார் களோ? எவர் சதிசெய்தாரோ அறியோம், என்று சொல்லக்கேட்டு பிரமைகொண்டு பெருமூச்சுவிட்டுக் கைகால்கள் நடுங்க மெய்வெயர்க்க நெஞ்சு படபட வென்று துடிக்க நெடுமரம்போல விறைத்து நின் றேன்.

"அப்பாற் சற்றுத் தயிரியங்கொண்டு, கோயி லில் நடந்து அலைந்த வருத்தத்தால் ஒரு வேளை பெருந் தூக்கம் பிடித்துத் தூங்குகிறாளோவென எண்ணி மிகுந்த கோபாவேசத்துடன் மீண்டும் வந்து என் வீட்டின் படிக்கட்டிலிருந்ததோர் பெருங் கருங்கல்

லைப் பெயர்த்தெடுத்து மிகு பலங்கொண்டு ஓங்கித் தாக்கவே, கதவு படீரெனத் தாளொடிந்து பறந்து திறந்தது. அக்கணத்தில் பொட்டென உள் நுழைந்து சுற்றகமெல்லாஞ் சுற்றிப்பார்த்தும் காணு மற் பெட்டி பேழைகளெல்லாஞ் சோதித்தேன். அவற்றிலிருந்த என் மனைவியின் ஆடையணிகளும் என் உடைகளுங் கைப்பெட்டியில் வைத்த ஐந்து ரூபாயும் அதன் சாவியும் காணப்பெருமல், மிக்கதுய ருடன் யோசனு சிந்தையனுய் என்னறையில் இட்டி ருந்த கட்டிலில் உட்கார்ந்து சாய்ந்து மேல்நோக்கி விழித்துக்கொண்டிருந்தேன். அப்போது வீட்டுக்குள் யாரோவருகிற காலடியரவங் கேட்டதனுல்என்மனைவி யென்றெண்ணித் திடீரென எழுந்து ஓகோ நாம்வரும் போது வெளிக்கதவைச் சாத்தாமல் அல்லவோ வந் தோம் என எண்ணி, ஏற்றின விளக்கையெடுத்துக் கொண்டு வெகு விசையாயோடினதனுலும் அடிக்கும் காற்றினுலும் அத்தீபம் அவிந்துபோக, எதிரில் நின்ற தூணில் தலை படீரென முட்டிப் பக்கத்தில் நின்ற கழு தைக்குட்டியாலிடறுண்டு, முழங்கை முழங்கால்களிற் காயம்படக் கீழேவிழுந்து, பயந்து அயர்ந்து எழுந்து, வெளிவாசற்கதவை நிதானித்துப்பார்க்கையில், மழை க்கு மறைவிடந்தேடி ஒதுங்கின வண்ணுன் கழுதை ஒன்றும் அதன் குட்டியும் யான்விழுந்த சத்தங்கேட்டு ஓடுகின்றனவெனக்கண்டு, ஐயோ! இதுவுந் தெய்வ சங்கற்பமே என்று கதவண்டைபோனபோது, வெளித் திண்ணையில் படுத்திருந்த நாயொன்று சள்ளுச்சள் ளெனக் குரைத்துக்கொண்டு ஓடியது. ஐயோ! நம் வீட்டிற் கழுதையும் நாயும் நுழையும்படி காலம் வந் ததே, மனையாளில்லாத வீடு மயானமென்பார்களே

அது என் வீட்டுக்கே அடுத்தது. என்காதலி எங்கு நிற்கிருளோ? என்ன நினைக்கிருளோ? யாரால் வருத்தப்படுகிருளோ? யார் வதைக்கிருர்களோ? என்னை நினைக்கிருளோ? எவன் கற்பழிக்கிருனே? மதலையோ வாய்விட்டலறுமே! மழையில் நனைகிறதோ! வயிற்றுக்குப் பால்கிட்டினதோ? அல்லது யார் வீட்டில் ஒதுங்கி அன்னம்வாங்கி அருத்துகிருளோ! யாதொன்றுந் தெரியவில்லையே தெய்வமே! என்று எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கித் தியங்கி மயங்கிக் கண்ணீர்கலங்கி, வேதிகையிலிருந்து வீதியைப்பார்த்து விழித்துக்கொண்டு நாமேன் அவளுக்குத் திருவிழாப் பார்க்கப்போகச் செலவு கொடுத்தோம்? அதனுலேயே இத்துன்பங்களெல்லாம் வந்து சம்பவித்தது. இக்குற்றம் நம்மேற் சுமந்திருக்கிறது. 'பெண்ணறிவென்பது பெரும் பேதமைத்தே' என்பதனுல் அவள்மேற் பிழை அணுவளவுமின்று. நாம் இவ்வளவுகற்றும், கற்றறி மோழையானேமே, கற்றதற்குப்பயன் அவ்வழி நிற்றலன்றே? பெண்கள் சொல்லக்கேட்டு அவ்வழி நடப்பதும் நடத்துவதும் பிழையென்று பெரியோர்பேசியது பிசகாமா? சீதைசொல்லைக் கேட்டுச் செம்பொன் மானைத் தொடர்ந்த ஸ்ரீராமன் செய்தியுஞ் செப்பியவள்கதியும் என்னவாயின? என்று என்னை நானே வெறுத்துக்கொண்டு எப்போ விடியும்? என்று அவளையுங் குழவியையும் பார்ப்போமென அவ்விரவெல்லாம் விழித்தகண் மூடாமல் வீதிகாத்தேன். குளிர் உடலை நடுக்கியது. கொண்டல் காற்றினுல் குலைந்தது. கொட்டுமழை திட்டெனநின்றது. குழுவான வான்மீன்கள் குறைந்தன. கோழிகூவியது.

சாணந்தெளிக்கப் பக்கத்து அகத்துப் பெண்கள் வெளியில் வந்தார்கள். உடனே நான் அது கண்டு எழுந்து உடைந்தகதவை ஒருவாறு சரிப்படுத்திச் சாத்தி வெளிப்பூட்டிட்டு அம்மாதர்களை விசாரித்தும் பயனின்றிப் பிரபு அவர்கள் கிரகம் போய்ச்சேர்ந்தேன்.

" அவர் வீட்டின் வெளி வாசற்படியை மிதிக்கும் போது கூடத்தில் அநேகர் கும்புகூடிக் கூம்பினமுகத்துடன் கொசுகொசென ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள். ஐயோவென்றலறுங்குரல் உள்ளே நின்றுவந்து என்செவியைத் துளைத்துச் சென்று ஏங்கிநைந்த சிந்தையை இன்னும் நலியச் செய்தது. அப்பாற் சென்றுபார்க்கையிற் பிரபு அவர்கள் தம்பாரி பெருந்துக்கமாய்க் கண்களினின்று பேராறுபோல் நீர் பெருக்கி முகங்கறுத்திருக்கவும், பிள்ளைகள் பெருங் கூச்சலிட்டழவுங், துணிகளால் மூடப்பட்டு நீளக்கிடத்திய தேகத்துடன் காணப்பட்டார். கிட்டிநின்று முகத்தை உற்றுப்பார்க்கையிற் பற்றிரண்டினையும் அற்று இப்பாரினை நீத்தாரெனத்தேறி, என் பாழ்த்த வயிறு பகீரெனப் பரிதபித்தேன். ஐயோதெய்வமே என் அன்னதாதாவை அந்தரஞ்சேர்த்தையே, இது உனக்கு அடுக்குமா ? ஆருமற்ற என்னை இனி யாவர் ஆதரிப்பர் ? 'பட்டகாலிலே படுங் கெட்டகுடியே கெடும்' என்பதன் பொருள் என்வயின் பலித்ததே என்று பகர்ந்து பக்கத்தில் உட்கார்ந்தேன். உடனே என் அயலிலிருந்த ஒருவர் ஐயா நீரேன் அழுகிறீர் ? கடந்த காரியத்தை நினைந்தழுதால் மீண்டுங் கைகூடி வருமா ? என்ன, நான், ஐயா நடந்த சங்கதியென்ன ? இவ்வாபத்து இவர்க்கெப்படிவந்தது சொல்லும்,

என்று பரிந்துகேட்க, அவர், நேற்றிராத்திரி எட்டு மணிக்குமேல் இவர் ஒரு துரைமகனைக்கண்டு பேசி விட்டு வண்டி ஏறிவரும் வழியில் வானமெங்கும் இருண்டு மழைதிரண்டுமின்னி இடித்த முழக்கத் தினல் ஓர்எருமைக்கடா மருண்டுகூவி எதிரில் ஓடிவர, அதைக்கண்டு பண்டியிற் பூட்டிய துஷ்டக்குதிரை, வாயுவேகமாகச் சாரதிக்கடங்காமல் ஓடி ஒரு பாலத்தின் முனையில் நட்டகல்லிற் பண்டியின் காலை மோதவே, பண்டியதிர்ந்து பிரபுவைச் சடுதியில் ஆழ்ந்த கழியினீரில் வீழ்த்தியழுத்தியது, உடனே தப்பின சாரதியும் வழிப்போக்கரிற் சிலருங் கூடி விளக்குக் கொண்டு தேடி எடுத்துப் பிணமாக வீட் டிற்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அப்பண் டிக்கு மேற்கவசம் இல்லாமையால் இவ்வாறு ஆகியது. சாரதி அசகாயம்பட்டுத் தப்பிப் பிழைத் தான். பண்டியோ ஒடிந்து பாழ்பட்டது. இவ ருடைய தாயாதிகள் இன்னும் வாராமையால் பிரேத மெடுக்கத் தாமதமாயிருக்கிறது என்று சொல்லக் கேட்டு, உகிர்ச்சுற்றின்மேல் உரல் விழுந்ததுபோற் றுடித்துப் பிரலாபித்து, ஐயோ இதென்ன கொடுமை! என் துக்கத்தைச் சொல்லிப் பரிகரிப்பிக்க வந்த இடத் திற் பெருந்துக்கங் கேட்கப் பெற்றேனேயென்று இரங்கி, யாதொன்றும் பேசாமல், இதுவரையில் என் மனைவி வீட்டிற்கு வந்திருப்பாளென எண்ணி, நந்தியை நமது வீட்டிற்குப் போகச் செய்து அச்சங் கதியைத் தெரிந்துகொள்ளலாமென, அவனை அங் கெங்குந் தேடியுங் காணாமையால், எங்கே போனு னென எதிர்ப்பட்ட பணிப்பெண்ணை வினவினேன். அதற்கவள் ஐயா! நந்தி நேற்று மூன்று மணிக்கு இவ்

வீடு விட்டுப்போனுன். எங்குந் தேடினேம். காண வில்லை. அவனுடைய வீடு பூட்டப்பட்டிருக்கிறதாம் என்று சொல்லவே, என் மனம் இருதலைக்கொள்ளி யெறும்புபோலத் துன்புற்றுச் சுருக்கேறி ஒன்றும் நினைத்து ஊர்ஜிதப்படுத்த ஒருப்படாமல், ஊசலாடி உலவிச் சவம் மயானம் போகிறதற்குள் மூன்று தடவை என்வீட்டிற்குப் போய்ப்பார்த்து மீண்டுவந் தேன். வந்து சேராத மனைவியை மனை கொடுக்குமா? மாண்டுபோன பிரபுவை மயானத்திற் கொண்டு போய் வல்லெரிமடுத்துச் சாம்பராக வைத்து வந்தது முதற் றினமானம், ஒற்றியூர்முதலிய சுற்றூரெல்லாஞ் சென்று தேடியுங் காணுமற், பிரபு அவர்கள் வீட்டில் வந்து உண்பதும் உறங்குவதுமாக இருந்து, பதிஞரும் நாள் உத்தரகிரியை நடத்தின பின், பிரபு அவர்களு டைய தாயாதிகள் கூடி அவர் தேடிய ஐம்பதிணுயிரம் ரூபாயையும் அணிகலன்களையும் விபாகித்துக் கொண் டார்கள். அதிற் றருமகைங்கரியத்துக்கென்று எடுத் துப் பொதுக்கட்டி வைத்த இரண்டாயிரம் ரூபாயில் என்னை வந்தநாள் முதல் இதுவரையில் தம் அருங் குழவிகளில் ஒன்றெனமதித்து அன்புடன் அன்ன வஸ்திராதிகள் அளித்து ஆதரித்து வந்த என் அன்னை யும், உத்தமகுணங்களில் ஒப்பாருமில்லாத கற்பரசி யுங், காலஞ் சென்ற கண்ணிய நிறைந்த பிரபு அவர் கள் சுபத்தினியும் ஆகிய சத்தியவதியார் அத்தாயாதி களைச் சம்மதிப்பித்து, இருநூறு ரூபாயும், என் சங்க திகளெல்லாங் கேட்டு மனமிரங்கித் தம்பாகத்தில் ஒரு நூறு ரூபாயையும் எனக்கருள் செய்து, இத்தொகை யைக் கொண்டு ஒரு வர்த்தகஞ்செய்து புத்தியாய்ப் பிழைத்துக் கொள்ளென்றும், இனிநானிங்குவசியாது

குழந்தைகளுடன் என்தாய் வீடுபோய்ச் சேர்வே னென்றுங் கூறினர். அதுகேட்டு நான், என் மனைவி யைத்தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமென்னும் பெரிய நோக்கத்தில் அறிவு சென்றிருந்தமையாற், றங்களுடன் வந்து ஊழியஞ்செய்து மற்றைக் காலத் தையுங் கழிக்கிறேனென்று சொல்ல வாயெழாமல், அங்ஙனமாகட்டுமென்று ஒப்புக்கொண்டு, கிடைத் ததே பெரும்பாக்கியமென்று உள்ளுக்குள்ளே நினைத்து, அத்தொகையை வாரித் துணியில் முடிந்து சுருட்டித் தோள்மேற்போட்டுக்கொண்டு சரேலென வீடுவந்து நுழைந்தேன். அந்தோ! உடன் வருகிறே னென்ருல் அம்மாதரசியார் ஒப்புக் கொண்டு அழைத் துப்போவாரே! இதுவரையிலும் எவ்வளவோ பெரு மையடைந்திருப்பேனே! என்னேழமைப் புத்தி இருந்தவாறு என்னே என்னே! பெண்டாட்டியாசை என்னைத் திண்டாட்டப்படுத்திற்றே! அல்லது, அந்த அம்மாள் சொன்னவாறு ஒரு சிறு வர்த்தகந்தான் செய்துஜீவித்தேனு? செய்தீவினையே எனக்குத் தீங்கு இழைத்தது. சென்றதைக் கருதிச் செய்வதென்ன? எப்போது விவசாய வர்த்தகாதி முயற்சிகளை வெறுத் தேனே அப்போது முதல் இது வரையிலும் வறியனு யிருக்கிறேனென்பது வகுத்துரைக்கவும் வேண் டுமோ?

" இது நிற்க முந்நூறு ரூபாயையும் முடிந்துவந்த நான், அபிராமியம்மாள் வசம் மாசம் எட்டு ரூபாய் எனப் பேசிக்கொடுத்து அன்னமுண்டு போனதை யெல்லாம் நினைந்து பொருமிப் புலம்பிச், செய்வதுந் தவிர்வதுந் தெரியாமல், நமது வேலைக்காரச் சிறுவன் ஏதேனும் மோசஞ் செய்தானே? அல்லது, நந்தி இவ்

லூரில் இல்லாமையால், அவன் நய வஞ்சகஞ் செய்து அவளைக் கூட்டிக்கொண்டு சென்றானே? கப்பலேறிச் சிங்கப்பூருக்குப் போக அவனுக்கு அவ்வளவு தீரம் வருமா? அவன் இல்லாளுடையவனல்லவா? கண்ணு ரப் பாராமல் ஒருவன்மேற் கள்ளம் நினைக்கலாமா? பிரபு அவர்கள் காலஞ் சென்ற அன்று இராத்திரியே, இங்கு இனி நமக்கென்ன இருக்கிறதென்று தேறி இல்லாளுடன் எங்கேனுஞ் சென்றானே? ஏதும் அறியேனே! என்ன செய்வேன்! சின்னையன் செய்தி இதுவரையிலுந் தெரியாமையாற் றீராச் சந்தேகம் அவன்மேல் உளது. அவனைக் கண்டுபிடித்தால் நமது கவலைக் கடலுக்கு ஒரு கரை காண்போம். நாம் வீட்டில் வைத்துப்போனபடி அவன் காத்திருந்தானாவென்பதுங், கோயிலுக்குப் போனவள் திரும்பி வந்தாளாவென்பதும், அங்ஙனம் அவள் வராமற் போனால் வீட்டுத் திறவுகோலெங்கேயென்றும், நமக்குத் தெரியவேண்டும் எனச் சிந்தித்து, முதலிற் தேடின வீட்டிலேயே போய் மறுபடியும் அவனோடு வசித்தவர்களைக் கண்டு தீர விசாரித்தேன். அதற்கவர்கள் என்ன ஐயா, அச்சிறுவன் இந்த வீட்டை விட்டுப்போய் 15-20 நாளாயிற்று. அவன் இத் தெருவிற்கு நாலாவது தெருவில் எந்த வீட்டிலேயோ குடியிருக்கிறான் என்று யாரோ சொன்னதாகக் கேள்விப்பட்டோம். அவன் என்ன செய்தான்? நீர் அவனுக்கு என்னவேண்டும்? ஏன் அப்படித் தேடுகிறீர்? இதென்ன பயித்தியமாயிருக்கிறது, போம் போம் என்னவே ஐயோ! இதென்ன அநியாயமாயிருக்கிறது, இந்தப் பெரும் பட்டணத்தில் எந்த நாலாவ்து வீதியில் எந்த வீட்டில் எந்தச் சமுசாரத்

தில் யாரைப்போய் இன்ன சின்னையன் எங்கே இருக்கிருனென்று நாம் கேட்கிறது என்று எண்ணிக் கண்ட நேசரையெல்லாம் கேட்டுத் திரிந்து கால சந்து கடுகி வீடுவந்து சேர்ந்தேன்.

"இரண்டொரு நாட் சென்று எங்கேயோ போய்க் கடைவீதி வழியாய் நான் வருகையில் யாரோ என் பெயரைச்சொல்லி அழைத்த சத்தங் கேட்டது. அச்சத்தம் வந்த திசை வழியே உற்று நோக்குகையிற், பெரியசாமி என்னும் என் சிநேகரும் முன் சின்னையனை என் வீட்டிற்கு வேலையாளாக அமர்த்தியவருமன்றேவென்று கண்டு கிட்டி என்ன சங்கதியென்று வினவவே, அவர் அப்பா, இவ்விடத்தி லுள்ள தனவானெருவருடைய குமாரனுக்குக் கல்வி கற்பிப்பாயா? தக்க ஊதியங் கிடைக்கும் என்ன, அதற்கு நான் நல்லது இதைப்பற்றி அப்பால் பேச லாம், நீர் முன் அமர்த்திவைத்த சின்னையனென்பவன் என் வீட்டை விட்டுப்போய் இருபது நாளாகிறது. இத்தனை நாளாகத்தேடியும் அவன் எங்கிருக்கிரு னென்னும் உளவு எட்டவில்லை. தேடிப் பிடித்துக் கொடுத்தாற் செய்நன்றி மறவேன் என்றேன். அதற்கவன் ஓகோ அவன் என்ன செய்தான், இதோ வடக்கே பத்துக்கடைக்கப்பால் அத்தர் புழுகு வாங்கிக்கொண்டு நிற்கக் கண்டேன். அவன் முன்னைய சின்னையனல்ல. இப்போது பெரிய ஐயனைக் காணப்படுகிருன். நடை நொடி உடை பாவனைகளிலிப்போது நவீனனு யிருக்கின்றனன். 'செல்வஞ்-சகடக்கால் போலவரும்' என்பது மெய் யல்லவோ? 'அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்- அரசோடிருந்தரசாளினும் ஆள்வர்' என்று எ்ண்ணி

இப்போது தானிங்கு வந்தேன் என்ன, அக்கணமே அவரைக் கூட்டிக்கொண்டு குறித்த கடைக்கு வந்து அவனிருக்கக்கண்டு உளம்பூரித்து நெருங்கி அப்பா சின்னையாவென்று அழைத்தேன். அது கேட்டு, அவன் என்னை ஏறிட்டுப் பார்த்து, என்ன ஐயா, சுகமா? இவ்வளவு விரைவில் சிங்கப்பூர்க்குப்போய் மீண்டு வந்தீர்களா? அம்மாளுங் குழந்தையும் க்ஷேமமாயிருக்கிறார்களா? என்று வெகு ஆச்சரிய மாகவும், அகமகிழ்வாகவும் வினவவே, எனக்கு அதிக வியப்பு உண்டாகி நல்லது எல்லாந் தெரி விக்கிறேன். என் வீடுவரையுந் தயவுசெய்து நீ வந்து போகவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அதை அவன் மறுக்காமற் கூடவே வந்தான். இங்ஙனம் நாங்கள் மூவரும் எங்கள் வீதிவழி யாக வரும்போது அவ்விடத்தில் ஒரு குரங்காட்டி ஒன்பது குரங்குகளைச் சேனைவீரர்களுக்குரிய நடை நொடிகளைக் கற்பித்து ஆட்டுவிக்குங் காட்சி யைக்காண அநேகர் கூடி நின்றார்கள். அவர்களில் ஒருவராய் நின்ற என் மற்றொரு சிநேகராகிய மகா லிங்க மென்பவர் என்னைக் கண்டு கிட்டிவந்து சிங்கப் பூருக்குப் போயிருந்த நீர் எப்போது வந்தீர், எனக் கேட்கவே, இதுவும் ஓர் அதிசயமே என நினைந்து, இங்கே வாரும் எல்லாம் இயம்புகிறேனென்று அவர் கையைப் பற்றிக்கொண்டுவந்து அபிராமியம்மாள் வீட்டு வீதித்திண்ணையில் அவர்களை உட்காருவித்து, நாம் கொண்ட கொள்கை இன்றுதான் ஈடேறின தென்று குதுகுலித்துச், சின்னையன் பக்கத்தில் உட் கார்ந்தேன். அப்போது பெரியசாமி என்னைப் பார்த்து என்ன சங்கதியாக எங்களை அழைத்து வந்

தீர் என்ன, உடனே நான் மனம் புழுங்கி, வாய்பதற, 'ஐயா வேலிக்கு முட்போடக் காலுக்குட்டைத்தது' என்பதுபோல் என் வீட்டுவேலைக்கென்று நீர் இச் சிறுவனைக் கொண்டுவந்து வைக்க, வெவ்வினை செய்தான், ஆதலால் முதலில் இவன் வாக்குமூலம் வாங்கி, நடத்தின களவை வெளிப்படுத்தி, அதற்குத் தக்கபடி தண்டனைக்கு அவனை ஆளாக்கவேண்டும், எனக்கும் ஒரு வழி ஏற்படுத்த வேண்டுகின்றேன் என்ன, அவர் களவு செய்தவன் விழியெனக் கண்கள் மருளமருள விழித்துக்கொண்டிருக்கிற சின்னையனைப் பார்த்து, அடா சின்னையா நடந்ததை நடந்தவண்ணஞ் சொல்லுகிறாயா? ஞாயஸ்தலஞ் செல்லுகிறாயா? என உருத்துக்கேட்கவே பையன் ஐயோ! இதுவென்ன அநியாயம்: இவர் மனைவி கொடுக்கப்பெற்ற திறவுகோலை வீட்டுக்குடையவன் வசங்கொண்டுபோய் நான் கொடாதிருந்தது ஓர் குற்றமாகுமா? என, முன்பின் நடந்த சங்கதி என்னென்று நான் கேட்கப், பையன், கோயிலுக்குப் போயிருந்த அந்த அம்மாள் அன்று பகல் ஏறக்குறைய நாலு மணிக்குத் தன் குழந்தையுடன் தனியாக வீட்டுக்கு வந்தபோது, நந்தி ஓடி வந்து, ஐயா கப்பலேறக் காத்திருக்கிறார் என் மனையாளும் இதோ வண்டியில் வந்திருக்கிறாள், உடனே தம் மனைவியையும் அழைத்துவரச்சொன்னார் என்று என்னோடு மிகுந்த அவசரமாய்ச் சொன்னதைக்கேட்டு, அம்மாளுக்குச் சொன்னேன். அவரும் அக்கணமே தமக்கு வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு, வந்த வண்டியில் அவன் மனைவியோடு ஏறினபின், வீட்டைப் பூட்டிச் சாவியை வீட்டுக்குடையவனிடம் கொண்டுபோய்க்

கொடுத்துவிடு என்றும், இன்னின்ன சாமான்களை இன்னின்னாரிடம் ஒப்புவித்து விடு என்றும், மற்ற வைகள் வீட்டில்தானே இருக்கட்டும் நாங்கள் வந்த பின் இந்த மாசஞ் செலுத்தவேண்டிய குடிக்கூலியைக் கொடுத்து விட்டு அவைகளை எடுத்துக்கொண்டு போவோமென்று வீட்டுக்காரனுக்கு நீ நல்வசனஞ் சொல்லவேண்டுமென்றும், அபிராமியம்மாளுக்குக் கொடுக்கவேண்டிய தொகை இன்னும் ஒரு மாசத்தில் வருமென்று அவளுக்கு உறுதிமொழி சொல்லுக வென்றுஞ் சொல்ல, இவைகளையெல்லாங் கேட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு, கடற்கரை வரையிலும் பேசிக்கொண்டு போகும்போது, வழியில் இந்த ஐயா மகாலிங்கமென்பவர் எங்களைக்கண்டு நீங்களெல் லாரும் எங்கேபோகிறீர்களெனச், சிங்கப்பூருக்கென்று நந்தி சொல்லவே, உடனே யான் நான் போகவில்லை மற்ற என் யஜமான் முதலியவர்களும் போகிறார்கள் என்ன, அதற்கவர் ஆம் ஆம் உன் யஜமானையும் அவர் யஜமானையும் பண்டியிலேறிக் கடற்கரை வழியாகப் போக இப்போது தான்கண்டு வருகின்றேன் என்று கூறினதை உண்டா இன்று எனக் கேட்டுக்கொள்ளுங் கள் என்றான். அப்போது மகாலிங்கம் என்பவர்தாங் கண்டதுஞ் சொன்னதுஞ் சரியென்று ஒத்துக் கொண்டு, சின்னையா! அம்மாள் செப்பியபடி நீயேன் செய்யவில்லை எனப், பையன் அன்றுபொழுதுபோன தினால் மறுநாட் செய்யலாமென்று என் வீட்டுக்குச் சென்றேன். அங்கே பிள்ளையில்லாத என் சிறிய தகப்பனார் காலஞ்சென்றதாகவும், நீ வந்தே சரமகிரி யைகள் செய்யவேண்டுமாதலால் இது கேட்ட வுடனே பிரயாணப் படவேண்டுமென்பதாகவும், ஓர்

ஆள் மூலமாய் என் சிற்றன்னை சைதையிலிருந்து செய்தியனுப்பியதைக்கேட்டு, அக்கணமே அவ்விடஞ் சென்று பிரேததகன காரியங்களை அன்று ராத்திரியே நடத்திப் பதினாறு தினமும் அங்கிருந்து, காலஞ்சென் றவருடைய ஸ்திதிமுதலியவற்றைக் கைப்பற்றிக் கொண்டு, நேற்றிராத்திரித்தான் வந்தேன் என்றான். பின்பு நான் அவனை நீ என் மனைவியும் அவள் குழந் தையும் அந்த நந்தியுஞ் சேர்ந்து கப்பலேறினதைக் கண்டதுண்டா என்று கேட்க, அவன் ஆம் தூரத்தி னின்று கண்டதுண்டு எனப், பின்பு நான் வீட்டை விட்டுப் போனது முதல் அதுவரையிலும் நடந்த விஷயங்களையெல்லாம் விவரிக்க, வந்திருந்த எல்லா ருங் கேட்டுத் துக்கப்பட்டுச், சகல ஜனங்களுக்கும் பசுக்கள் மனைவிகள் பிள்ளைகள் வீடுகள் ஜன்மாந் தருருணசம்பந்தத்தினால் உண்டாகின்றன. இருணந் தீர்ந்தவுடனே அவை நாசமடைகின்றன. ஆகையால் அவ்விஷயங்களில் வியசனப்படலாகாதென்று சாஸ் திர மிருப்பதினாலும், உம்முடைய மனைவி பிறன் வசப்பட்டுத் தீபாந்தரஞ் சென்றமையினாலும், ஒருவ னுடைய புஸ்தகமும் ஸ்திரீயுந் தனமும் பிறர்கைப் பட்டால் போனவையே ஒருவேளை திரும்பிவந்தாலும் புஸ்தகம் ஜீர்ணமாயும் பெண்கள் பிரஷ்டைகளாயுந், தனங் கொஞ்சங் கொஞ்மாயும் வருமென்பதாலும், உன் மனைவியை இனி இறந்தவளாக நினைத்து வேறொரு விவாகஞ் செய்துகொண்டு சுகித்திரு மென்று எனக்குப் புத்திசொல்லிப் போய்விட் டார்கள்.

"அப்பாற் சின்னையனை என் வீட்டுக் கழைத்துப் போய், நடந்தவைகளையெல்லாம் மறுபடியும் விஸ்தா

ரமாய்ச் சொல்வித்துக்கேட்டு, அனுப்பிவிட்டு, அன்று முழுதும் அன்னமுண்ணுமல் அடாபாவி நந்தீ! 'நட்பிடைக் குய்யம்வைத்தெய்யா வினைசூழ்ந்' தாயே! இது உனக்கு நன்மை விளைக்குமா? பெரியோர்களுக்கு, மனது நினைத்ததையே வாக்குமொழியக் கைகள்செய்யுந், துஷ்டர்களுக்கு மனது ஒன்றை நினைக்க வாக்கு மற்றொன்றைச் சொல்லக் கைகள் வேறொன்றைச்செய்யும் என்பதற்கேற்க நீ திரிகரண சுத்தியில்லாமல் என்னோடு இதுவரையிலுஞ் சிநேகித்து எனக்குத் துரோகஞ் செய்தாயல்லவா? இங்ஙனம் செய்யவா அப்பிரபுவினிடம் உன்னைக் கொண்டு போய்ச் சேர்த்தேன்? அப்பிரபு இருந்தால் நீ எங்குப் போனாலுங் கொண்டு வந்து சிக்ஷித்து விடுவாரே! நீ எங்கு ஓடினாலும் உன்னுடைய துரோக சிந்தை உன்னைத் துயர் செய்யும், இராவணன் துரியோதனன் பிரமன் குபேரன் இந்திரன் இவர்கள் எந்தத் துஷ்ட நடத்தைகளாற் கெட்டார்களென்பதைக் கேட்டறியாயா? மடையனென்னும் பெயரை மாற்றி மடமையனெனக் கொண்டாயே? நந்தி யென்னும் பெயர்ப் பொருளைத் துர்விஷயத்தில் நாட்டினையே, 'ஈக்குவிடந்தலையி லெய்துமிருந்தேளுக்கு—வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய - பைங்கணரவுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்-கங்கமுழுதும் விடமேயாம்' என்பது உன்னளவில் மெய்யேயாம், ஓ விசாலாட்சி! கோகிலத்துக்குக்குரலும் ஸ்திரீக்குக் கற்புங் குரூபிக்கு வித்தையுந் தபசிக்குப் பொறையும் ரூபமென்கிறார்களே! ஆதலால் இதுவரையிலும் நீ உன் கற்பைக் காத்து வருகிருயோ இல்லையோ அறியேனே!

உன் குணுதிசயங்களையெல்லாம் நான் நன்ருய றிவேனே! பாரியாவியோகமுஞ் சற்சனரைத் தூஷித்தலுங் கடனில் மீதிவைப்பதும் அற்பனிடத் தில் சேவை செய்தலும் தரித்திரத்திற் பந்துமித்திர தரிசனமும் சரீரத்தில் நெருப்பில்லாமலே தகிக்கு மல்லவோ? ஐயோ உன் பேதமைக்கு நீ முழுதும் இடங்கொடுத்தையே! நாஞே வேடிக்கை பார்த்த லில் விருப்புற்று விழலனுனேன், அன்று ராத்திரி நான் விநோத நாடகம் பார்க்கப்போகாதிருந்தேனே யாகில் உன்னை இத்தீமைக்குள்ளாக்கேன் எனப் பல விதமாக நினைந்து நெட்டுயிர்ப்பெறிந்து சோர்ந்து படுத்திருக்கையில், வெளியில் யாரோ கதவைத்தட் டுஞ் சத்தங் காதில் விழுந்ததினுல், எழுந்துபோய்க் கதவைத் திறந்துபார்க்கவே, அபிராமியம்மாள் என் றுணர்ந்து ஏன் என, அவள் ஐயா நீர் காலை முதல் இதுவரையிலும் அன்னந் தண்ணீர் ஒன்றும் அருந் தாது இருக்கலாமா என, நான் அம்மா! குணவதி யான மனைவியுங் குழந்தைகளுடைய மழலைச் சொல் லும் ராஜசன்மானமும் மானமான போஜனமும் அமிர்தத்துக்கு ஒப்பாமென்றிருப்பதினுல், முன்னைய இரண்டுமில்லாத எனக்குச் சாப்பாடும் வேண்டுமா? ஒரு மனையாளையும் மகனையும் வைத்துக்காக்க வலி யில்லாத பேதைக்கு வயிற்றுணவும் வேண்டுமா? நானும் ஓர் ஆண்பிள்ளையென வெளியிற் புறப்படு வதைவிட ஆவியை விடலாமே! குதிரை ஆயுதம் சாஸ்திரம் வீணை வாக்கு மனுஷ்யன் ஸ்திரீ இவர்கள் எத்தன்மையானவனை அடுக்கிருர்களோ, அவனு டைய குணத்துக்குத் தக்கபடி யோக்கியர்களாகவோ அல்லது அயோக்கியர்களாகவோ ஆகிருர்கள், ஆத

லால் இந்த அயோக்கியனோடு சேர்ந்த அவள் அற்பத் தன்மையளாய் என்னை நீத்து இன்னலியற்றினள், அந்நந்திக்கும் அங்ஙனமே செய்வானெனற்கு ஐயமின்று, ஆனாலும் பெண்டுபிள்ளைகளென்கிற பந்தம் பிணித்து என்னைப் பீடிக்கின்றது என்று அந்த அம்மாளுக்குச் சொல்லி அனுப்பிவிட்டு, அவ்விரவெல்லாம் மனையாளோடு வார்த்தையாடல் முதலிய சொற்பனமே கண்டு, விடியலில் எழுந்து யாருடனுஞ் சொல்லாமல் வீட்டைப் பூட்டி விட்டு, மத்தம் பிடித்தவன்போல வீதி வீதியாய்ச் சுற்றிக் காலோய்ந்து கண் சுழன்று மெய்வியர்த்துக் களைத்து மத்தியானம் இரண்டு மணிக்கு அபிராமியம்மாள் வீடு வந்து சேரவே, அவள் ஐயா! நீர் எங்கே போயிருந்தீர்? யாரோ ஒருவர் உம்மைத் தேடிக் கொண்டு வந்து, வெகு நேரங் காத்திருந்தும் நீர் வராமையால், இக்கடிதத்தை உமக்குக் கொடுக்கும்படி கொடுத்துவிட்டுத், தாம் மயிலைக்குப்போய் இன்று இரவு அங்கிருந்து நாளை உதயத்தில் மதுரைக்குப் பிரயாணமாகிறதாகச் சொல்லிச் சென்றார் என்று நிருபத்தை என் முன் வைத்தாள். அக்கணமே நான் அதைப் பிரித்துப் பார்க்கும்போது அடியிற் கண்டவாறு எழுதியிருந்தது.

'பெருந் தகைமையும் பிரியமுமுள்ள என் பிராண நேசரே! தாங்கள் புகட்டிய புத்தியைக் கேட்டு அடங்காத புன்மைக் குணமுடைய என் பிழைகளை யெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டுகின்றேன். தாங்கள் நண்பனென்று நினைத்த நாசகாலனாகிய நந்தி செய்த நயவஞ்சகத்தால் நாவாயேறி, அதில் இருந்த சுதேச காலாட் படைத்தலைவர்களில் ஒருவர் சுபைதார் வைரமூர்த்தியென்பவரது குடும்

பத்தோடு சேர்ந்து, இச்சிங்கப்பூரென்னும் தீபத்திற் தங்கள் குமாரனுடன் வந்து சுகமேயிருக்கின்றேன். அந்த நாசகாலன் எங்கேயோ இறங்கி மறைந்து போனான். குழந்தைக்குத் தங்கள்மேலுள்ள நினைவு மாறவில்லை. ஆதலால் இந்நிருபங்கண்ட தக்ஷணம் பிரயாணப்பட்டு வந்து என்னை அழைத்துப்போகத் தயைசெய்யப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

தங்கள் தயைக்குரிய,

விசாலாட்சி.'

என வரைந்ததை உற்றுப்பார்த்து ஒருதரத்துக்கு இரண்டுதரம் ஒருங்கே நன்றாய் வாசித்து, என்மனைவியின் கரலிகிதமாக இருந்தமையின், அவளைக் கண்டது போன்று பிரம்மானந்தங்கொண்டு, அக்கணமே உண்டு உடுத்துக் கடற்கரைக்கு ஓடிக், கப்பல் சிங்கப்பூருக்கு எப்போது போகிறதென்று விசாரிக்கையில், இன்னும் நாலைந்து தினத்தில் ஒரு கப்பல் வரும், அஃது எப்போது பிரயாணப்படுமோ அப்பொழுது போகலாமெனக் கேள்விப்பட்டு, மிகுந்த ஊக்கங் கொண்டு, நானிருக்கும் வீட்டுக்காரனுக்குச் சேர வேண்டிய தொகையும் மற்றுமுள்ள கடன்களுங் கொடுத்து, வீட்டிலுள்ள சாமான்களை யெல்லாம் அபிராமியம்மாள் வசம் ஒப்பித்துவிட்டு, இனி இவ்விடம் வருகிறதே இல்லையென்றும், அத்தீவிலேயே சிறந்த அநேக உத்தியோகங்கள் அகப்படும், அதனால் மிகுந்த திரவிய லாபங் கிடைக்குமென்றுங், 'திரைகடலோடியுந் திரவியங் தேடு' என்றிருப்பதினால் நமக்கு யாதொரு தீங்கும் வராதென்றுந் திடங்கொண்டு, அத்தீவில் அகப்படாத சில பொருள்களும், என்

மனையாளுக்கு உவப்பான சில ஆபரணங்களுங், குழந்தைக்குச் சில ஆடை அணிகளும் வாங்கி மூட்டை கட்டிக் கொண்டு, மரக்கலம் வரும் நாளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இங்ஙனந் துணிந்து செய்தது, என் மனையாளுடைய கடிதத்தால் மாத்திரம் அன்று. அவள் கடிதம் வந்த மறுதினம் வைர மூர்த்தி எழுதிய கடிதத்திற், சிங்கப்பூர் மிகுந்த செழிப்பான தேசமென்றும், உமக்கேற்ற உத்தியோகங் கிடைப்பது உண்மையென்றும், அதற்கேற்ற உதவிகள் பல என்னாற் கூடியவரையிற் செய்வேனென்றும், இது கண்ட தக்ஷணம் இவ்விடம்வந்து சேரவேண்டியது ஆவசியகமென்றும், மற்றும் என் மனைவியின் கற்பு முதலிய விஷயங்களும் நேரில் பேசித் தெரிந்துகொள்ளலாமென்றும் எழுதியிருந்தன. இங்ஙனம் ஆபரணம் முதலியவை வாங்கினதற்கு இருநூறு ரூபாய் செலவாயின. மற்றத் தொகையில் கப்பற்கேள்வு போக மீதியை நன்றாய் முடிந்து வைத்துக்கொண்டிருக்கக், கடிதம் வந்த பத்தாநாட் கப்பல் வரவே அதில் ஏறிக்கொண்டு போகையில், அன்று இராத்திரி, அண்டமுகடு அனைத்துங் கொண்டல் கவிந்து, கண்டகர் மனமெனக்கருகி, எண்டிசாமுகமும் விண்டு விண்டு மின்னற்கொடி சிதறிக் கோடையிடி இடிக்கக், குலையும் நெஞ்சுங் குலைகுலையச், சண்டமாருதத்துடன் தாரை தாரையாய் மழை வருஷித்தது. மயக்கம் மண்டையைச் சுழற்ற அறிவழிந்து தட்டிற் சாய்ந்தேன். இதுவரையில் நான் கப்பலேறி அறியேனாதலில், அவ்வளவு மருட்சியும் புதுமையுங் காணப்பட்டன. அப்போது சிலர் ஓடி வந்து, இப்போது கடும்புயல் அடிப்பதினாற் கப்பல்

நிலையாற்றுது, கரகரவெனச் சக்கராகிருதியாய்ச் சுழலுகின்றது. நமக்கு ஆபத்துச் சம்பவித்தது. இவ் வேளை ஆண்டவனை யன்றி யார் துணை நிற்பார்? இவ் விரவு நாம் தப்புவதரிது எனச்சொல்லி அங்கும் இங் குந் திரிந்து விழித்து அலறும் அரவங் கேட்கவே, எனக்கு முன்னிலும் இரட்டிப்புப் பயம் மூண்டது. தேவநாம பாராயணம் என் செவிக்கு எட்டியது. என் செல்வியையுஞ் சேயையும் நினைந்து சிந்தை திகைத் தது. இங்ஙனம் இருக்கையில், மீகாமன்வந்து ஓ ஜனங்களே! நீங்கள் பயம் ஒழிக. இவ்விடரினின்று நம்மை விடுவித்ததற்குத் தேவதோத்திரம் மொழிக. அஞ்சன்மின். அஞ்சன்மின். கடும்புயல் ஒழிந்தது. கலந் தன்னியல்பில் நின்றது. கமலநாயகன் புறப் படுங் காலஞ் சமீபித்தது என்று கையெடுத்து உரத் துக்கூவவே, அக்கலத்திலிருந்தோர் முகமெல்லாங் கமலம்போலக் காந்தி வீச மனம் அமலமாயின. மழையொழிந்தபின் வானந் தாராகணம் பூத்து, முத் துப்பதித்த நீலவிதானம்போலிருந்து,உதயத்தில் வெறு விதானமாய்க் காணப்பட்டது. இதனையும் நீரையும் ஏறெடுத்து நோக்குகையில் எத்தகைய சித்தமுந் திப் பிரமை கொள்ளும். அப்போது நாங்கள் ஆகாயக மனவாசிகளென ஆனோம். நீரிலுள்ள மீன்கள் நிரை நிரையாகவும் நெடுங்கூட்டமாகவுங் கலத்தினிருமருங் குங் கவையாகப் பிரிந்துகவிந்து பரந்தன. அவைகளிற் சில உலம்போலும், பல உலக்கைபோலுஞ், சிலச்சில பெருங்குதிர்போலுஞ், சிற்சில தங்கப்பாளங்கள்போ லும், பற்பல பட்டயங்கள்போலும், பலப்பல ஈட்டி கள்போலும் பல்பல முறங்கள்போலுஞ், சில்சில பரி சைபோலுங் காணப்பட்டன. பறவைகள் யாதும்

பார்த்தறியோம். கண்ணகன்ற கடலிடம் எங்களோடு கடுகி ஓடிவருவதுபோலத் தோன்றியது. சிலதினத்தில் இப்போதுதான் வங்கநாடு வந்தோமென யாரோ சொல்லக்கேட்டேன். அப்பால் நிகிராஸ் முனை கடந்து தென்னுசிரமக் கரையோரமாய்ச் சென்று மலேயா பரியாயதீவின் தென்முனையிலிருக்குஞ் சிங்கப்பூருக்கு வந்து சேர்ந்தோம்.

"இறங்கின அக்கணமே, வைரமூர்த்தி எழுதிய கடிதத்திற் கண்ட மேல்விலாசப்படி, இன்னபட்டாளம் இன்னபிரிவு எங்கிருக்கிறதென்று விசாரித்தேன். அப்பட்டாளப் பிரிவு வங்காளக் கலகத்தின் பொருட்டு முதல்நாள் வந்த கப்பலில் ஏற்றப்பட்டுச் சென்றதெனக் கேள்விப்பட்டு, அது வசித்த இடத்திற்போய் வைரமூர்த்தி யவர்கள் வீடு எங்கென்று விசாரிக்குமளவில், 'அவர் நெருநல் தம் சம்சாரத்துடன் சென்றார், அவரைச் சேர்ந்தவர்கள் யாருமிங்கில்லை, இருந்த அகம் இதுதான்' என வெறுவீட்டைக் காட்டினர் ஒருவர். அவ்வீட்டின் அயலில் நின்ற மற்றொருவர் நீர் யாரென விசாரிக்க, நான் என் சங்கதியையும் என் மனைவி விர்த்தாந்தத்தையும் நவின்றேன். அதற் கவர், அங்கு நடந்த எல்லாந்தெரிந்தவரும் வைரமூர்த்தியின் ஆப்தருமாதலின், "ஐயோ! நீர் மிகுந்த துர்ப்பாக்கியாராயிருக்கிறீர்! அவ்வைரமூர்த்தி தம்மனைவி மக்களுடன் நேற்றுத்தான் வங்க தேசஞ் செல்லும் வங்கத்திற் சென்றனர், இவ்விடத்தில் வாந்தி பேதி மிகப் பிரவர்த்தித்திருந்ததினால், உம்முடைய மனைவிக்கும் அது கண்டு பத்துத் தினத்துக்கு முந்திக் காலஞ்சென்றாள், அவள், தான் உமது சொல்லைக் கேளாதுபோனதினால் இனித் தன்

முகத்தை நீர் பார்க்க வரமாட்டீரென்று துணிந்து, உம்முடைய குழந்தையை அவர்க்கு ஸ்வீகாரஞ் செய்து கொடுத்து உயிர்நீங்கினுள், பிள்ளையை வளர்க்குஞ் சக்தி பெண்டுகளுக்குள்ளதேயன்றி உம் மாலாகுமா என்னுங் கருத்தும் அவளுக்குண்டு, இனி நீர் அங்குச்சென்ருல் அக்குழந்தையையாயினுங் கண்டு உம்முடைய விசனத்தை ஆற்றுவீர், என்ன செய்கிறது? அவரும் அநேக கடிதங்கள்உமக்கு எழு தினர், ஆண் சந்ததியில்லாதவர், அக்குழவியை எங் ஙனம் இங்குத்தனியாக விட்டு ஏகுவர்?'' என்றதைக் கேட்டபோது கீழேவிழுந்து மூர்ச்சையானேன். சற்றுநேரம் பொறுத்து, ஆ! மதன பொக்கிஷமே! மங்களகுணுகரமே! செங்கமல மின்னே! விற்பன சிகாமணியே! விநய சம்பூரணியே! ஓ விசாலாட் சியே! என்னைவிட்டுச் சென்றையோ? என்ன செய் வேன் எனப் பலவாறு சொல்லிப் பாவைபோல் அழுது பிரலாபித்தேன். பக்கத்தில் நின்றவர் ஐயா நீரேன் புலம்புகிறீர் 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண் டாலும்–மாண்டார் வருவரோ' எனப் பலவாறு கூறி என்னை ஆற்றித் தேற்றித் தம் வீட்டுக்கழைத்துப் போய் அன்னமிட்டு வேருேர் வீடு குடிக்கூலிக்கு வாங்கி இதிலிருந்து கொண்டு இங்கு ஏதேனும் ஒரு தொழில் செய்து ஜீவியும், இல்லாவிடிற் பங்காள மேனும் போய்ச்சேரும் என்று சொல்லிப் போய் விட்டார். அவர் பெயர் தீனதயாளர். நான் பின்பு பித்துப் பிடித்தவன் போல் அவ்வீட்டில் ஒன்றியாக இருக்கையில், இரண்டாநாளிரவு சில கள்ளர்கள் கன்னம்வைத்து என்னுடைமைகளையும் ரூபாயையுங் கொள்ளை கொண்டு, என்னையும் அடித்துவிட்டு ஓடி

ஒளித்தார்கள். பொருளிழவுங் கிரகசித்திரமும் அவமானமும் பிறரறியச் சொல்லலாகாதென்றிருத்தலின் பொருளிழந்தமையை அங்கு யாருடனும் புகன்றிலன். கப்பலேறி வங்காளம் போகலாமென்றூற் கையில் ஒரு காசளவும் இல்லை. அங்குவந்து செய்தி கேட்டவுடன் கடிதமொன்றெழுதி வைரமூர்த்திக்கு அனுப்பினேன், அதற்குப்பதில் வரும்வரும் எனக்காத்திருந்தும் வரவேயில்லை.

“மனைவிபோனபின் கொஞ்சநாள் மகன் மேல் மனம் நடந்தது. ‘கிட்டாதாயின வெட்டெனமற’ என்பதாக அதையுஞ் சிறிதுகாலம் மறந்தேன். மனையாள் ஜீவித்திருந்தமையின் அப்பாசம் இது காறும் என்னைப் பந்தித்துச் சுதேசத்தைநீக்கிப் பரதேசியாக்கிற்று. ‘கூட்டோடு விட்டது குளிருங்காய்ச்சலும்’ என்பதாக இல்வாழ்க்கைப்பற்று அன்றே ஒழிந்தது. கைப்பொருளும் பொய்ப்பொருளாயது. கலியாணம் வேறு செய்வதற்குங் கவலை கொண்டிலன். ‘மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக்கண்ணே—கடியென்றூர் கற்றறிந்தார்’ என்றும் இருக்கின்றதே. முப்பதாம் ஆண்டளவின் மூன்றற்றொரு பொருளைத் தப்பாமற் றன்னுட் பெறத் தைரியங்கொண்டு, சந்நியாசியாச்சிரமத்திற் சார்ந்துய்ய நினைத்து, அதுமுதல் அந்நிலைக்குரிய உடைகளைத்தரித்துத், தலையை முண்டித்து அத்தீனதயாளரை அடுத்து, என் கருத்தை உரைத்து, அவர் வீட்டிலும் அவரைச்சார்ந்தவர்கள் வீட்டிலுந் தினம் ஒரொருவேளை உண்டு, அவர்களுக்கு ஒழிந்த காலங்களில் ஞானநூல்களின் கருத்துக்களைப் பிரசங்கித்து வருகையில், அவர்கள், இவ்வூரில் வந்திருக்கின்ற பட்டாளங்களிற் சேர்ந்தவர்கள்

அநேகர் தமிழர்களாயினும், அவர்கள் தமிழ்ப்பாஷை யை நன்ருய் வாசிக்கவும் பிழையற எழுதவும் பேச வும் அறிந்திலர், ஆதலிற் தாங்கள் முதலில் அப்பாஷை யின் உற்பத்தி பெருமை முதலியவைகளை நாளைச் சேர்க்கப்படும் பெருத்த சபையில் உபநியசித்துப் பின்னர் இங்கு இயற்றமிழ்ப்பாடசாலையொன்று ஏற் படுத்திப் பாலியர்களுக்குக் கல்வி கற்பித்து வர வேண்டிக் கொள்ளுகின்ருேம் என்றனர்.

"அவ்வாறே செய்ய உவந்து, மறுதினம் அடியிற் கண்டவாறு உபநியசித்தேன். அவ்வுபநியாசத்தின் மகுடம்

## திராவிட பாஷைச் சிறப்பு.

ஓ தமிழ்ச்சுதேச தனகனவான்களே,

"இப்பேருலகில் வசிக்குஞ் சராசரவஸ்துக்களி னின்று மனுஷியர்கள் பேசுந்திறமையாற் பேதப் பட்டுத் தங்கள் கருத்தைப் பிறர்க்குணர்த்த உப யோகிக்குஞ் சத்த சமூகமே பாஷையெனப்படும். அவ்வொலி, வரிவடிவாகிய எழுத்தாய், அவ்வெழுத் துக்கள் ஒன்ருே டொன்று சேர்ந்து பதமாய், அப் பதங்கள் பலசேர்ந்து வாக்கியமாக, அவ்வாக்கியங் களாற் தங்கள் தங்கள் கருத்துக்களை மனிதர்கள் ஒரு வர்க்கொருவர் விசதமாய்த் தெரிவித்துப் பயன்படுத் திக் கொள்ளுகிருர்கள். அன்னதன்மையவான பாஷைகள் அவனியில் அனேகம் உள. அவற்றுட் தமிழ்ப்பாஷையும் ஒன்று. இது தென்னிந்தியாவிற் சமஸ்கிருதபாஷா பதங்களோடு கலந்து வழங்குவதி ஞற் கிளைப்பாஷையெனச் சிலருந் தனிப்பாஷை யெனப் பலருங் கூறுகின்றனர். எவ்விதம் ஆயினும்

ஆகுக, பின்னர்க் கூறப்படுமவைகளால் புத்திக்கும் யுத்திக்கும் ஒத்தவாறு நன்கு விளங்கிக்கொள்க.

1. 'கண்ணுதற்பெருங் கடவுளுங்கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழேனை
மண்ணிடைச்சில இலக்கணவரம்பிலாமொழிபோல்
எண்ணிடைப்படக்கிடப்பதா எண்ணவும்படுமோ?'

2. 'கடுக்கவின்பெறுகண்டனுந் தென்றிசைநோக்கி
அடுக்கவந்துவந்தாடுவான் ஆடலினிளைப்பு
விடுக்கவாரமென் கால்திருமுகத்திடைவீசி
மடுக்கவுந்தமிழ்திருச் செவிமாந்தவுமன்றோ ?'

3. 'தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்தது முதலை
உண்டபாலனையழைத்ததும் எலும்புபெண்ணுரு
[வாக்
கண்டதும் மறைக்கதவினைத்திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச்சொற்களோசாற்
[றீர்.'

'ஆதியிற்றமிழ்நூ லகத்தியற்குணர்த்திய
மாதொருபாகனை வழுத்துதும்
போதமெய்ஞ்ஞான நலம்பெறற்பொருட்டே.'

'வடமொழியைப்பாணினுக்கு வகுத்தருளி அதற்
[கிணையாத்
தொடர்புடையதென்மொழியை உலகமெலாந்
[தொழுதேத்தக்
குடமுனிக்குவற்புறுத்தார் கொல்லேற்றுப்பாக
[ரெனிற்
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரேகணித்
[தறிவார்.'

'இருமொழிக்குங்கண்ணுதலார் முதற்குரவர் இயல்
[வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர்
[இசைபரப்பும்
இருமொழியுமான்றவரே தழீஇயினாரென்றாலிவ்
இருமொழியுநிகரென்னும் இதற்கையமுளதேயோ?

எனத் திராவிடத்திற்குச் சிறப்பும் பிறப்புங் கூறப் பட்டுள்ளன. இது, தெலுங்கு கன்னடம் மலையா ளம் துழுவம் காண்டி கூவம் முதலியவைகளுக்கு மூல பாஷையாம். இதனைச் சமஸ்கிருதத்தின் கிளைப் பாஷையெனவும் இன்னகாலத்தில் உதித்ததெனவுங் கூறற்குப்போதுமான சான்றின்று. தென்னிந்தியா வின் உள்நாடு தென்னாடுகளிலும் இலங்கைத்தீவின் வடபாகங்களிலும், இப்போது பர்மா, மோரீசு இத் தேசங்களிலும் பேசப்பட்டு வழங்கி வருகின்றது. ஆகத் தமிழ் நில அளவு ஆகிய 85-ஆயிரஞ் சதுர மைலிற் சுமார் ஒரு கோடியே இருபதுலட்சம் ஜனங் கள் தமிழராம். இத்தகைய தமிழிற் சமயநூல் களாகிய நாலாயிரப் பிரபந்தம் தேவாரம் திருவாசக முதலியவைகளுஞ் சிந்தாமணி முதலிய பஞ்சகாவி யம் கம்பராமாயணம் பெரியபுராணமுதலிய சிறந்த காவியங்களுந், தொல்காப்பியம் நன்னூல் முதலிய வியாகரணங்களுங், கைவல்யம் உபநிஷத்து முதலிய வேதாந்த சாஸ்திரங்களுங், குறள் நாலடி முதலிய தருமசாஸ்திரங்களுந், தன்வந்திரிமுதலியோர் செய்த வைத்திய சாஸ்திரங்களும் ஜோதிஷ கணிதசாஸ்திரங் களும் உள்ளன. இப்பைந்தமிழ்கொண்டு பாமாலை சூட்டிக் கடவுள்பதம்பெற்றவர்கள் எண்ணிறந்தோ ரெனப்பல சாஸ்திரங்களுங் கூறுகின்றன. முன் மதுராபுரியில் அநேகவித்துவான்கள் கூடி விருத்தி பண்ணிவந்த இது இப்போது வர வர க்ஷீணதசையை அடைகின்றது. திராவிடம் என்பதற்குப்பொருள், ஓடி வளைந்ததாம் (மகாநதிமுதற் கன்யாகுமரி யீறுக ஓடிவளைந்த கோடி மண்டலத்திலுள்ளது.) தமிழ்என்றற்கு இனிமை யென்னும் பொருள்.

தண்டமிழெனவுஞ் சங்கத்தமிழெனவும் பைந்தமிழெனவுஞ் சிறப்பித்துச் சீரியோர் செப்பியது க்ஷீணிப்பதற்கா? சுதேசிகளாயிருந்து சுதேசபாஷாபிவிருத்தி செய்யாதது, சுயகுலத்தை இகழ்ந்து அயலதைப் புகழ்வதுபோலாமன்றோ? திருவள்ளுவர் ஔவை கம்பர் ஒட்டக்கூத்தர் புகழேந்தி முதலான சிறந்த வித்துவான்கள், தம்மாலியற்றப்பட்ட நவரசபாவாலங்கார நவ நவமான கவிதாமாலைகளை நவின்றுணர்வோர்க்கு ஞானோதயமும் நானுசுகோதயமும் நல்கவைத்துத் தம் ஊனுடம்பொழித்துப் புகழுடம்போம்பிச் சென்றனரே. அவைகளை நாம் கற்றுப்பரிபாலியாமற் காட்டுக்கெறித்த நிலவுபோலப் பயனறக்கழித்தொழியலாமா? ‘நல்லார்கட்பட்ட வறுமையினின்னுதே-கல்லார்கட்பட்ட திரு’ ‘ஒப்புரவி னுல்வருங் கேடெனினஃ தொருவன்-விற்றுக் கோட்டக்கதுடைத்து’ என்பவற்றை எண்ணி எத்தனையோபேர் தங்கள் காலங்களை இதுகற்கும் முயற்சியிலேயே கழித்து வறியராயினர். இதனுலேயே இவ்வளவாயினும் இத்தமிழ் இக்காலத்திலிருக்கிறதென்று பெயரையாயினும் பிறர்சொல்லச் சிரங்காட்டித் திரிகின்றது. ஆகவே இத்தமிழொன்றையே நீங்கள் கற்று உங்கள் காலத்தைக் கழிக்கவேண்டுமென்பது எம் கருத்தன்று. கால தேச வர்த்தமானங்களைக் கண்டு, அன்னத்துடன் நீரும் உண்பது போல ஆவசியகமான ராஜபாஷையையும் உடன்கற்பது தகுதியேயாம். ஐயோ, அதையேனுஞ் சிலர் ஆழ்ந்துகற்கிறுர்களா? இல்லையே. ஆடு தழை மேய்வதுபோல அங்கொன்றும் இங்கொன்றுமாக மனனஞ்செய்து சிறு உத்தியோக பதவிபெற்று

அதனுல் வரும் ஊதியத்தால் உண்டு உடுத்து, அறிய வேண்டியவைகளை அறியாது, தம் வாழ் நாள்களை வீழ்நாளாக்கி ஊரும் பேருமின்றி ஒழிந்துபோகிருர்கள். இவ்வாங்கிலேய பாஷையைப் பாங்குபெறக் கற்ற சீரிய கூரிய புத்திமான்களோ, நன்னடை உடைஊன் பாவனை சுசிகளின் நாகரீகங்களுந், தெளிவுங் காலவரம்பு கடவாமையுஞ், சொற்சாதுரியமுஞ் சொற்றவருமையும், அறியவேண்டிய விஷயங்களை ஆழ்ந்து நின்று ஐயமற உணர்தலுந், தளராத தார்க்கீக தந்திரமும், இந்து தேசத்தினின்று ஒழிந்துபோன வைத்திய ஜோதிஷ கணிதாதி நூல்களை இப்பாஷை மூலமாய்ப் பெற்று அடங்கி நடக்கும் ஒழுக்கமும் பெற்று, அடுத்தவர்களுக்குப் போதிப்பர். அவர்களும் இக்காலத்தில் மிகவுஞ் சிலரே அன்றிப் பலரல்லர். இப்பண்டித சிரோமணிகளிற் சேர்ந்து, சத்தியமாகிய தாயும் ஞானமாகிய தந்தையுந் தர்மமாகிய சகோதரனுந் தயையாகிய சிநேகனுஞ் சாந்தியாகிய மனைவியும் க்ஷமையாகிய தனயனும் உடையவர்களாகி என்னையாதரித்து வந்த வித்தியானந்தரும், என்னுசிரியராகிய பாவநாசபண்டிதருமே இவ்வாறெழுக யான் கண்டேன். இங்ஙனமிருக்க, ஆங்கிலேய பாஷையைக் கற்ற சிலர் கட்குடி கூத்திமருவல் இடம்பம் அகங்காரம் முதலிய துர்க்குணங்களுண்டாகி அழிகிருர்களென்பர். இது தவறு. அப்பாஷையைக் குற்றமறக்கல்லாத குணதோஷத்திஞல் வந்த குறையேயன்றி வேறில்லை. தமிழ்ப் பாஷையைக் கற்றவர்களிற் சிலர் அத்துர்க்குணிகளாக இருக்கவில்லையா? எப்பாஷை கற்ருலுமென்ன? யாதொன்றினுந் தப்பாது நிற்பாரேல் இவர்க்கொப்பாவார் இப்பாரில்

எப்பாலார் உளர்? ஆதலின் யார்க்கும் அறிவு பிரதானமேயன்றி அயலொன்றில்லை. எடுத்த விஷயந் தமிழாதலில் இனி இரண்டொரு வாக்கியத்தால் முடிக்கிறோம்.

'கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன் [செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயாபுகழ்கொண்டு
மற்றிவர்செய்யு முடம்பு'

என்றிருத்தலின் 'கல்விக்கழகு கசடறமொழிதல்' என்பதனாற் தமிழ் கற்கப் புகுவார் முதலில் இலக்கிய இலக்கணங்களைப் பழுதறக்கற்றுப் பின் விஷய ஆராய்ச்சி செய்து அரிய பெரிய நூல்களைக் கற்றோரும் மற்றோரும் வியப்ப இயற்றி நடுநிலையின் வழாது நடந்து புகழுடம்பை நிறுத்துதல் வேண்டும். இது தான் எடுத்த உடலுயிர்க்கு இன்றியமையாத கடனென்பது எம்முடைய துணிபு.

'எழுத்தறியத்தீரு மிழிதகைமைதீர்ந்தால்
மொழித்திறத்தின்முட்டறுப்பா னாகும்—மொழித் [திறத்தின்
முட்டறுத்தநல்லோன் முதனூற்பொருளுணர்ந்து
கட்டறுத்துவீடு பெறும்.'

'எழுத்தறியார்கல்விப் பெருக்கமனைத்தும்
எழுத்தறிவார்க்காணி னிலையாம்—எழுத்தறிவார்
ஆயுங்கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ்சுரநீர் மிகை'

என்னும் வாக்கியக் கருத்துக்களை உய்த்துணர வேண்டுகின்றோம்.

"இங்ஙனம் எனக்குத் தெரிந்த அளவிற் சொல்லிப் பிரசங்கத்தைமுடித்து, அதுமுதல் என்னிடம்

வரும் பாலியர்களுக்குத் தமிழ்கற்பித்துச் சிலநாளிருக்கையில், அந்தப்பட்டாளம் இச்சென்னைக்கு அனுப்பப்பட்டது. இதற்குப் பதிலாக வந்த பட்டாளத்தார் தமிழரல்லாத வேறு பாஷையர்களாக இருந்தமையால் விரைவில் அவ்வூரைவிட நேரிட்டது, இனி நமக்குத்தெரிந்த பாஷையாலேயே ஜீவனம் பண்ணுவது கூடாது, பல கைத்தொழில்களைக் கற்றல் வேண்டுமென்று அங்குள்ள கப்பல் வேலைக்காரருடன் சேர்ந்து, அந்த வேலையிற் கைவந்து சில நாளுஞ், சீனுவுக்குப்போய்க் காகிதஞ் செய்யுந் தொழிலிற் பிரவேசித்துச் சிலநாளும், போர்னியூ சுமாத்திரா ஜாவா முதலிய தீவுகளிற் சென்று பலவித பயிர்த்தொழில்களை அப்பியசித்துச் சிலநாளுங் கழித்தேன். இத்தொழில்களில் எனக்குக் கிடைத்த பொருள்களோ அளவற்றன. நான் அனுபவித்தது போக மற்றவைகளைத் தானதருமங்களிற் செலவிட்டேன். அவைகளை என் கையில் வைத்தேனேல், ஐயோ! என்னை அன்றே கொன்றிருக்குமே! ஆட்கொல்லியென்று பொருளுக்கு ஓர் காரணப்பெயர் இட்டு வழங்குகின்றதே! மேலுஞ் சந்நியாசியாகிய எனக்கு அப்பொருளெற்றிற்கு? பொருளிருந்தாற் போகந்தேடும். போகங்கிடைக்கின் புகல்வதற்கரிய துயரம் போதரும். இது காறும் பெண்டுபிள்ளைகளாற் பட்ட பெருந் துக்கம் போதாதா? இதனாலன்றோ பெரியோர்கள் 'சம்சார சாகரோதுக்கம்,' அனந்தக்கிலேசபாஜனம்,' எனவும், 'பெண்டிராற் சுகங்களுய்ப்பான் பெரியதோரிடும்பைமேற்பூண்டுண்டிராக்கிடக்கும்போதத்துடலுக்கே கரைந்து நைந்து' எனவுங் கூறியுள்ளார் ஆதலின், 'ஏற்ப

திகழ்ச்சி' என்பதை நினைந்து கடவுளால் அளிக்கப்பட்ட கரசரணுதிகளால் உழைத்துண்டு,

'இறப்பெனுமெய்ம்மையை யிம்மையாவர்க்கும்
மறப்பெனுமதினின்மேற் கேடுமற்றுண்டோ
துறப்பெனுந்தெப்பமே துணைசெய்யாவிடிற்
பிறப்பெனும்பெருங்கடல் பிழைக்கலாகுமோ'

'அருஞ்சிறப்பமைவருந் துறவுமவ்வழி
தெரிஞ்சுறவெனமிகுந் தெளிவுமாய்வரும்
பெருஞ்சிறகுளவெனிற் பிறவியென்னுமிவ்
விருஞ்சிறைகடத்தலி னினியதாவதே'

என்பவற்றுற் துறவே நன்மையெனக்கொடுண், துவக்கை நீக்குங் காலத்தை எதிர்நோக்கி, நமது சுதேசத்திற்போய் நண்பர்களில் யாரையாயினுங் கண்டு அவர் சார்பிலிருந்து நாள்கழிக்க உறுதிபூண்டு, வெள்ளையானையின்மீது வீற்றிருக்கும் வேந்தன்வாழும் பர்மாவென்னும் தேசத்தினுள் அமரபுரிக்குவந்து, அங்குள்ளநேர்த்தியான மர வீடுகளையும் வளங்களையும் பார்த்து, இரண்டு வருடந் தங்கி, ஆசாம்புத்தான்என்னுந் தேசங்களைக் கடந்து வங்காளஞ் சேர்ந்தேன். அங்கு வரும்போது எனக்குப்பருவம் 48 அல்லது 50 இருக்கும். கல்கத்தா நகரில் ஒரு வருஷந்தங்கிக் கைத்தொழில் செய்து காலங்கழிக்கையில், நான் குடியிருக்கும் வீட்டிற்கு அயல் வீட்டிலிருக்குங் குழந்தைகளைக்கண்டு அவர்கள் பேசுங் குதலைச்சொல்லில் மனஞ்செலுத்திக் கண்ணீர்விட்டுக் கலுழ்ந்து என் காதலனை நினைத்தேன்.

'அடைந்தமக்களைக் காண்டலுமழலிடு மெழுகின்
உடைந்ததுள்ளநீ ரூற்றிருந்தொழுகின நெடுங்கண்
தொடர்ந்தமும்மல முருக்கிவெம்பவக்கடல் தொலைத்துக்
கடந்துளோர்களுங் கடப்பரோமக்கண்மேற் காதல்'

என்னும் அரிய வாக்கு எனக்கும் பலித்தது. அப்பாற் கங்கை யமுனை சிந்து முதலிய நதிகளோடு கண்ய மான தேசங்களையுங் கண்ணுற்றுக் குஜராத்து மஹாராஷ்டிரம் முதலிய தேசங்களின் வழியாய் நிஜாம் இராச்சியங்கடந்து, பெங்களூர் சீரங்க பட்டணம் மைசூர் நீலகிரி திரிசிரபுரம் மதுரை இலங்கை இவைகளைச் சுற்றிக்கொண்டு இச் சென்னையையடுத்து, இதோ அடுத்த வீதியில் வசிக் கும் முன் குறிக்கப்பட்டபிரபு எனக்குப் பாலியத்திற் பாடசாலைச்சிநேகர் ஆதலால் அவர் ஆதரவில் இருக் கிறேன். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கண்ணுள்ளபோதே பார்த்துக்கொள்' 'கண்டதே காட்சி உண்டதே உறுதி' என்னும் பழமொழிகளை யான் மேலெழுந்த வாரியாய் நம்பி, ஆட்டுக்கடாச் சண்டையில் நரிசெத்த அனர்த்தத்தைக் கண்டு அர்த்தமிழந்த அந்தணனாகிய தேவசன்மாவைப் போலப் பொன்னன்னையும் பொருளன் னையும் போக்கடித்துக்கொண்ட யான் வேடிக்கை பார்த்துக் காலத்தைப் போக்குகிறவர்களைக் கண்டால் அவர்களுக்குப் புத்தி புகட்டாமற் போவேனா? 'பட்டறி கெட்டறி பத்தெட்டிறுத்தறி' என்பதினாற் பட்டறிந்த பழம் புண்ணாளியானல் லவோ? ஞானத்துள்ள பற்றற்ற ஞானிகளோ 'பொன்றின சவம்வாழ்ந்தாலும் புதுமையா வொன் றும்பாரார்.' பௌதிகரசாயன சாஸ்திரங்களின் பயிற்சி யுள்ளவர்களும், ஜாலங்களாகிய அருங்கலை விநோ தர்களும், பயனற்ற விநோதங்களைப் பார்ப்பார்களா? எல்லா விநோதங்களும் வல்லார் செய்த நூல்களிலிருக் கின்றனவே. 'சுவை யொளி யூறோசைநாற்றமென்

றைந்தின்-வகைதெறிவான்கட்டேயுலகு' என்னுந் திருவாக்கை உய்த்துணரவேண்டுமே! இங்ஙனங் கல்விச் செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்கே வாய்ந்தவர்கள் பொழுது போக்குகைக்குச் சில விநோதங்களைப் பார்ப்பர், பார்க்கினும் அவைகளின் காரண காரியங்களைக் கவராது விடார். விநோதார்த்தமாய்ச் சூதாடி நாடு நகர் முதலியவை இழந்த நளன் தருமனிவர்கள் சரிதைகள் இப்போது மறைந்துள்ளனவா?

"இங்ஙனம் பஞ்சுபடாத பாடுபட்ட எனக்கு என் தந்தை இட்டநாமம் வேதாசலம் (வேதம்—அசலம்.) இதன்பொருளோ உத்கிருஷ்டமானது. இப்பொருள் போய் துன்பத்தினால் சலித்தவனென்ன வாஸ்தவமான காரணக் குறியாயெனக்காயிற்று"

என்று கூறித் தம் சரிதையை முடித்தார்.

முடிக்கும் அளவிற் குணக்குத்திசையில் மொய் கதிர்ப்பரிதிகைவிதிர்த்து, இருளைச்சீக்குந் தருணங் கிட்டியது. அப்போது நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் அறைக்குப் பக்கத்து அறையில் சயனித்து அவ்விரவெல்லாம் விழித்திருந்து, மேறபடி சரித்திரமெல்லாம் விடாது கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்த என் தமக்கையாகிய கன்னியம்மாள், அப்பெரியவர் முன்விரைந்து வந்துநின்று, ஐயா யான் சொல்லப் போகிற சில்லுரையையுந் தயைசெய்து தாங்கள் கேட்டு, நின்றபொழுதையுங் கழிக்கப் பிரார்த்திக்கின்றேன் எனப், பெரியவர் அங்ஙனமாகுகவெனச் சொல்லலுற்றனள்.

"இருமைவகைதெரிந்து ஈண்டு அறம் பூண்ட பெரியீர்! இன்று எங்கட்குச்சுதினமாயது. எங்கள்

குடி ஏறியது. இதுவரையும் நாங்கள் கொள் கொம்பில்லாக் கொடிபோலிருந்தோம். குயிலைக் குரலிசையால் அறிவதுபோல நல்லோர்களை நயவசனத்தால் அறியலாமன்றோ? அதுபோலவே சந்திர கிரணஞ் சந்தனம் இவற்றிலுந் தண்ணிதான வார்த்தையாற் தங்கள் மகிமை வெளிப்பட்டது. வித்துவான்களுடைய பாததூசி படாதபவனம் வனமாகும். ஆதலின் எங்கள் உறையுள் இன்று பவித்திரமாய் எங்கள் அஞ்ஞானமுதலிய தீக்குணங்கள் தீய்ந்து போயின. இது காறுமிருந்த எங்கள் சந்தேகம் நிவாராணமாயிற்று. இனி என் விருத்தாந்தத்தை இயம்புகிறேன். நானுவளங்களும் நிறைந்த நாகப்பூரென்னும் நகரிற் பெரிய வர்த்தகர்களில் ஒருவரான தியாகராஜர் என்பவருக்கும் லோகநாயகியென்னும் அவர் மனைவிக்கும் யான் ஒரே பெண்ணைகப் பிறந்து வைரமூர்த்தி என்பவரால் வளர்க்கப்பட்டு என்* பத்தாவது பருவத்தில் அதாவது பருவமாகாத காலத்தில் அவருடைய பந்துக்களில் ஒருவருஞ் சிதம்பர நகர வாசியுமாகிய பரசுராமர் என்பவருக்குப் பாரியையானேன். அக்காலையில் யான் நன்ருய் எழுதவும் வாசிக்கவுங் கற்றிருந்தேன். இச்சென்னையில் அநேகர் தங்கள் பெண்களைக் கல்வி கற்க விடலாகாதென்றுங், கற்ருல் மிகுந்ததீங்கு நேரிடுமென்றுஞ், சொல்லிக் கொண்டது இன்றும் என்னெஞ்சை விட்டேகவில்லை. பின் என் தந்தையானவர் வித்துவ சிரோமணியாகிய ஔவை முதலிய பெண்கள் கற்றுத்தெளிந்து மிகவும் பிரபலப்பட்டிருந்தமையைக் கருதி, வீணை வாசித்தல்

---

* பத்து வயதுக்குட்பட்ட சரித்திரம் பின்னே விசதமாகும்.

தையல் முதலிய விசித்திரத் தொழில்கள், அநேக ஞான நூல்கள், தரும நூல்கள், இவைகளெல்லாம் வெகு பிரயாசைப்பட்டுக் கற்பித்தனர். அவர் மிகுந்த விற்பனராயிருந்தும் எனக்குப் பாலியமணஞ் செய்து, என்னைப் பரிதபிக்கச் செய்தது அவரால் நேர்ந்ததன்று. அதர் மனைவி முதலிய பெண்டுகள் கூடிச் செய்தார்கள். சிலபெண்கள் ஐயோ உங்களுக்கு ஒரு பெண்ணு யிற்றே! சின்னஞ் சிறியதில் கல்யாணம் பண்ணிப் பார்க்கலாகாதா? காயமென்பது மாயமல்லவா? என்றனர். சிலர் ஆ! அந்த மாப்பிள்ளைக்கும் இந்தப் பெண்ணுக்குஞ் சரியென்றும், அவர் மிகுந்த பணக்காரர் அன்றோவென்றும், இன்னும் பலவிதமாயுஞ் சொல்லினர். இதன் பலன் மறுவருஷத்திற் பலித்தது. எங்ஙனமெனில், யான் விவாகஞ் செய்துகொண்டது தைமாதம், புஷ்பவதியானது அடுத்த தை மாசம். என் பர்த்தா வாந்திபேதியாற் காலஞ்சென்றது அதற்கு இரண்டா மாசம். கல்யாண முருக்கம்பூ மிகவுஞ் செவந்நிறமாயிருந்தும், பயன்படாதது போற் கணவனில்லாத எனக்குக் கல்வி ரூபம் வயசு நல்லகுலம் இவைகள் பிரகாசியாமலிருக்கின்றன, பிறப்பித்தோன், கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினேன் ஆகிய இவ்வைவரும் பிதாக்களாகையால், வைரமூர்த்தியைப் பிதாவாக நினைத்து வழிபட்டுவரத், தாயில்லாக்குழந்தையுங், கணவனில்லாத யௌவனமும், பொறுமையில்லாத தவமும், புளிப்பில்லாத உணவும், வியர்த்தமாமென்னும் மொழியை எதிரிடையாக்கித், தாயினும் எண்மடங்காக அவர் மனைவி என்னை ஆதரித்து வந்தாள். இங்ஙனங் காக்கப்பட்ட நானும்,

கலனழிந்தகற்புடைப் பெண்டிருமைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாருங்-கொலை
[ஞாட்பின்
மொய்ம்புடை வீரரு மஞ்சார்முரண்மறலி
தும்பை முடிசூ டினும்'

என்னுஞ் செய்யுட்பொருளை நன்குணர்ந்து கற்பைக் காத்து, வீட்டு வேலைகளை வெகு விமரிசையாய்ச் செய்து, வேலையொழிந்த வேளைகளில் நூல்களை ஆராய்ச்சி புரிந்துவந்தேன். இன்றும் அவ்வாறே உள்ளேன். பின் இரண்டாவது வருடம், என் தந்தையார் சிங்கப்பூர்க்குப்போக உத்தரவுவந்ததினால், அக்கணமே சென்றார். நானும் என் தாயும் அவர் உத்தரப் படி பதினைந்தாந் தினம் வந்த மரக்கலத்தில் ஏறினோம். அங்கு எங்கட்குச் சிலர் துணைகூடினார்கள். அக்கலம் பிரயாணப்படக் கால்நாழிகைக்கு முன்னர்க், கையில் ஒரு சிறு குழந்தை ஏந்திய ஒரு பெண்ணும் மற்றொரு பெண்ணும் ஒரு மனிதனும் அக்கலத்தில் ஏறினார்கள். உடனே கலம் பிரயாணப்பட்டது. சற்று நேரஞ் சென்றபின் அடுத்த அறையினின்று அக்குழந்தையையுடைய பெண் எங்கள் அறைக்கு ஓடிவந்து 'அம்மா இக்காலத்தில் நீங்கள் தாம் என்னைக் காப்பாற்றவேண்டும் என்னோடுகூடவந்தவன் வெகு துஷ்டன், அவன் என்னைப்பார்த்துப் பெண்கள் நாயகமே! நான் எத்தனையோ நாட் தவம்செய்து இக்காலத்தில் உன்னுடன் இருக்கப்பெற்றேன், இப்போதாவது என் மீது கடைக்கண் வைத்துக் காக்கலாகாதா? இனி உன் பயம் ஒழிக, நீ சொல்லிய ஏவலை நான் செய்து உய்வேன், உனக்கிருந்த தடைகளெல்லாம் ஒழிந்துபோயின, உன் கணவன் ஒன்றுக்கும் உதவாதவன், அவன் நினைப்பை இனி அறுத்தொழி

என்று பல இழிசொற்களைக்கொண்டு பிதற்றுகின்
றான்' எனச்சொல்லிக் கண்ணீர்விட்டாள். அப்பால்
என் தாய் அவளுக்குத் தேறுதல் சொல்லி, அவள்
வாக்குமூலமாக எல்லாந் தெரிந்து கொண்டு, 'நாங்
களுஞ் சிங்கப்பூருக்குப் போகிறோம், அங்குள்ள உன்
புருஷனுடன் உன்னைக்கொண்டுபோய்ச் சேர்க்கிறோம்
அதைரியப்படாதை' என்றாள். பின் இரண்டொரு
நாளிலோ என்னவோ தெரியேன், கலம் ஜெகந்நாதக்
கரையில் வந்து சிறிது நேரம் நின்று மறுபடியும்
புறப்பட்டுவிட்டது. அப்போது நானும் அப்பெண்
ணும் எப்போதுங் கப்பலேறி அறியோமாகலால்
மயங்கிக் கிடந்து தூங்கிவிட்டோம். மறுநாட்காலை
யில் என் தாய் அவனைத் தேடி விசாரிக்கவேண்டு
மென்று நினைத்துப்பார்க்கையில், அவன் அகப்
படவேயில்லையாம். என் தாய் கப்பலேறி மிகுதியும்
பழகினவளாதலின், தான் வெகு ஜாக்கிரதையா
யிருந்து எங்களுக்கு வேண்டும் மயக்கச் சிகிச்சைகள்
யாவுஞ் செய்துகொண்டு வந்தாள். எங்களோடுகூட
வந்தவர்களில் ஒருவர் ஆகிய வீரபத்திரர் என்பவர்,
ஜகந்நாதக்கரையில் இறங்கும்போது எங்களுக்கு
மிகுந்த திடஞ்சொல்லிச் சென்றனர். அவர்மிகுந்த
யோக்கியர். ஆபத்சகாயி. என் தந்தைக்கு அந்
யோந்யமான ஆப்தர். அவர் எங்களோடுகூட
இருந்த அந்தப் பெண்ணைக் கவனிக்கவில்லைப்போலும்.
அவருக்கு அக்கலத்தில் மிகுந்த தொந்தரையான
வேலைகளிருந்தன என்பதாயும், பலசரக்குகளை யேற்
றிக் கொண்டு தம்முடன்வந்தவர்களுக்கு வேண்டும்
ஆகாராதிகளைக்கொடுத்தலும் விசாரித்தலும் ஆகிய
மணியமிருந்ததாயும், என் தாயாராற் பின் கேள்விப்

பட்டேன். பின் அக்கப்பல் அதிகாரியண்டைபோய் என் தாய் சங்கதி சொல்லி அப்பெண் சொன்ன சதி காரனைக் கண்டு பிடிக்கும்படி கேட்க அவர் அக்கல முழுதும் பார்த்துங் காணுமையால் ஜெகந்நாதத்தில் சிலர் இறங்கினுர்கள். அவர்களுடன் அவன் இறங்கி விட்டதாகத் தெரிகின்றது என்ருர். பின் சிங்கப்பூர் வந்து சேர்ந்தோம். முன் நடந்த எல்லாச்சங்கதியும் வெளியாயின. அவைகளினுனுந் தாங்கள் சொல்லிய சரித்திரத்தானும் விசாலாக்ஷியென்னும் அப்பெண் தங்கள் மனைவியென்று விசதமாயிற்று.

சிங்கப்பூரிற் தாங்கள் சொன்னபடியே சங்கதி கள் நடந்தபிற்பாடு நாங்களெல்லோரும் வங்காளம் போய்ச் சேர்ந்தபின், என் தந்தை போர்க்குச் சென்று மார்பிற் குண்டுபட்டுருவித் தேகவியோகமானுர். பின் என் தாய்க்கு உபகாரச் சம்பளங் கிடைத்து வந்தது. கையில் 1000–ரூபாயும் நகைவகைகளும் இருந்தன. நானே எல்லாக்கணக்கும் வைத்துச் செலவு செய்து வந்தேன். அக்காலத்தில் அங்குச் சுதேச ராஜகலகங் கள் நடந்துவந்தமையாற், தாங்களெழுதின கடிதமொன்றேனும் வந்து சேரவில்லை. நாங்களும் ஓரிடத் தில் வசிக்கவில்லை. என்ன செய்வோம்! ஆண்துணை யாதுமில்லாமல் அல்லலடைந்தோம். ஒருநாட் கடைக்குப் போயிருந்த என் தாயைக்கண்டு பேசிக் கொண்டு முற்கூறிய வீரபத்திரர் என்பவர் மற்ருெரு வருடன்கூட வீட்டுக்கு வந்தார். அவ்விருவர்க்கும் யானே ஆசனங் கொடுத்து உபசரித்தேன். அக்காலை யில் அவருடன்கூட வந்தவர் என்னை உற்று நோக்கிப் பார்த்து உன் பெயர் கன்னியம்மாளல்லவா? என, நான் 'ஆம்' என்று சொல்லி உள்ளேசென்றேன்.

என் தாய் ஐயா உமக்கு இந்தப் பெண்ணின் பெயர் எவ்வாறு தெரியும்? எங்கே பார்த்தீர் ? சொல்லும் எனவே, அவர் சற்று விழித்து யோசித்துக்கொண் டிருக்க, வீரபத்திரர் 'ஏன் அப்பா அக்கேள்விக்கு விடைவிடுக்காது சும்மா இருக்கிறை' என, அவர் 'நானென்ன சொல்லுகிறது? நாகப்பூரில் எங்கள் வீட் டிற்கு அயல் வீட்டில் இப்பெண் சிறுவயதாயிருக்கும் போதுபார்த்தேன்' என,ஒருவாருகப் போக்குச்சொல் லவே, வீரபத்திரரும் என் அன்ஃனயும் அதஃன விடாது வற்புறுத்தவே, அவர், குரல் மெதுவுபட வேருென்று மில்லை இதுதானெனக்குத் தெரியும் என்ன, வீரபத்தி ரர் சற்றுச்சினந்து ஓகோ வேலப்பா! பத்து வருடமாய் உனக்கும் எனக்கும் உள்ள ஒற்றுமையும் நட்பும் ஒழி யக் காலம் வந்ததுபோலிருக்கின்றது. மித்திரனுக் குரையாத ரகசியமுமுண்டா ? 'ஒல்லுங் கரும முடற்றுபவர் கேண்மை-சொல்லாடார் சோர விடல்' என்றலறியாயா? இன்றுஉன் மனமும் விஃனயும் வேறு பட்டனவே ! இந்த அம்மாள் என் பிராணபதமான சிநேகருடைய பிரியை. அவர் முன் சென்ஃனயில் இருக் கையில் அப்பெண்ணின் வரலாறுகள் யாவும் எனக்குத் தெரிவித்திருக்கிருர். உடுக்கையிழந்தவன் கைபோல என்னிடுக்கண்களேயெல்லாங் களேந்த அவர் குடும்பத் தைப்பற்றி நான் எவ்வாறிருக்கவேண்டுமென்பதை நீ சிந்திக்கவேண்டும். நட்பினர் செய்த உபகாரங் களுக்கு நாம் பிரதிசெய்யாவிடத்து, அந்நட்பு என்ன பயன் செய்யும்? பொய்மை நட்பைப்போக்கும். 'உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா- ருள்ளத்து ளெல்லாமுளன்' என்பது பொய்யா மொழியன்ருே ? ஒருகால் நீ 'அழிவந்த செய்யினு

மன்பரு ரன்பின்-வழிவந்த கேண்மை யவர்' என்பத னுற், தகாத காரியஞ் செய்யினும் அதைப் பொறுப் பதேயன்றி ஒறுத்து உன் நட்பை வெறுக்கிலேன். ஆதலின் இனிப் பயம் ஒழித்துப் புகலுக என வேலப்பன் சொல்லலுற்றனன்.

"சென்னையிற் தெருத்தெருவாகத் திரிந்து சின் னத் தொழில்கள் செய்து ஜீவித்த என்னைப் பெரிய தொழிலில் வைத்துப் பிரியமாய் நடத்திவரும் உமக்கு, முன் நான் நடத்தினவைகளை ஒரு சிறிதும் பிசகாமல் உண்மையாகக் கூறுகின்றனன். நான் செய்த செய்கை நாகரீகமுங் கல்வியறிவுமுள்ள நக ரத்தார்க்கு அடுத்ததன்று. இப்போது சொல்வதென் ருல் எனக்கே வெட்கமுந் துக்கமும் அவமானமும் உண்டாகின்றன. பொருளில்லாதவன் கொலைகளவு முதலிய தீமைகள் புரிவானென்பது புகலவும் வேண்டு மா? 'போற்றுகுருகிளையும் பொன்னுசையோர்க் கில்லை' என்பதும் போதாதே. இக்கேடு புரிவதற்கு ஐயோ என் இளமையும் வறுமையுமே காரண மாயிற்று. இளமையிலேயே எனக்குத் தாய் தந்தை கள் கல்விபயிற்றி இருப்பார்களேல், அக்கல்வி அக் காலத்தில் இவ்வழியிற் பிரவேசிக்கவிடாது. வர்ன் மீகி இளமையில் எவ்வாறிருந்தனரோ அவ் வாறே முடிந்தது. இதையிட்டே ஔவை 'இளமை யிற்கல்' என்ருள். துள்ளித்திரிகின்ற காலத்தில் என்றன் துடுக்கடக்கிப் பள்ளிக்குவையாது, பாலும் அன்னமும் பரிந்துபரிந்து ஊட்டி, என்னைப் பெற் ருேர் வளர்க்க வளர்ந்து, துர்ச்சனரும் கீழ்த்தொழில ருமான சிறுவருடன்கூடித் துன்மார்க்கத்திற் பிரவே சித்தேன். இருபத்தெட்டு வயதுசென்றபோது என்

பிதாவும் மாதாவும் காலஞ்சென்றனர். அப்பால் எனக்கு அன்னப்பிடி வெல்லப்பிடியாகி, அந்த நாகப்பூரில் இப்பெண்ணின் தந்தையார் வைத்திருக்கும் மளிகையில் மாசம் மூன்று ரூபாய்க்குக் கையாளாயமர்ந்து, அங்கு எனக்கொருவருமில்லாமையாற் கைச்சமையல் செய்து உண்டு, மூன்று வருஷங் காலங்கழித்தேன். ஒரு நாள் யான் மாலைப் பொழுதில் என் எசமான் வீட்டுக்கு ஏதோ ஒரு வேலையாகப் போம்பொழுது இக்கன்னியம்மாள் சகல ஆபரணங்களும் பூட்டிக்கொண்டு, வீதி வழியாகப் போகுந் துருக்கர் பண்டிகையின் கோலாகலமான பல பல வேஷங்களைப் பார்த்துக்கொண்டு, வீதித்திண்ணையில் நின்றாள். அப்போதிவள் ஏறக்குறைய நான்கு வயதுள்ள குழந்தை. நான் எப்போதாவது அழைத்தாற் தாராளமாய் வரும் வழக்கமுண்டு. ஆகவே இக்குழந்தையைக் கண்ட அக்கணம் என் துர்ப்புத்தியிலோர் எண்ணமுண்டாயிற்று. இதுகாறும் நம்மைப் பிடித்தசனி விலகவில்லை. இனி நாம் என்னபாடு பட்டாலும் மாசம் மூன்று ரூபாய்க்கு மேற்படச் சம்பாதிப்பது அருமை. இதனால் என்ன சுகம் அடையப்போகிறோம்? உலகில் அநியாயார்ச்சிதத்தாலேயே பெரும்பாலும் ஒருவன்செல்வனாகிறான். இதற்குக்கரி, நமது மளிகைக்கு அடுத்த கடையிற்சென்ற வருஷக் கருப்பில் 'அஃகஞ்சுருக்கேல்' என்பதை நினையாமல், அரிசிவிற்று அளவற்ற திரவியஞ்சம்பாதித்தவன் முனியனல்லவோ? அவன் நமது கண்முன் ஏழைகளுக்கிடும் அரிசியைக் குறைத்துப் போட்டு எத்தனையோ பேரை மோசஞ் செய்தான். அவனென்ன இப்போது குபேர சம்பத்துடனிருக்க

வில்லையா ? பிச்சையிடக் கொடுத்த தானியத்தில் மிச்சம் பிடித்துப் பொருள் சேர்த்து ஜீவித்து இலச்சையில்லாது லக்ஷ்மீநாயகர் போல் திரியும் சிலரை நாம் பார்க்கிறோமே. நாயடித்தகாசு குரைக்குமா? கடிக்குமா? இப்பெண் குழந்தை மேலிருக்கிற ஆபரணங்கள் சற்றேறக்குறைய 300 ரூபாய்க்குக் குறையாமலிருக்கும். இத்தொகையைக் கைக்கொண்டால் நாம் இனி விருத்திக்கு வந்துவிடலாம். ஆகையாற் குழந்தையை எடுத்துக்கொண்டு இன்றிரவினிருளிலேயே மறைந்து வேறோர் ஊருக்குப் பறந்துசெல்லவேண்டுமென்று உறுதிகொண்டு குழந்தையைக்கிட்டி நின்று அம்மா ! இங்கொன்றும் நல்ல வேடிக்கையின்று. நம்முடைய மளிகையண்டை நல்ல நல்ல வேடிக்கைகள் வருகின்றன. வா, பார்ப்பாய் என்று சொல்லிக் கையில் எடுத்துக்கொண்டேன். அப்போது பக்கத்து வீட்டிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் என்னை இன்னானென்று அறிந்தவராகையால் ஒன்றும் என்னைக் கேட்கவில்லை. அஃது என்னை இன்றும் வருத்தப்படுத்துகின்றதுமன்றி, அவ்வூர்க்குட் செல்லக் காலெடுத்து வைக்கவும் இடங்கொடுக்கவில்லை. அவர் என் எஜமான் முதலியவர்களுக்குச் சொன்னபோது என்னை என்னென்ன விதமாய்த் தூறிக் கசந்து ஊரெல்லாந் தேடினார்களோ ? பெற்றவர்கள் மனம் எத்தன்மையாகப் பித்துற்றலைந்தனவோ அறியேன். இவ்வாறு உயிர் கவர்ந்து செல்லுங் கூற்றுவனைப்போலக் கொண்டுபோகின்ற அக்குழந்தைக்கு மயக்கந்தருங் கஞ்சாவினாற் செய்யப்பட்டிருந்த ஒரு வகை மிட்டாயியை வாங்கிக் கொடுத்து, மிக மயக்கம் வரச்செய்து, தூங்கவைத்து,

மாலைப் போது போக, வஞ்சகர் மனமும் என்னெஞ்சகமும் போலவானும் திசையும் இருண்டன. கள்வனுக்கும் பிறனில் விழை காமுகனுக்கும் இருள் சகாயமன்றோ? அக்காலத்தில் அரசாங்கத்தார் வைத்திருந்த சேவகர் முதலிய ஊர்க்காவலர்கள் அத்துணை ஊக்கமுங் கவனமும் உடையவர்களல்லர். என்னை ஏனென்று கேட்பார் ஒருவருமில்லை. அந் நகருக்குத் தென்முகத்தில் அதிவேகமாக ஒரே நடையாகச் செல்லும்போதே குழவியின் மேலுள்ள உடைமைகள் யாவுங் கழற்றிக்கொண்டேன். அன்றிரவு 12 மணிக்கு 20 மைல் தூரமுள்ள ஒரு குக் கிராமத்திலிருக்கும் விநாயகர் கோயிலுட்புகுந்து கதவைச் சார்த்திக்கொண்டு, குழந்தையைத்தரையில் வைத்துச் சற்றுப்படுத்து இளைப்பாறி, விழித்த கண் இமையாதிருந்து, கோழி கூவினதைக் கேட்டு எழுந்து 30 மைல் தூரம் உள்ள ஒரு குப்பம் போம் போது, வழியிற் குழந்தை விழித்துக்கொண்டு, நான் குதிரையும் பார்த்து, என்னையும் நோக்கி, அழ ஆரம்பித்தது. 'அழாதே, அழாதே' என் நான் அச்சுறுத்தினது மன்றிப், பல அறையும்அடியுங் கொடுத்தேன். வழிப்போக்கர்கள் 'ஏன் இப்படி இக்குழந்தை அழுகிறது' எனக்கேட்டபோது, இது என் தமையன் குழந்தை. தாயுந் தந்தையுங் காலஞ் சென்றதினால் அம்மா அப்பாவென்று அலறுகின்றது. என் செய்வேனென்று பலருக்குஞ் சொல்லிக் கொண்டு, அக்குப்பத்துக்குப் பகல் 12 மணிக்கு வந்து சேர்ந்து, ஒரு வீட்டையடுத்து, நாலணாக் கொடுத்து அன்னமுண்டு, குழந்தைக்கும்அன்னமூட்டி, அதைப் பக்கத்திற் கிடத்திப் படுத்துறங்கி, மறுநாள் ஐதராபாத்துக்குப்

போகும் ஒரு வண்டி பேசி ஏறிக்கொண்டு சில நாளில் வந்து சேர்ந்தேன். இவ்விதந் திடங்கொண்டு வந்த என்னெஞ்சு, வல்லிரும்பு கருங்கல் இவைகளினும் வன்மையுள்ளதன்றோ ? இவ்வளவு துணிந்த காரியம் என்னையன்றி எவர் செய்வாரென்று மெச்சிக்கொண் டேன். பெற்றவர்களுக்குத் தெரியுமேயன்றிப் பெறுதவர்களுக்குப் பிள்ளையின் அருமை பெருமை தெரியாவே. ஆகையால் குழந்தையை எப்போதும் அடிப்பதும் வைவதுமாக இருந்தேன். அதனால் அது நான் சொன்னபடி யெல்லாங் கேட்டு எனக்குக் கீழ்ப்படிந்து வந்தது. நானிவ்வளவு வருத்தப்பட்டு இதைக் கொண்டு வந்தது, ஐதராபாத்தில் வேசிதாசிகள் யார்க்கேனும் விற்று உரக்கம் பெறலாமென்று தான். ஆனால் அங்கு யாரும் வாங்க உடன்படவில்லை. மூன்று மாசம் பொறுத்துச் சென்னைக்குப் போய், அங்கொரு வீடு குடிக்கூலிக்கு வாங்கிக்கொண்டு குடியிருந்து, ஒவ்வொன்றாய்க் கையிலிருந்த நகைகளை யெல்லாம் விற்று உண்டு உடுத்து வேசிக்களித்து விநோதமாய்க் காலங்கழித்து வருகையில், ஒரு நாட் காலை 8 மணிக்கு இக்குழந்தை என்னை அறியாமல் வெளிவந்து வீதித்திண்ணையில்உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அக்காலையில் 35 வயதுள்ள ஒருவர், சுதேச காலாட்படையைச் சேர்ந் தவர், மிகக் கண்யமுள்ளவர் ஈவு இரக்கம் பச்சாத் தாபம் இவை முதலிய குணங்கட்கிருப்பிட மான வர், அவர் அவ்வீதிவழியாகச் செல்கையில், இக் குழந்தை எழுந்து விரைவாய் ஓடி அவர்காலைக் கட்டிக்கொண்டு விடாமல் ஐயா! ஐயா! என்று கூவி அழுதது. உடனே அவர் அக்குழந்தையை

எடுத்துக்கொண்டு நானிருக்கும் வீட்டுக்குள் நுழைந்து இக்குழந்தைக்குடையவர் யாவர் ஐயா வென்று சொல்லி அழைத்துவரவே, நான் வந்து என் குழந்தைதான். சங்கதி என்ன? என, அவர் நடந்ததை உரைத்துத் தம் கையிலிருந்த அணு ஒன்றை அதன் கையிற் கொடுத்துக், குழந்தையைப் போவென்ன, அது அவரைவிட்டு எவ்வளவு நயமாக நான் கூப்பிட்டும் வரவில்லை. அவர் முகத்தைப் பார்த்தவண்ணமாக மடியைப்பிடித்துக்கொண்டு கதறிற்று. அப்போது நான், ஐயோ இதென்ன தொந்தரையாயிருக்கிறது, என் தமையன் இறந்த ஆறுமாசமாக இஃது இப்படியே அழுகிறதும் பிடிவாதஞ் செய்கிறதுமாயிருக்கிறது. எப்போது இது சாமோ? தெரியவில்லை, தாங்கள் என் தமையன்போல ஏறக்குறைய இருக்கிறீர்கள். என்தமையன் மனைவி இது பிறந்த மறு வருஷம் இறந்துபோனாள். அவளைப் போன்ற சாயலுள்ள பெண்ணைக் கண்டாலும் இஃது இப்படித்தான் செய்கிறதென்றேன். அதற்கவர் சற்றுநேரஞ் சிந்தித்துக், குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு என்னை வெளியில் அழைத்துப் போய், இரகசியமாக என் கை நிறைய ரூபாயைக் கொடுத்துக், குழந்தையை விலைக்குக் கொடுக்கும்படி கேட்டார். இதைக் கேட்டவுடன் இத்தருணம் போனால் எத்தருணமும் இனிக் கிட்டாதென எண்ணி அத்தொகையை வாங்கி எண்ணுகையில் முப்பது ரூபாயிருந்தன. முன் எண்ணியிருந்தபடி இருநூறு முந்நூறு கிடைத்தலின்றெனினும், அச்சமயம் என் கை வறந்திருந்தமையால், வந்தது போதுமென வாங்கிக் கொள்ளவேண்டியிருந்தது. ஐயோ அன்று

என் காதகப்புத்தியிருந்தவாறு என்னென்றெடுத்துரைப்பேன்? என் மகளாயிருந்தால் இங்ஙனஞ் செய்வேனு? பேதையர்போலப் பிள்ளையை விற்க க்ஷாமகாலம் ஏதேனும் பிறந்ததா? மக்களைப்பெருத மலடனும் மௌட்டீகமுள்ள முரடனுமாயிருந்தேனுகலின், அவ்வாறு செய்யச் சம்மதித்தேன். அப்பால் வந்த தொகையை யான் சிந்தித்த வண்ணமெல்லாஞ் செலவழித்தேன். பிள்ளையை விலை கொடுத்துக் கொண்டு போனவர் பேரும் ஊரும் அறியேன். மூட்டை சுமக்குந் தொழிலை யன்றி வேறுதொழிலறியேன். ஆதலின் இது சில காலஞ்செய்து, அடுத்த வீதியில் ஒரு திண்ணையில் ஒருவர் ஸ்ரீமத் கம்பராமாயணப் பிரசங்கஞ்செய்து வந்ததைத் தினமானம் இரவில் போய்ச் சிரவணஞ் செய்துவருவதுண்டு. அதின் முடிவு சிறையிருந்தவள் ஏற்றஞ் சொல்வதாயினுந், தாய்தந்தை தனையர் தம்பிமார் தாரம் முதலானவர்கள் ஒருவர்க்கொருவர் நடந்துகொள்ளவேண்டிய சற்காரியங்கள் இவையென்பதுஞ், சினேக ஒருமைப்பாடு இத்தன்மையதென்பதும், அடாது செய்பவர்கள் படாது படுவார்களென்பதுங், அங்கைக்கனி போல் அதிற் காட்டப்பட்டன. குகப்பிரான், ஸ்ரீராமனுக்கு விருந்து செய்த இடத்தில் மேற்படி பிரசங்கியார் 'விருந்து புறத்ததாத் தானுண்டால் சாகா - மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று' என்னும் திருக்குறளைச் சமயோசிதங்கண்டு உபயோகித்தனர். அவர் பிரசங்க தாட்டியையும் போதனுசக்தியையும் யானென்னென்றுமெச்சுவேன்? அக்குறட்பாச் சிலையிலெழுத்துப்போல என்றும் மறவாதிருக்க என்னெஞ்சிற் பதிந்து பாடமாயிற்று. பின்பு சின்னுளில் அவர்

இராமாயணத்தைச் சொல்லி முடித்துவிட்டு அடுத்த பூவிருந்தவல்லி யென்னுந் தம் ஊர்க்குச் சென்றனர். அதுமுதல் யான் மூட்டை சுமந்த வேலைபோக மற்ற வேலைகளில், அடுத்தவீட்டுத் தெருத்திண்ணைப் பாடசாலையிலுள்ள சிறுவர்கள் மூலமாய் ஒருமாசத்திற் தமிழெழுத்துக்களை உணர்ந்து கிஞ்சித்துப் படிக்கவும் எழுதவும் அப்பியசித்தேன். இராமநாம சங்கீர்த்தன பாராயணர்களோடு கூடிச் சில இராகதாளங்களையுடைய பாடல்களையுஞ் சத்தசுரபேதங்களையுந் திருக்குறளில் முப்பது அதிகாரங்களையும் உணர்ந்து தேறி வருகையில், ஒருதினம் பூவிருந்தவல்லியிலுள்ள அப்பிரசங்கியாரைக் காண வேண்டுமென்னும் அவாவால், முந்தியே அவரைக் கண்டு பேசி வழக்கப்பட்டிருப்பதினால், விரைவிற் போய்ச் சேர்ந்து அவர் வீட்டிலேயே உணவு செய்து கொள்ளலாமென்று யோசித்துக் கையிற்காசுங் கட்டுச் சாதமுமின்றிப் போகும்போது, வழியிற் கட்டுச் சாத மூட்டையுடன் ஒருவர் என்னைக்கண்டு தாம் இன்ன ஊர்க்குப் போகிறதாகச் சொல்ல, அவரோடு கல்வி விஷயமாக நான் கற்றவையெல்லாங் காட்டித் தற்புகழ்ந்துசென்றேன். இதனைக்கண்ட அவர் 'அடக்க மமரருளுய்க்கு மடங்காமை - யாரிரு ளுய்த்து விடும்' என்னும் பாடலைச் சொல்லி அடங்காதார் கெட்டகேட்டையும் அது குறித்த பலகதைகளையும் விவரித்து, வழியிற்காணப்பட்டவோர் ஏரி கரையண்டை போய் உண்டி உண்ணக்கருதி, அதற்கு இலைஇல்லாமையால், அங்கு நின்றவோர் ஒன்றிமரத்தில் ஏறி இலைபறித்துத் தைத்து, ஸ்நாநுஷ்டானங்களெல்லாமுடித்து, நீரோரத்தில் உட்கார்ந்து, கட்டுச்சாதத்திற்

கையை வைத்தார். அப்போது நான் அடா இதென்ன ஆகாத்தியமாயிருக்கிறது? நாமோ மிகுந்த பசியாயிருக் கின்றமையை முன்னமே தெரிவித்திருக்கிறோம்· இம்மனிதன் நம்மோடு எல்லா ஞானங்களையும் பேசி விட்டு நம்மைக் கூப்பிடாமற் தான் ஒன்றியாக உண்ண ஒருப்பட்டிருக்கிறான். நல்லதிருக்கட்டும். சமயம் முந்துவதற்குள் ஏதேனுஞ் சைகை காட்ட வேண்டுமென்று எண்ணி 'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாகா-மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று' 'மருந்தேயாயினும் விருந்தோடுண்' என்னும் வாக்கியங்களை அவர் காதில் விழும்படி சொல்லி

'மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை-தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்'

என இருத்தலின், என் பசிவேதையால் அவ்வாறு பிதற்றும்படி நேரிட்டது. இவைகளைக் கேட்ட அவர் பொட்டென எழுந்து, மற்றும்பல இலைகளைப் பறித்து வந்து, பெரிதாய் ஓர் இலை தைத்து, என்னை வெகு உப சாரமாய் அழைத்துத், தம்மோடொக்கவைத்து, என் முன் இலையைப்போட்டு, அதில் ஒரு சாதத்தை வைத் துத் 'தினைத்துணை நன்றி செயினும்பனைத்துணையாக்-கொள்வர் பயன்றெரிவார்' எனவும் 'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்-ஞாலத்தின் மாணப் பெரிது' எனவுங் கூறிச் 'செல்விருந்தோம்பி வரு விருந்துபார்த்திருப்பான்-நல்விருந்து வானத்தவர்க்கு' என்பதைக் குறிப்பித்து, ஒருபிடிசாதத்தை எடுத்துத் தம்முன்னின்று பார்த்துக் கத்திக்கொண்டிருந்த காக் கைக்கு வைத்துப் பாதிச் சாதத்தை உண்டு மற்றப்

பாதியை முடிந்துகொண்டார். அதுகண்டு நான் பெருத்த நாணங்கொண்டு, பேசவாயின்றித் தலை கவிழ்ந்து, காகத்ினும் நாம் கடையாயினேமென்று கருதி வாளாவிருந்தேன். அவர் ' ஆ ஆ இப்போது தான் இவன் செருக்கடங்கிற்றென்று தம்முள் நினைத்து, ' ஐயா ஓர் ஊரில் ஒருகிழவி விடியற்காலையிற் தன்னிடத்துள்ள கோழி கூவினவுடனே எழுந்து கரைத்துச்சித்தப்படுத்தியிருக்கும் மாப்பானை அடுப்பு முதலியவைகளை எடுத்துக்கொண்டு, அவ்வூர்க்கு வெளிப்புறத்து வழிக்கடையிலிருந்து, தோசைசுட்டுவிற்க, ஆடவர்கள் அவளிடத்துச் சுருட்டுக்கு நெருப்புவாங்கிப் பற்றவைத்துக்கொண்டு போகிறவழக்கப்படி, ஒரு நாள் ஒருவன் வந்து நெருப்பு விரைவிற் கொடாதவிஷயமாய் அவளுடன் சண்டையிடவே, அதற்காக அக்கிழவி கோபித்துச் செருக்கி, அப்படியாசெய்தி !! இவ்வூரில் என்கோழி கூவியல்லவோ பொழுது விடிகிறது ? இனி எப்படிக் கூவும் ? இவர்கள் எப்படி என்னிடம் நெருப்புக்கு வருவார்கள் ? நல்லது இவர்கள் கர்வத்தை அடக்குகிறேன் என்று எண்ணி அன்றிரவே கோழியுடன் வேறோர் கிராமத்திற் போயிருந்து மறுநாள் முன்னிருந்தவூரிலிருந்து வரும் பிரயாணிகளைக் கண்டு, அவ்வூரிற் பொழுது விடிந்ததா என்று கேட்டது போல நீர் என்னையன்றி இப்பிரபஞ்சமில்லையென்று பேசுகிறீரே. உமக்கு இவ்வளவு அவசரம் எப்படி வந்தது ? உம்மைவிட்டு நான் உண்பேனோ ? உம்முடைய விவேகத்தைப் பரிசோதிக்க வேண்டுமென்றல்லவோ நான் அங்ஙனஞ்செய்தேன். இனி மேல் நீர் கற்ற புன்கல்விகொண்டு பெரியோரைப்

பொருள்செய்யாமல் வன்கண்மைபேசி வாயோய்ந்து போகாதீர். ‘கற்றது கைம்மண்ணளவு கல்லாதுல களவு’ என நினைத்துத் ‘தம்மினுங்-கற்ருரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்-எற்றேயிவர்க்கு நாமென்று’ என்னுங்கருத்தைக் கடைபிடிக்கக் கடவீர், இதோ இந்தச் சாதத்தையுண்ணுமென்று மீந்த பாதிக்கட்டமுதைஈந்து அவர் செல்வுழிச் சென்றனர். பின் யான் குறித்துப்போன பிரசங்கியாராகிய மாசிலாமணித் தேசிகரைக்கண்டு சாஷ்டாங்க வந்தனஞ் செய்து, ‘குலனரு டெய்வங்கொள்கை மேன்மை-கலை பயிறெளிவு கட்டுரை வன்மை - நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்-உலகியலறிவோ டுயர்குணமினை யவும்’ அமைநூலுரை போதக ஆசிரியரே எனப் புகழ்ந்து வித்தியாதானம் அருள விஞ்ஞாபனஞ் செய்துகொண்டேன். அவர் தம் திருவுளமிரங்கி, அன்றுமுதற் தம்மாணுக்கருடன் சேர்த்து இலக்கிய இலக்கணங்களைக் கற்பித்து, உண்டியுங்கொடுத்துப் பரிபாலித்து வந்தனர். அக்காலையிற் ‘கண்டதுகற்கப் பண்டிதன்ஆவான்’ என்பதையுன்னிப் பல இலக்கியங்களைக் கற்றேனேயன்றி இலக்கணங்களைக் கற்றிலேன். இலக்கணமென்ருல் எனக்கு அலக்கணுயிருந்தது. ‘பொழுதொடுசென்று வழிபடன் முனியான்-குணத்தொடுபழகி யவன்குறுப்பிற்சார்ந் - திருவென விருந்து சொல்லெனச்சொல்லிப்-பருகுவ னன்ன ஆர்வத்தனுகிச்-சித்திரப்பாவையி னத்தகவடங்கிச்-செவி வாயாக நெஞ்சுகளனுகக் - கேட்டவைகேட்டவை விடாதுளத்தமைத்துப் - போவெனப்போதல்’ ஆகிய நன்மாணுக்கரது கோட்பாட்டையும், அவ்விலக்கணச் சுவையையும் அறியாது, பாடப்

படிக்கப் பிரசங்கிக்க ஒருவாறுபயின்றேன். பயின்று மென்ன? அதனாற் பலரிடத்துஞ் சொற்சோர்வு பட்டேன். 'எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும் - எழுத்தறிவார்க் காணிநிலையாம்' என்பதன்பொருட்டு இலக்கியமானேன். அதனால் எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணியென்னும் ஐந் திலக்கணங்களுள், யாப்பியலை வெகு பிரயாசை யெடுத்துக்கொண்டு சிறிது கற்றேன். அதாவது, வெண்பா, அகவல் கலிப்பா வஞ்சிப்பா என்னும் வேறுபாடும் இனமும் அவ்வெண்பாவிற்குத் தளை விரித்தலுமாகிய விஷயமே. இவ்வளவுதான் கற்றுந், 'கற்பனை அலங்காரமாக்கோவை பாடினுங் கனவரிசை யொருபச்சடங், கலம்பகங் கூறிலொரு துப்பட்டி பிள்ளைக் கவிக்கென்னி லொரு சோமனும் பொருவுலாவென்னி லுருமாலை மடலுக்கு நாணைய மதாயொரு பணம், நல்வண்ணமென்னிலொரு சாப் பாடு மாலையெனில் நன்மை பெறு தாம்பூலமாம்- அற்புதம் பெறுகவிக ளென்னிற் பளா பளா அதிக வெகுமானமாகும், அப்படியுமாயிரத் தொருவரென்று லெங்களருமையெவர் அறிவர்கண்டாய்' என்று கூறி யவர்காலத்துக்குப் பிற்காலமாகிய இக்காலத்திற் கொழுந்தமிழ் அருமையறிந்து கொடுப்பவர் அருமை யென்பது தெரியர்தவனாய்க், கொள்ளை கொள்ளை யாய்க் கவிபாடி வெள்ளம் வெள்ளமாய்ப் பொருள் சம்பாதித்துக் கொள்ளலா மென்னும் பேரவாவினாற் றான் இங்ஙனங் குறைக் கல்விகற்று, நிறைகல்வி யுடையவனைப்போல நினைத்துக்கொண்டு, குறைகுட மொக்கக் கூத்தாடிக், கூடிப்பயிலும் வித்தியார்த்திக ளோடு குதர்க்கம்பேசி, அடலேறனைய செருக்கில்

ஆழ்ந்து கழகத்தை விட்டுக்கண்ட கண்ட விடங்க ளிற் போய்ப் பண்டிதத் திறைமைகாட்டி, வெள் ளறி வுடையோன்மேல் வெள்ளைக்கவியும், வேசரி யொத்தவன்பாற் சென்று ஆசிரியமும், கலிப்பால ரைச்சுட்டிக் கலிப்பாவும், வஞ்சப் பாவிகளைக் கிட்டி வஞ்சிப்பாவும், அன்னோர் இனத்தினரை வேண்டி அப்பாக்களின் இனங்களாகிய தாழிசை துறை விருத்தங்களுங் கூறி, ஊர்தோறுந் திரிந்து, வருந்திப் பிச்சையெடுத்து, இலச்சைவிடுத்துக், கொச்சை யாகத் தங்களிடஞ் சேர்ந்தேன். சேர்ந்ததுமுதல் இதுவரையிற் தாங்களிட்ட லிகிதவேலைகளைக் குறை வறச் செய்து சுகித்தேன். இது என்விருத்தாந்தம். என்னை மன்னிக்கவேண்டும் என்று கூறி முடித்தார்.

"பின் வீரபத்திரர் என்பவர் சிறிது முறுவலித்து, என் தாயைப் பார்த்து, அம்மா தங்களுக்குக் குழந் தையே இல்லையெனக் கேள்விப் பட்டிருந்தேன். ஆகவே இவ்வாண்குழவி யாருடையது எனக்கேட்க, என் தாய் அதன் கதையாவும் எடுத்துச்சொன்னாள். அக்கதையைக் கேட்டு, அவர், துணுக்குற்று, மனம் பதைத்து 'ஐயோ! அந்தச் சண்டாளனா இப்படிச் செய்தான்? எனக்கு அப்போது தெரியாமற் போயிற்றே! என் செய்வேன், தெரிந்திருக்கு மானால் அச்செகந்நாதத்திலேயே அவனுக்குத் தகுந்த புத்தி கற்பித்திருப்பேனே! ஆயினும் தெய்வம் அவனைப் படாதபாடெல்லாம் படுத்திப் பரதேசி யாக்கி விட்டது என, என் தாய் அவன் எவ்வாறு ஆயினான் சங்கதி யென்ன? சொல்லுங்கள் ஐயா எனச் சொல்லலுற்றனர்.

"அம்மா 'தீவினைசெய்தார் கெடுதல் நிழல்

தன்னை-வீயாதடியுறைந்தற்று' என்னுந் தெய்வ வாக்கு வீண்போமா? 'கெடுவான் கேடு நினைப்பான்' எனவும் இருக்கின்றதே. 'அக் கொடும் பாவி குடும்பத்தைக் குலைத்த மறுவருடமே, குடிக்கக் கஞ்சியும் உடுக்கக் கூறையுமின்றி, வீதிதோறுந் திரிந்து வேதனையடைந்தமையை என் கண்ணாரக் கண்டேன். 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்னும் மொழிப் பொருளறியாத முழுமூடனாகையால், அவ்வாறு செய்ய முயன்றனன். 'ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்தான் புக்கழுந்து மளறு' 'எளிதெனவில்லிறப்பா னெய்துமெஞ்ஞான்றும்-விளியாது நிற்கும்பழி' என்னும் பொய்யா மொழிகட்கு அவன்கரியானான். நான் மரக்கலத்தினின்று உங்கட்குத் திடங்கூறி விட்டு, என்சரக்குகளோடு ஜெகந்நாதத்திலிறங்கி, என்னிருப்பிடஞ் சேர்ந்த மூன்றுநாள், அத்துரோகி எளிய முகத்தைக் காட்டிக்கொண்டு, என்னை வந்து அடுத்துத், தனக்கு ஏதேனும் ஒரு கூலிவேலை கொடுக்கவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். என் மளிகையில் அப்போது ஓர் ஆள்வேண்டியிருந்ததினால், அவன் சரித்திரத்தை நன்றாய் விசாரியாமல், என் வேலைக்கு அமர்த்திக்கொண்டேன். பின் அவன் விருத்தாந்தம் ஒருவாறு அவனைக் கேட்டே உணர்ந்தேன். அஃது என்னெனில் :—அவன் மயிலைநகரிற் பிறந்து, வாலிபத்திற் கல்வி கல்லாது துர்மார்க்கச் சிறுவர்களுடன் கூடித் தூர்த்தனாய்த் திரிந்து, தாய் தந்தையர் காலஞ் சென்றபின், தன் தாய் மாமன்வீட்டிற்சேர்ந்து, நெடுமரம்போல் வளர்ந்து வருகையில், அம்மான் தன் சம்சாரசகிதமாய் வேற்றூர் போகும்போது, உடன்

செல்லாது ஓடி ஒளித்துப், பின் வீடுதோறுங் கைப் பாடுபட்டுக் காலங்கழித்துக் கடிமணஞ் செய்யக் கையிற்பொருளில்லாமையாற், கன்னிகை யொருத்தியை வைத்துக்கொண்டு அங்கு வாழ்க்கையிற், வெறுப்பு நேர்ந்தமையாற், கப்பலேறி இவ்விடத்திற் பிழைக்கலா மென்று அவளுடன் வந்து மூன்று தின மாயிற்றென்று சொன்னது தான் இங்ஙனம் கூறியதை ஒருவாறு நான் பராமுகமாய்க் கேட்டு அவன் வேலையிற் பிரவேசித்து வருநாளில், ஒருநாள் அடுத்த வீதியில் ஒரு பிரபுவின் வீட்டில் நடந்த நகைத்திருட்டில் இவன் சம்பந்தப்பட்டுத் திருடினது உண்மையென ஒப்புக்கொண்டமையால் ஆறுமாதஞ் சிக்ஷையடைந்து, சிறைச்சாலையடையவே, மனைவி வேறொருவரிடஞ் சேர்ந்தாள். சிறைச்சாலை நீங்கிவந்து, மனையாளை வைத்திருந்த அம்மாற்றானோடு சண்டையிட்டு, மண்டயுடைய, எதிரி தாக்கின அடிபட்டதினால் ஒரு கண்ணும் ஒரு கையும் இழந்து கடைவீதிதோறுங் காசுப்பிச்சையெடுத்து அந்த ஜெகந்நாதத்தில் திரிகின்றான். யான் அவ்விடம் விட்டு இங்குவந்து பதினைந்து தினமாயிற்று. தம்முடைய கணவராகிய என் நண்பர் காலஞ்சென்றமையைக் கேட்க எனக்கு மிகுந்த கிலேசம் உண்டாகின்றது. அந்தோ! என் மனதிற்கு உகந்த நேசனைப் பிரிந்து மறுபடியுங் காணாத வறியனானேனே. அன்பன் பிரிவும் பார்யாவியோகமும் உடைய மனம் ஆழித்துரும்புபோல அலையும், அவரோ அல்லிமலர்ச்செல்வி மார்பனது அன்பராகிய பொய்கையார் பிறந்த தலத்திற் பிறந்தவர். யானோ வெள்ளொலும்பதனை மெல்லியலாகச் செய்யப்பட்ட க்ஷேத்திரத்தில் ஜென்மித்

தேன். அவை ஒன்றுக் கொன்று அணித்தாக உள்ள திருவல்லிக்கேணி எனவும் மயிலை எனவும் பெயர் பூண்டவை. இவை

'வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழவளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து,'

என்றவாறு தெளிந்த நீரையுடைய வயல்வளமுங் கல்வி கேள்விகள் நிரம்பிய சான்றோர் பெருக்கமும் உடையதாய்,

'மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழங்கு—பார்க்குளுயர்
தெற்குப் பிணாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு,'

என்னும் எல்லையைக் கொண்டு விளங்குந் தொண்டை நாட்டின் கண் உள்ளன. கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூக்கள் நிரை நிரையாகப்பூத்து, தண்டுளித்தேனை வண்டுகட்கு அருத்தி, எண்டிசாமுகமுஞ் சென்றுற, மகரந்தத்தையும் மணத்தையும் வீசும் விண்டவழ்சோலை சூழ்ந்த அந்தத் திருவல்லிக்கேணியில் உமது நாயகரோடு ஒரு கல்விச்சாலையிற் கலை பயின்று கலந்த நண்பு இம்முதுமைப் பருவத்தில் உதவாமற்போயிற்றன்றோ ? அவர் இளமையில் தேக தாருட்டியமுந் தைரியமும் உள்ளவராயிருந்தமை பற்றி இராணுவவகுப்பிற் சேர இடம் பெற்றார். யான் அவ்வாறின்றி பொருள் வைத்திருந்தமையால் வர்த்தகத்திற் பிரவேசிக்க நேர்ந்தது. வித்தியா பிராயத்தில் ஏறக்குறைய இருவருஞ் சமமாகவே இருந்தோம். சென்னையை விட்டுக் கலம் ஏறும் அக்

காலத்தில், அவரை யான் சந்தித்துச் சம்பாஷிக்கும் போது, அவர் இருவிழிகளிலும் நீர்ததும்ப என்மனம் வெதும்பிற்றே! என் செய்வேன்! இத்தன்மையான உள்ளன்புடையோரை இத்தரையின்கண் என்று காண்பேன்? என்று துக்கித்துத் தம் தோழருடன் சென்றார்.

"அன்று முதற் தினமானம் அவர் எங்கள் க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொண்டு போவார். இங்ஙனம் நிகழ்கையில், எனக்கு என் ஜென்மதேசமாகிய நாகப்பூர்க்குப் போய், இன்றியமையா இருமுதுமக்களையுங் கண்டு களித்து, அவர்கள் கவலையையும் என் ஆற்றாமையையுந்தீர்த்துக்கொள்ளலாமென்னும் அவா மேலிட்டிருந்தமையை, மெல்ல என் அன்னைக்குக் குறிப்பித்தேன், அவள் மறுநாள் வந்த வீரபத்திரருடன் சொல்ல, அவர் எங்கள் சொத்துக்கள் பல வழியாக இருந்தமையால்அவைகளை ஒருங்கு சேர்த்து எங்கள் வசஞ் சேர்த்து, என் அன்னைக்கு நடக்கும் உபகாரச் சம்பளத்தை நாகப்பூரிற் கொடுக்கும்படி பேசித் தகுந்த ஏற்பாடுசெய்து, போவதற்கு வண்டி ஒன்று பேசி நல்ல துணைகளைச் சேர்த்துஅனுப்பி விட்டார். 2-ம் மாதம் வெகு பிரயாசைப்பட்டு நாகப்பூர் சுகமே வந்து சேர்ந்தோம். பெற்றோர் நினைப்பு என் பிடரியைப் பிடித்துந்த அடைந்து, சேர்ந்த அன்றே வேலப்பன் சொன்ன அடையாளப்படி வீதிப்பெயரையும்என் தந்தை பெயரையுஞ்சொல்லி விசாரித்தபோது சிலர் வீதி சுட்டிக் கூறினரெயன்றி வேறொன்றுஞ் சொல்லவில்லை. சிலர் வீதிகூட அறியோமென்றனர். வழியிற்சென்ற வயோதிகர் ஒருவரைக்கண்டு விசாரிக்கவே அவர், முன் என் தந்தையோடு தாம்

நேசித்திருந்தவர் என்றுந் தம் வர்த்தகத்தில் நஷ்டம் வர அதனால் ஏழைமைப்பட்டுப் பல பிணிகள் சம்பவித்ததினால் இறந்தனர் என்றும், என் தாய் என்னைப் பிரிந்தபின் ஏக்கம் பிடித்திருந்து ஏழாம் மாதம் ஓர் ஆண் குழந்தையைப் பிரசவிக்கச் சன்னி கண்டு இவ்வுலகத்தைத் துறந்தனள் என்றும், பிறந்த அன்றே அவ்வாண் குழந்தையின் ஆவி போனதென்றும், என் தந்தையின் வீட்டைக் கடன்காரனொருவன் கைக்கொண்டான் என்றும், அது இவ்வீடுதானென்றுங் கூறிச் சென்றார். இவைகளைக் கேட்டபின் என்கதி என்னவிதமாய் இருந்திருக்கலாமென்பது சொல்லவேண்டுமா? சொல்லிற் பொன்மானைத் தொடர்ந்துபோன இராமன் மீண்டு வந்து பர்ணசாலையில் தன் தேவி இல்லாமையைக் கண்டவாறு ஆயிற்று. என் தாய் என்னை நோக்கவும் நான் அவளை நோக்கவும் துக்கம் மேலிட்டு வருத்தியது. அதை ஆற்றுவார் ஒருவரும் அண்டையில் இல்லாமையால் நாங்களே ஒருவாறு ஆறித் தேறினோம். இதற்குள் அவ்வீட்டிலிருந்து ஒருவர் வெளியில் வந்து, நாங்கள் ஏறியிருந்த வண்டியினருகு அணுகிப்பார்த்து, எங்களை விசாரித்து மிகப் பரிதபித்து, 'இவ்வீட்டில் நீங்கள் சிலநாள் வசித்துப் பின் உங்கள் சுதேசம் போகலாம்' எனப் பரிந்து கேட்டுக்கொள்ளவே, நாங்கள் அக்காலத்தில் அவ்விடத்தில் ஆதரிப்பார் ஒருவரும் இன்றிக் கொழு கொம்பில்லாக் கொடிபோல் இருந்தமையாலும், வேறிடத்திற்குச் செல்ல வழியறியாதிருந்தமை

யாலும், பங்காளத்திலிருந்து புறப்படுமுன் இங்குள்ள யார்க்கேனும் வீரபத்திரனுற் கடித மெழுது வித்துப் பதில் பெற்றபின் புறப்படாத குற்றம் நம்முடையதேயென மனதில் எண்ணி, அவர் சொற்படி அவ்வீட்டில் ஒரு சிறு அறை கொடுக்கப் பெற்று இரண்டு மூன்று நாள் தங்கி யிருந்தோம். பின் அவ்வீட்டு யஜமான் மிகுந்த தயை தாக்ஷணியம் உடையவராயும், இச்சென்னையில் உள்ள சில பெரிய மனுஷருக்கு நண்பராயும் இருந்தமையால், அவரிடத்துத் தங்களைத் தற்காலம் ஆதரித்துவரும் வரதராஜருக்கு ஓர் கடிதமும் ஒரு வாடகை வண்டியும் பெற்று நாலாம் நாள் புறப்பட்டோம். எங்களுக்குத் துணைவண்டிகளுங் கூடப்புறப்பட்டன. இவ்வளவு உதவி செய்த அக்கனவான் பெயர் தீன சகாயர். இவர் என் தந்தையின் கடன்காரனிடத்து அவ்வீட்டை விலைக்கு வாங்கிக்கொண்டவரென அவரால் கேள்விப்பட்டோம். எங்கள் சரித்திரத்தைக் கேட்டு மிகுந்த துக்காக்கிராந்தராயினர். அவர் தம் பெயர்க்கேற்றபடி எங்களுக்கு மிகுந்த சகாயஞ் செய்தார். இவர் இவ்வளவு செய்யாமற் போனுல் நாங்கள் அன்று படும் பாடு அளவுடைத் தன்று. கடவுள் அருளால் ஒரு மாதத்தில் இச் சென்னை வந்து சேர்ந்து, மேற்படி வரதராஜர் அனுமதியால் இவ்வீட்டை விலைக்கு வாங்கிக்கொண்டு வசிக்கிறோம். மூன்று வருஷத்திற்குமுன், என் தாய்க்கு நெடுநாளா யிருந்த சுவாசகாசஞ் சற்று அதிகரித்ததனுல் அவள், தான் சாகுமுன் இந்த

என் தம்பிக்கு விவாகஞ் செய்து பார்க்க வேண்டு மென்னும் அவா மேலிட்டுத் தன் தாய்வழியில் விசாரித்து ஒரு சிறுபெண்ணை (ருதுவாகாத மாதை) விவாகஞ் செய்வித்தாள். செய்த மறு வருடம் என் தாய் தேகவியோகமானாள். அதற்கு மூன்றாம் மாதம் அப்பெண் அம்மை கண்டு இம்மையைவிட்டு ஒழிந்தாள். என்ன செய்வோம்? அதுவரையில் எங்கள் கையில் மீந்த சொத்து, நகை வகையில் ரூபா 200 தான். ரொக்கத்தில் 5000-ம் ஆம். இப்படி நேரிட்டதைக் கண்டு யான் இருந்த நகை களையெல்லாம் விற்று ரொக்கமாக்கிக்கொண்டு, என்னிடத்தில் வந்து கேட்கும் ஏழைகட்கு ஆதா ரத்தின் மேல் கடன் கொடுத்துத் தரும வட்டி பெற்று ஜீவித்து வருகிறோம். "வட்டியாசை முத லைக் கெடுத்தது என்பது எனக்கு நன்றாய்த் தெரியு மாதலால் அதிக வட்டி பெற்றுக் கெட்டுப்போகும் பழி பாவங்களுக்கு அஞ்சாத நெஞ்சரைப்போல் நடந்திலன். இதுதான் என் சரித்திரம்" என்று கூறி முடித்தனன்.

அப்போது இவைகளை யெல்லாம் பிரமையுடன் கேட்டுக்கொண்டிருந்த பெரியவராகிய என் தந்தை முகம் வாடி, அகங் குன்றிப், பெருமூச்சு விட்டுத் தேகந் தம்பித்திருந்து, சற்றுப்பொறுத்து எழுந்து, ஆ என் மகனே! என்றோர் சத்தமிட்டு வந்து என்னை ஆலிங்கனஞ் செய்துகொள்ளவே, நான் மிகப் பிரமித்து, உடல் புளகித்து, உள்ளங்

கரைந்து விம்மி அழுது, சற்றுத் தேறி, அவரை ஆசனத்தி லிருத்தி, ஐயா தாங்கள் இளித்துயரொழிக. அயர்வொழிக. நம்முடைய உயிர் வாழ்க்கை இவ்வாறாயினதற்கு இனி என் செய்யக் கடவேம்? இத்தன்மையதென என் தமக்கை இதுகாறும் எனக்கு மொழிந்திலள். மொழியினும் உண்மையெனக் கொண்டு ஒழுகாத இளமையுந் துன்மார்க்கமுமுடையேனாய் வர்த்திப்பேனே. இக் கொடும் பாவியாகிய யான் பிறந்தபின் வாழைக் குலைபோலத் தாயைக் கொன்றேன். தங்களையோ தரணி வலம் வரச் செய்தேன். தாய் தந்தைகளுக்கோ சத்துரு ஆனேன்! ஐயோ, என் கொடுமை இருந்தவாறு என்ன என்ன! தாய் ஆர், தகப்பன் ஆர் என விசாரிக்கும் விவேகம் இது வரையிலும் இல்லாமல், உண்டுடுத்தி ஊரேறுபோல ஊரெங்குந் திரிந்துழன்றேன். புஸ்தகம் அஸ்த பூஷணம் எனக் கையிற் புத்தகமேந்திக் கழகத்துக் குப்போய்க் கல்வி கல்லாது, காலத்தை வீணிற் கழித்துக் கசடரைக் கலந்தேன். மேய்கிற மாட்டை நக்குகிறமாடு கெடுத்ததுபோலக் கவனித்து கற்கும் மாணாக்கரையுங் கெடுத்தேன். டம்பாசாரமே நிரம் பக்கற்றேன். அதனாலேயே பொருளெல்லாம் அத மாயின. அம்மங்கையர்க்கரசியே என் மாதாவாகவும், இக்கன்னியம்மாளையே என் தமக்கையாகவும் யான் எண்ணி யிருந்ததற்கேற்க, அவர்களும் என்னைப் பேதமாக எண்ணாமல் இதுவரையிலும் வளர்க்க, நான் வளர்ந்து பொம்மைபோன்றிருக்

தேன். சாதுக்கள்சங்கம் எனக்கு மாதுக்கமானது. பேதையர் கூட்டம் வேதைவிளைக்கநேர்ந்தது. அளவுப்பொன்னைச் செலவழிப்பித்து, அறியாத இளம் பெண்ணை வரித்து அவலமானேன். இங்ஙனம் என் தனமதம் ஒடுங்கி வரவே என் மதமும் ஒடுங்கி வருகின்றது. "மகன்றந்தைக்காற்று முதவி யிவன்றந்தை—என்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்" என்பதன் பொருளைத் தங்கட்கு யான் தேடிவைக்காமல் இகழ்ச்சியை ஈட்டி வைத்தேனே! பெரியோர் சொற்புத்தியைக்கேளாது தன் புத்தியை மேலாக்கின மூர்க்கனெனவும், மேலோரைத் தாழ்வு செய்து கீழோரை மேன்மைசெய்த மூடனெனவுஞ், செய்யாத காரியஞ் செய்யினுந், தான் பிடித்த முயலுக்கு மூன்றேகாலெனப் பிடிவாதஞ்செய்து சாதிக்குந் துஷ்டனெனவுந், திரளான நன்றிசெய்தவர்களுக்குந் தீதுசெய்யுந் தீயபாபியெனவும், ஐயாவெனப் பணிந்திரந்து கேட்கினுங் கோபம் அடங்காத அதிகுரூரன் எனவும், என்னை இவ்வகிலத்தார் எதிரிற் கூறா தொழியினும், இரகசியத்திற் சொல்ல இவ்வுடலெடுத்தேன். மூங்கிலிற் பிறந்த நெருப்பு அம்மூங்கிற்காடு முழுமையுங் கொளுத்தி நாசமாக்குவதுபோல, விஷாக்கினி போன்ற யான், தங்கள் குடிப்பெருமையையும் என் தாய் வம்சத்தகைமையையும் பாழாக்கினேன். முற்றின வேம்பிற்குத் தித்திப்புப் பிறவாததுபோல இனி எனக்குச் சற்குணம் படியுமா? ஐயோ என்னைப்போலும் பெரும் பாவி இவ்வகிலத்தில் எங்குமில்லையே, அநியாயம்!

அநியாயம்!! என் பெரும் பாதகம் ஆர்பா லெடுத் தோதுவேன்.

"ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ - நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலிம்
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ?"

என்றிருத்தலின் எனக்குக் கல்வியறிவு புகட்டக் கூடுமோ? புகட்டினாலும் அதற்குப் பாத்திரனா வேனோ? "களிமடிமானிகாமிகள்வன் பிணிய னேழை பிணக்கன்சினத்தன் - துயில்வோன் மந் தன் றென்னூற்கஞ்சித் - தடுமாறுளத்தன்றறுக ணன்பாவி - படிறனின்னோர்க்குப் பகரார்நூலே" என்றிருக்கிறதே! மேலுஞ், "சாலப்பகையெனக் குத் தந்தைதாயே பலநூல் - ஏலப்பயிற்றாதிருந்தி னால்" என்னும் அநீதத்தைப் பிறர் கூற வைத்து, வாலறிவின் மிக்குணர்வார்பால் அக்கூட்டத்திற் கொக்குக் குனிந்து இருப்பதுபோல நான் இருப்ப தில் என்ன பயன்? வண்டானது வெளியில் வரா மலே உள்ளே யிருக்குந் தாழம்பூ அரும்பையும் வாசனையினால் அறிவதுபோலத் தாங்கள் அக்கடற் கரையினின்று வேடிக்கை பார்த்துக் காலங் கழித்த அவை அறிவீனத்தைக்கண்டு, சில நவீனவறிவைப் புகட்டினீர்கள். அவை புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்போல அக்கணமே என்னை விட் டுப்போயின. சாதாரண மனுஷ்யர்கள் தாங்கள் அறிய நடந்த சங்கதிகளை மாத்திரம் சொல்ல வல்ல ராவர்; பெரியோர்கள் நடக்கப்போகிற சங்கதியைக்

கூடச் சொல்ல வல்லராவார். ஆதலால், அவர்கள் மனங்கோணமல் நடந்து அநுக்கிரகம் பெறவேண்டு மெனச் சாஸ்திர மிருக்கின்றதனல், இனி யான் தாங்கள் அருளிய திருமொழியை வினவி நடப்பதே கருமமெனத் துணிந்துள்ளேன். இத்துணிபுமாத்தி ரம் என்வயின் நிலைநிற்குமேற் கிருதார்த்தனகத் தடையின்று. "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்பது கேள்விப்பட்டிருக்கிறேன். தயை செய்ய வேண்டுகிறேன் என்று தழுதழுப்ப மொழிந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து நின்றேன்.

அப்போது என் தந்தையார், தம் இரு விழிகளி னின்று நீர் வார, அதைத் துடைத்துக்கொண்டு, என் தமக்கையை நோக்கி, அம்மா! உத்தம குணத் தில் ஒப்புயர்வில்லாத சுத்தமான சற்புத்திரியே! நீ நீடூழி வாழ்க. நினைந்தவண்ணம் நிறைவேறுக. சம்பத்தும் விபத்துங் கூடவே நிகழ்வது யாரும் அறிந்ததுதானே! "இடுக்கண் வருங்கால் நகுக அதனை-யடுத்தூர்வதஃதொப்பதில்" என இருக்கி னும், அநேகர் இன்பம் அணுகிய காலத்து மகிழ்ந் தும் துன்பமுற்றவேளையிற் துக்கித்துங் காலங்கழிக் கிறார்கள். நாமும் அங்ஙனமே. அவ்வின்பதுன்பங் களோ ஒருவழி நில்லா. "நன்றாங்கானல்லவாக் காண்பவரன்றாங்கா-லல்லற்படுவதெவன்" "வகுத் தான் வகுத்தவகை யல்லாற்கோடி-தொகுத்தார்க் குந் துய்த்தலரிது" என்று திருவள்ளுவ நாயனர் கூறினரன்றே? என்செயற்பாற்று? எடுத்த தேகம் இன்பத்தின் நலனை யுண்ண இறங்கும். துன்பத்

தைக்காணிற் றூரநிற்கும். இது சீவர்கட்கெல்லாம் இயல்பு. ஆயினும், பகுத்தறிவுள்ளவர்கள் துன்ப மீதூரும்போது துயராதிருப்பது நலம். துயரின் அது மேன்மேல் வளரும். அதனால் அளவற்ற நோய்கள் அதிகரிக்கும். அதிகரிக்கவே ஆயுளுக்கு அறுதி அணுகும். இதனைப் பெறுதற்கா இவ்வுடலெடுத்தோம்? அன்றே! புருஷார்த்தம் பெறுதற்கென முன்னே கூறியுள்ளேன். ஆதலின் பொறையினால் அவ்வுறுதியைத் தேடச் செய்யல் வேண்டும் என்பது உறுதி. எல்லா உயிர்க்கும் இறுதி என்றும் உள்ளது. ஆயினும் இடையில் நாம் அதனை ஏற்பது தருமமன்று. இவற்றை யெல்லாம் நீ முன்னரே உணர்ந்ததினால் இதுகாறும் பொறையைப் பொருளாகக் கொண்டு, நிறையை நேர்மையாய் வகித்து, நிர்மலமாய் இருக்கின்றனை. இச்செய்கை விவேகிகட்கு அடுத்தது. இதுகாறும் யான் என் புதல்வன் ஒருவனுண்டென அகங்கனிந்தும், அவன் இலனென எண்ணி ஏங்கியும் உழன்றேன். இன்று அவனும் உளனாய் மற்றொரு புதல்வியும் பெற்றேனென மட்டற்ற மகிழ்வை யுற்றேன். புதல்வி புதல்வர்கள் இலரென்னுங் குறையைப் போக்கிக்கொண்ட எனக்குப் போக போக்கியங்கள் இனி வேறென்ன உண்டு? எனக் கூறி என்னைக் கடைக்கணித்து, அப்பா என் செய்தவந் தந்த தெய்வசகாயம்! நின்னைப் பிரிந்த நாண்முழுதும் நின் பெயர் மறவாமல் இருந்தமையால், அத்தெய்வமே நினக்கும் எனக்குஞ் சகாயமாயிருந்து, நம்மிருவரையுங் காத்து, ஒரு

வரோடொருவர் சந்தித்து இப்போது கண்டு களிக்க வைத்தது. இது மற்றைப் பாக்கியத்தினும் பெரும் பாக்கிய மென எண்ணிக்கொள்வதே உறுதி. நின்னைப் பிரியச் செய்த குற்றம் எனதே. வேறொருவரால் விளைந்த தென எண்ணுவது தவறு. நின்னால் நின் தாய் மாண்டாள் என நினையற்க. யானும் அவள் போல மரித்தவனேயாம். "தந்தைமகற் காற்று முதவி யவையத்து முந்தியிருப்பச்செயல்" என்னுந் திருவாக்கின்படி உனக்குச் செய்யப்பாத்திரனல்லேனாய்ப் பிரிந்து இப்பயனற்ற சரீரச் சுமையைச் சுமந்து பாழ்த்துழன்றேன் அல்லவோ? தந்தை மரிக்கில் தனயனுக்குக் கல்விபோம், எனல் சத்தியம். தொடங்குங்காற் றுன்பமாய்க் காணப்படும் எக்கல்வியேனும் நாள்தோறும் நன்கு முயற்சியாய்க் கற்பானாயின், பயன் பெறுதொழியான். முதிர்ந்த வயதில் கீர்த்தி பெற்றவர்கள் அநேகருண்டு. "முயற்சி திருவினை யாக்கும் என்பது பொய்யல்ல, "இளமையிற் கல்" என்னும் விதியினை நினைவது தகுமா? யானோ சற்றுக் கற்றுத்தேர்ந்தது உன்னையொத்த பருவத்திலென்றறி: வித்தை யென்பதற்குப் பொருள் பெரிய விசாரஞ் செய்வதே. கல்வி யென்பது அநேக சாஸ்திரங் கற்றல். இக்கற்றலே போதுமான தன்று. இதனுடன் ஞானியாகவுமாதல் வேண்டும். ஞான மில்லாத கல்வி ஊனமுறும். இவ்விரண்டுங் கிட்டி, ஈன விஷயத்திற் பிரயோகியாது மேம்பாட்டில் உய்ப்பது உத்தமர் செயல். இக்கடமைகட்கு இனி யான் அருகனல்லே

னென்று ஏங்குவது தகுதியன்று. கலங்கா நிலையைக் கைவிடாதே தூய சிந்தனையுந், தேர்ந்த அறிவுஞ், சிறந்த கல்வியும், உயர்ந்த செல்வமும், ஞானமும் உதவும். "ஊக்கமது கைவிடேல்" என்றது என்னத்திற்கு? மனக்கலக்கமுள்ள ஒருவனுக்கு அனைத்தெவையுந் துலக்க முறத்தோன்றா அன்றோ? மன நிலையானது, உழலுநிலை உறக்கநிலை இருமை நிலை ஒருவழிநிலை தன்னிலை என ஐவகைத்தென்பர் ஆன்றோர். ஆகையால் நீ இனி நின்மனதை ஸ்திரப் படுத்திக், கல்வித் துறைகளிலிறங்கல் வேண்டும், "தொட்டனைத் தூறுமணற்கேணி மாந்தர்க்குக்-கற்றனைத் தூறுமறிவு" என்பது பொய்யாமொழியார் திருவாக்கன்றோ? கடந்த காரியங்களைக் கருத்தில் வைத்துக் கவல்வது தகாது. இனிச் சுகம்வரற்பாலதாகிய முயற்சியைத் தொடருதல் நலம் என வற்புறுத்தி அன்று முதல் எனக்கு வித்தியாபோதனை செய்து வந்தார்.

நானுங் கல்வியிற்றளராத ஊக்க முடையவனாகக் கற்று நன்னிலையை அடைந்து இவ்வுலகிலே இன்றுவரை இனிது வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எனது விநோத சரித்திரத்தைப் படித்த நீங்கள் அனைவரும் நல் வாழ்வு பெற்று இனிது வாழ்வீர்களாக.

சுபம்!

# தமிழ்ப்பெருந் தொண்டு

அன்புடையீர்,

கீழ்க்காணும் சங்க இலக்கிய நூல்கள் சமீபத்தில் வெளிவருகின்றன. அவை யாவருக்கும் விளங்கும் இனிய எளிய தமிழ் நடையில் எழுதப் பட்டிருக்கின்றன. முற்பணம் அனுப்புவோருக்குப் பிரதிகள் தபாற் கட்டண மின்றி அனுப்பப் பெறும். பிரதிகள் தேவைப்படும் அன்பர்கள் எழுதித் தமது பெயர்களைத் தெரிவிப்பின் வெளியானதும் பிரதிகள் அவர்கள் விலாசத்துக்கு வி. பி. பி. யில் அனுப்பப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. கலித்தொகை வசனம் | 1 | 8 | 0 |
| 2. குறுந்தொகை வசனம் | 0 | 12 | 0 |
| 3. அகநானூறு வசனம் (ப. 2, 3) | 1 | 12 | 0 |
| 4. அகப்பொருள் ஓவியம் (50) | 0 | 8 | 0 |
| 5. அகப்பொருள் கதை (வசனம்) | 1 | 0 | 0 |
| 6. விநோத சரித்திரம் | 0 | 12 | 0 |

**"ஒற்றுமை" ஆபீஸ்**

**8, வியாசராவ் தெரு :: தியாகராயநகர், மதரஸ்**

யாழ்ப்பாணத்து நவாலியூர்

## ந. சி. கந்தையா பிள்ளை அவர்கள்

எழுதிய நூல்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| தமிழகம் | 2 | 4 | 0 |
| தமிழர் சரித்திரம் | 2 | 0 | 0 |
| பத்துப்பாட்டு வசனம் | 1 | 0 | 0 |
| அகநானூறு வசனம் | 1 | 0 | 0 |
| பதிற்றுப்பத்து வசனம் | 1 | 0 | 0 |
| பரிபாடல் வசனம் | 1 | 0 | 0 |
| புறப்பொருள் விளக்கவசனம் | 1 | 0 | 0 |
| அறிவுரை மாலை | 0 | 10 | 0 |
| அறிவுரைக் கொத்து | 0 | 10 | 0 |
| கலித்தொகை வசனம் | 1 | 8 | 0 |

## ஆர். பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

அவர்கள் எழுதிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| சிலப்பதிகார விளக்கம் | 1 | 8 | 0 |
| சிலப்பதிகாரக்கதை | 0 | 8 | 0 |
| தமிழ்நாட்டு நவமணிகள் | 0 | 8 | 0 |
| ராஜராஜன் (மணி-திருநாவுக்கரசு முதலியார்) | 1 | 8 | 0 |
| சுந்தரர் (தொழூவூர் வேலாயுத முதலியார்) | 0 | 10 | 0 |
| தேம்பாவணி வசனம் | 0 | 8 | 0 |
| விநோத சரித்திரம் | 0 | 12 | 0 |
| புலமை வித்தக போதினி | 1 | 0 | 0 |

## "ஒற்றுமை" ஆபீஸ்

**8, வியாசராவ் தெரு :: தியாகராயநகர், மதராஸ்**